
www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

செப்டம்பர் – 2001
ம.க.இ.க மாதத இதழ்
ரூ 5.00



சிவாஜி கணேசன் :
ஒரு நடிப்பின் கதை



## அண்ணா தி.மு.க.வும்

## அய்யோ தி.மு.க.வும்

படிப்பகம்

www.padippakam.com

# மிட்டாய் மிராசுகள்

பள்ளிக்கூட வாசலில் விற்கும் நாவல் பழத்தைப் புத்தகப் பைக்குள் போட்டுக் கொண்டு, வகுப்பில் டீச்சருக்குத் தெரியாமல் தின்று, பையின் அடியில் படிந்து போன கருநீலக் கறை இன்னும் என் மனதில் அழியாமல் இருக்கிறது. கமர்கட்டைப் பங்குபோட கடித்த கடியில் பல் விழுந்து அதை வானத்துக்குக்காட்டாமல் மண்ணில் புதைத்த நினைவுகள் இன்னும் மறையவில்லை.

கதைபோல விரியும் இந்தச் சம்பவங்கள் ஏதோ ''அந்தக் காலம்'' என்ற கணக்கில் வரக்கூடியது அல்ல. ஒரு பத்து ஆண்டுகளுக்கு முன்பு சிறு நகரம், கிராமங்களில் படித்தவர்களுக்கு, சிறுவர்களுக்கு இந்த அனுபவங்கள் வாய்த்திருக்கலாம்.

'ஜிங்-ஜாக், ஜிங்-ஜாக்'' என்று மரக் கொம்பின் நுனியில் ஒரு பொம்மை கைதட்ட சின்னப் பிள்ளைகள் சுற்றி நின்று கொண்டு ஜவ்வு மிட்டாயால் வாட்ச், மோதிரம் போட்டுக் கொண்டு காட்டி மகிழ்ந்து அதையே கடித்து தின்பதையெல்லாம் இப்போது நீங்கள் பார்க்க முடியாது! அதெல்லாம் பட்டிக்காட்டான் வேலை என்று அருவெறுக்கும் பெற்றோர்களின் அடுத்த தலைமுறையோ, பபுல் கம்மை ஊதி உடைத்து மூக்கு முதல் மூஞ்சி முழுக்க ஒட்டியதைத் திரும்பவும் வழித்து வாயில் போட்டுக் கொள்ளும் நாகரிக உலகத்தின் நவீன 'வாயி'லில் நுழைந்து கொண்டிருக்கிறது.

விளைவு பட்டிக்காட்டான் மிட்டாய்க்கடையை பார்த்தது போய் இப்போது மிட்டாய்க் கடைகள் பட்டிக்காட்டானைப் பார்த்துத் துரத்துகின்றன. புரியவில்லையா? நகரங்கள் மட்டுமின்றி பல கிராமங்களின் பெட்டிக் கடைகளில்கூட இப்போது பன்னாட்டு முதலாளிகளின் மிட்டாய் ரகங்கள் சிறுவர்களை ரவுண்டு கட்டிக் கடிக்கின்றன. கமர்கெட், புளிப்பு மிட்டாய், இலந்தை உருண்டை, கொடுக்காய்ப் புளி, பேரிக்காய் என உள்ளூர் தயாரிப்புகளை ஒரு தட்டில் வைத்துக் கொண்டு, செடி கொடியால் ஈக்களை ஓட்டிக் கொண்டிருந்த பள்ளிக்கூடத்து வாசல் ஆயாவையும் சேர்த்து ஓட்டிவிட்டன நவீன மிட்டாய் ரகங்கள்.

புளிப்பு, உறைப்பு, இனிப்பு என பல்சுவை நிரம்பிய இலந்தை வடை, தேன் மிட்டாய், ஓமம் கலந்த பல்லி மிட்டாய், சத்து மாவு உருண்டை, ரோஜா மார்க் மிட்டாய்கள், கோபுரம் மார்க் கடலை மிட்டாய் என்று வகை வகையான ரகங்களை சிறுவர்களின் கைகளிலிருந்து பிடுங்கிவிட்ட பெரு முதலாளிகளும் பன்னாட்டுக் கம்பெனிகளும், இந்நாட்டு மிட்டாய் தயாரிப்பாளர்களின் கைகளிலிருந்து உள்நாட்டுச் சந்தையையும் பிடுங்கி விட்டனர்.

பழைய காலத்து மிட்டாய்கள் போகின்றனவே என்ற பழசின் மீதான ஏக்கத்திலிருந்து இதை நாம் சொல்லவில்லை. புதுசில் அப்படி என்ன இருக்கிறது என்பதுதான் கேள்வி. பளபளப்பான மேலுறைகளும் பரபரப்பான விளம்பரங்களுமே அனைவரையும் சுண்டி இழுக்கிறது. தொண்டைக்குக் கீழே போனால் எல்லா இனிப்பும் நரகல்தான் என்ற பாட்டிமார்களின் பழமொழி பன்னாட்டுக் கம்பெனிகளுக்கும் தெரியும். உங்களது தொண்டையைக் கடப்பதற்குள் ஏற்படுத்தும் கிறுகிறுப்புக்காக எந்த கேடு விளைவிக்கும் ரசாயனக் கலவைகளையும் சேர்த்து உங்களது நாக்கை வளைப்பதுதான் அவர்களின் நோக்கம். நெஸ்லே கம்பெனி சாக்லெட்டுகளில் மரபணு ரீதியாக மாற்றம் செய்யப்பட்ட பொருட்களைச் சேர்ப்பது உங்களுக்குத் தெரியுமா? ஐரோப்பியத் தாய்மார்கள் இதனைக் கண்டித்துக் குரல் கொடுத்து வருகிறார்கள்.



மேலும், சாக்லெட் தின்றால் பல் சொத்தையாகும் என்பது ஒருபுறமிருக்க, நமது பண்பாடும் சொத்தையாவது அதைவிட பயங்கரமானது. நீங்கள் சப்பிச் சாப்பிட வாங்கித்தரும் சாக்லெட்டுகளுடன் சேர்த்து ஊட்டப்படும் விளம்பரங்கள், உங்களது குழந்தைகளையே மெல்ல மெல்ல மென்று தின்கின்றன. வலங்கைமான் திருவிழாவில் வாங்கித் தின்ற பொரி உருண்டை, ஜெயங்கொண்டம் சந்தையில் வாங்கி ருசித்த பொடலங்காய் உருண்டை என்ற நினைவுகள் வெறும் தின்பண்டங்களை மட்டுமல்ல நமது ஊர் சந்தை, நம்மூர் நினைவுகளையும் சேர்த்து பையனின் மனதில் பதிய வைக்கின்றன.

இன்று சந்தையில் விற்கப்படும் மிட்டாய் வகைகளுடன் தொலைக்காட்சியில் மாமிச மலையாக மோதிக் கொள்ளும் வன்முறைக் கதாநாயகர்களின் படங்கள், பெப்சி அடையாளத்துடன் டெண்டுல்கர் படம், அமெரிக்க கதாநாயகன் ராம்போ, அர்னால்டு படங்கள் நவீன இயந்திரத் துப்பாக்கி, அமெரிக்க தேசியக் கொடி என அனைத்து அம்சங்களிலும் அந்நிய மோகம் சாக்லெட் வடிவில் சந்தையில் தொடர்கின்றன. இந்த மிட்டாய் மிராசுகளுக்கு முன் ஒரு பண்ணை அடிமை போல உள்நாட்டுத் தயாரிப்புகளும், நாட்டின் மதிப்பீடுகளும் கூனிக் குறுகித் தாழ்வாக்கப்படுகின்றன.

இந்த இனிய அவமானத்தை அறியாப் பருவத்திலுள்ள பிள்ளைகள் தெரியாமல் தேடிக் கொள்வதைவிட, பெற்றோர்கள் விரும்பி ஏற்பதுதான் விபரீதம்.

தங்களது குழந்தைகள் பன்னாட்டுக் கம்பெனிகளின் சாக்லெட் பெயர்களை உச்சரித்தவுடனேயே ''இந்த வயசிலேயே எல்லாம் தெரியுது பாரு!'' - என பெரிது உவக்கிறார்கள் பெற்றோர்கள்.

நெஸ்லே போன்ற பன்னாட்டுக் கம்பெனிகள் மாதம் ஒரு புது வகை சாக்லெட் ரகத்தைச் சந்தையில் குறி வைத்து இறக்குகின்றன.

**தொடர்ச்சி 27 ஆம் பக்கம்**


படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• புதிய கலாச்சாரம்

• மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

• போர்: 19
• குரல்: 4
• செப்டம்பர் - 2001

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@hotmail.com

சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை, அசோக் நகர்,
சென்னை - 600 083.

அலுவலக நேரம்:
காலை 10 முதல் 2 மணி வரை
ஞாயிறு விடுமுறை

# கொலை, கொள்ளை, விபச்சாரம் தார்மீக பலம்!

இந்திய இராணுவத்திற்கான ஆயுதக் கொள்முதல் பேரங்களில் கீழிருந்து மேல் வரை தலை விரித்தாடும் ஊழலை வீடியோ ஆதாரங்களுடன் சில மாதங்களுக்கு முன் அம்பலப்படுத்தியது தெகல்கா என்ற இணைய இதழ். பாரதீய ஜனதா தலைவர் பங்காரு லட்சுமணனும் சமதா கட்சித் தலைவி ஜெயா ஜேட்லியும் இவ்விவகாரத்தில் கையும் களவுமாகப் பிடிபட்டதால் பதவி இழக்க நேர்ந்தது. தனது புலனாய்வின் ஒரு பகுதியாக ஆயுதபேரத்தை முடிக்க உயர் ராணுவ அதிகாரிகளுக்கு விலைமாதர்களை ஏற்பாடு செய்ததையும் வீடியோ பதிவு செய்த தெகல்கா, அந்த காசெட்டுகள் அனைத்தையும் பாதுகாப்பு அமைச்சகத்திடமும், இது குறித்து விசாரித்து வரும் வெங்கடசாமி கமிசனிடமும் ஒப்படைத்திருந்தது. இரகசியப் பாதுகாப்பில் இருந்த இந்த ஒளிநாடாக்கள் இப்போது திடீரென்று கசிந்து வெளியாகிவிட்டது. யார் என்ன நோக்கத்திற்காக இதனை இப்போது அவிழ்த்து விட்டார்கள் என்ற பிரச்சினை ஒருபுறமிருக்கட்டும். "புலனாய்வு என்ற பெயரில் 'கூட்டிக் கொடுக்கும்' வேலையில் ஈடுபடுவது பத்திரிகை தர்மமா?" என்ற கேள்விதான் இன்று மாபெரும் அறநெறிக் கேள்வியாக விவாதிக்கப்பட்டு வருகிறது.

சமூக நோக்கத்திற்காகத்தான் என்றாலும், இத்தகைய நடவடிக்கைகள் பத்திரிகை தர்மத்திற்கு எதிரான, தரம் தாழ்ந்த முறைகளாகும் என்று இந்து முதல் இந்தியா டுடே வரையிலான அனைத்துப் பத்திரிகைகளும் தெகல்காவைக் கண்டித்துத் தலையங்கம் எழுதிவிட்டன. லஞ்சமாகக் கொடுக்கப்படும் ஒரு பொருளாகப் பெண்ணைப் பயன்படுத்தியுள்ளதை மார்க்சிஸ்டு கட்சியின் பெண்கள் அமைப்பு உள்ளிட்ட பல பெண்ணுரிமை அமைப்புகளும், காங்கிரஸ் கட்சியின் பெண் எம்.பிக்களும் கண்டித்துள்ளனர். "தெகல்கா நிருபர்களைக் கைது செய் அல்லது விபச்சாரத்தைச் சட்டபூர்வமாக்கு" என்று "பாலியல் தொழிலாளர்கள் சங்கம்" ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளது. ஓட்டுக் கட்சிகளுக்கும் பத்திரிகைகளுக்கும் தோன்றியுள்ள இந்த தார்மீக ஆவேசத்தைக் கொஞ்சம் பரிசீலிப்போம்.

முதலாவதாக அரசாங்க காண்டிராக்டுகள், உரிமங்கள், ஏலங்கள் ஆகியவற்றைப் பெறுவதற்காக அதிகார வர்க்கத்திற்கும், அமைச்சர்கள், எம்.பிக்களுக்கும் முதலாளிகள் கொடுக்கும் விருந்துகளில் சூட்கேஸ், சாராயம், சாக்கனாவுடன் பெண்களையும் படையல் வைப்பது இதுவரை நடக்காத அதிசயமல்ல. இதை நம்பித்தான் நட்சத்திர ஓட்டல்கள் என்ற பெயரிலான விபச்சார விடுதிகள் நாடெங்கும் முளைத்துள்ளன.

இரண்டாவதாக, தற்போது அம்பலமாகியிருக்கும் கா்செட்டில் டெல்லியின் மிகவும் பிரபலமான விபச்சாரத் தரகன் கவல்ஜித் சிங் இடம் பெற்றிருக்கிறான். இவனுடைய வாயைக் கிளற வேண்டிய சூழல் ஏற்பட்டால் சர்வகட்சி பிரமுகர்கள், உயர் அதிகாரிகள், முதலாளிகள் பிரபல பத்திரிகையாளர்கள் உள்ளிட்ட பலரது இரகசியங்கள் வெளிவரும். தேசத்தையே நெருக்கடிக்குத் தள்ளக்கூடிய இந்த "அரசாங்க இரகசியங்கள்" வெளிவந்துவிடக் கூடாது என்ற 'பொது நலனின்' காரணமாகவும் இந்தத் தார்மீக ஆவேசம் பத்திரிகைகளுக்கும் கட்சிகளுக்கும் ஏற்பட்டுள்ளது.

மூன்றாவதாக, அரசு தந்திரத்துறையிலும், உளவுத் துறையிலும், போலீசுத் துறையிலும் தங்கள் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள இவ்வாறு விலைமாதர்களைப் பயன்படுத்துவது சகஜமானதுதான் என்று பத்திரிகைகளே குறிப்பிடுகின்றன. வெளிநாட்டு அதிபர்கள், பிரமுகர்களை இந்திய அரசு உபசரிக்கும் முறைகளில் இதுவும் ஒன்று என்பதையும், அண்டை நாட்டு மன்னர் ஒருவரை உபசரிக்க சில ஆண்டுகளுக்கு முன் ஒரு பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரியே அனுப்பப்பட்டார் என்றும் அவுட்லுக் வார ஏடு கூறுகிறது.

எனினும் இதையெல்லாம் செய்வதற்கு அரசுக்கு சட்டபூர்வ உரிமை உண்டு என்றும், நமக்கு (அதாவது பத்திரிகைகளுக்கு) அந்த உரிமை கிடையாது என்றும் 'ஆத்ம பரிசோதனை' செய்து கொள்கின்றன சில பத்திரிகைகள். தெகல்கா இணைய இதழ் தன்னை பிரபலப்படுத்திக் கொள்ளவும், பங்குச் சந்தையில் நல்ல விலைக்கு தன்னை விற்றுக் கொள்ளவும் நடத்துகின்ற பரபரப்பு வேலைதான் இது. அதை விஞ்சிய மாபெரும் சமூக நோக்கம் எதுவும் அதற்கு இருப்பதாக நாம் கருதவுமில்லை. ஆனால், "எடைக்கு எடை விபச்சாரம்" என்பதையே தமது கொள்கையாகக் கொண்டுள்ள பத்திரிகைகள், பெண் விற்பனைப் பொருள் ஆக்கப்படுவது பற்றி கவலை தெரிவிப்பது அயோக்கியத்தனம். அதே மூச்சில் இத்தகைய 'ஒழுக்கக்கேடுகள்' அம்பலமாவதன் மூலம் ராணுவம் தனது "தார்மீக பலத்தை' இழந்து விடும் என்றும் எச்சரிக்கை செய்கின்றன பத்திரிகைகளும் ஓட்டுக் கட்சிகளும்.

ராணுவமும் போலீசும் சட்டவிரோதமாக செய்கின்ற படுகொலைகளுக்காக அவர்கள்மீது கிரிமினல் வழக்கு தொடர்ந்தால் ராணுவத்தின் தார்மீக பலம் பாதிக்கப்படும் என்கிறார் அத்வானி. அதிகாரிகளின் விபச்சாரத்தை அம்பலமாக்கினால் ராணுவத்தின் தார்மீக பலம் குன்றும் என்கின்றன ஓட்டுக் கட்சிகளும் பத்திரிகைகளும். விரைவில் போலீசு, ராணுவத்தின் ஊழலை அம்பலப்படுத்துவதும் அவர்களது தார்மீக பலத்தைப் பாதிக்கும் என்ற ஆட்சேபம் எழலாம். ஆக, கொலை, கொள்ளை, விபச்சாரம் - இவற்றின் மீதுதான் ராணுவத்தின் தார்மீக பலம் நின்று கொண்டிருக்கிறது. பாமர மக்களுக்குப் புரியும்படி ஒரே வார்த்தையில் இதைச் சுருக்கிச் சொல்வதனால், தேசபக்தி என்றும் கூறலாம். ●

படிப்பகம்

www.padippakam.com



# அண்ணா தி.மு.க.வும்

# அய்யோ தி.மு.க.வும்



**கா**ரியவாதிகள், பிழைப்புவாதிகள், அதிகாரத் தரகர்கள், சாராய வியாபாரிகள், காண்டிராக்டர்கள், கட்டைப் பஞ்சாயத்துக்காரர்கள் போன்றோர் தவிர ''உண்மையான'' தொண்டர்கள் என்று யாராவது திராவிட முன்னேற்றக் கழகத்தில் மிச்சம் இருக்கிறார்களா?

இருக்கிறார்கள் என்கிறார் கருணாநிதி. தமிழகமெங்கும் சுமார் 50,000 பேர் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள்; கருணாநிதி கைது செய்யப்பட்ட காட்சியை தொலைக்காட்சியில் பார்த்த அதிர்ச்சியில் 66 பேர் உயிர் விட்டிருக்கிறார்கள். கண்டனப் பேரணிக்கு வந்த தொண்டர்கள் கடற்கரையில் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இவர்களெல்லாம் பதவி ஆதாயம் தேடாத உடன்பிறப்புக்கள் என்று நெகிழ்ச்சியுடன் சொல்கிறார் கருணாநிதி.

பதவி ஆதாயம் தேடாத உடன்பிறப்புக்களும், தேட விரும்பினாலும் முடியாத உடன்பிறப்புகளும் கழகத்தில் இருப்பது உண்மைதான்.

கடவுள் பக்தியைப் போலக் கலைஞர் பக்தி கொண்டவர்கள், பான்பராக் போடுவது போல திமுகவுக்கு ஓட்டுப் போடுவதையும் ஒரு பழக்கமாகக் கொண்டவர்கள் போன்றோர் இருக்கிறார்கள். கழகத்தின் கொள்கை கட்டெறும்பாகத் தேய்ந்த பிறகும் கலைஞரை விட்டால் வேறு வழியில்லையென நம்பும் சான்றோரும் இருக்கிறார்கள்.

கலைஞரும் அதையேதான் சொல்கிறார். ''நான் பட்ட அடி எனக்காக அல்ல; உங்களுக்காக. என்னை அடித்து உதைத்துப் பந்தாடியதை ஏற்றுக் கொண்டது எனக்காக அல்ல; உங்களுக்காக. இந்தச் சமுதாயத்துக்காக'' என்று கடற்கரைக் கூட்டத்தில் கருணாநிதி பேசிக் கொண்டிருக்கும்போதே உடன் பிறப்புகளைப் பந்தாடிக் கொண்டிருந்தது காவல்துறை.

''நாங்கள் அடிபட்டது எங்களுக்காக அல்ல; எங்கள் தலைவருக்காக'' என்கிறார்கள் உடன்பிறப்புகள். இப்படி தொண்டனுக்காகத் தலைவனும் தலைவனுக்காகத் தொண்டனும் மாறி மாறி அடி வாங்கும் இயக்கத்தை ''அய்யோ.... தி.மு.க.'' என்று அழைப்பதே பொருத்தம்.

அடித்தவர்களைப் பற்றிய கலைஞரின் விளக்கம் இன்னும் அதிசயமானது. ''கட்சியினரை அடித்த காவலர்களும், அடிபட்டவர்களும் சொந்த சகோதரர்கள்தான். சாதாரண ராமசாமியும் கந்தசாமியும் காக்கிச் சட்டை அணிந்ததால் 'கடினசாமி'யாகச் செயல்பட்டுள்ளனர்.''

ரத்தம் சொட்டச் சொட்டத் தூக்கி வரப்பட்ட உடல்களை மேடையில் வைத்துக் கொண்டு கலைஞர் பேசிய வசனம் இது.

தமிழ் சினிமாவில் இத்தகைய காட்சிகளில் தொண்டை நரம்பு புடைக்க வீரவசனம் பேசிவிட்டு எதிர்த்தாக்குதலைத் தொடங்கும் கதாநாயகன் சரத்குமார், ''கலைஞரின் பேச்சு நெருப்புத் துண்டுகளாக இருக்கும்'' என்று ஒரு ரசிகனைப் போலத் தன் எதிர்பார்ப்பை மேடையில் வெளியிடுகிறார்.

''எப்போது எப்படிப் பேச வேண்டும் என்று எனக்குத் தெரியும்'' என்று அவரை அடக்கிய வசனகர்த்தாவான கலைஞர் தன் நெஞ்சத்தின் ஆழத்திலிருந்து வரும் ஆறுதலை காயமடைந்த அனைவரது காலடியிலும் வைப்பதாகக் கூறி உடன்பிறப்புக்களைச் சாந்தப்படுத்துகிறார்.

ஏன் இந்த 'பரிபக்குவ' நிலை? அன்று கலைஞரைத் தேடி சி.பி.சி.ஐ.டி அலுவலகத்தின் வாயிற்கதவுகளை மோதித் திறந்து கொண்டு உள்ளே சென்ற மாறனைப் போல ''தொண்டர்களின் மரணத்திற்கு நீதி கேட்க டி.ஜி.பி. அலுவலகத்திற்குள் நுழையுங்கள்'' என்று இலட்சக்கணக்கில் கூடியிருந்த தொண்டர்களுக்கு கருணாநிதி ஆணையிட்டிருக்கலாமே!

ஜனநாயகத்திற்காக மத்திய அமைச்சர் மாறன் எனும் உடன்பிறப்பு நடத்திய போராட்டத்தை பதவிக்கு ஆசைப்படாத பல்லாயிரம் உடன்பிறப்புகளையும் நடத்தச் சொல்லி ஆணையிட்டிருக்கலாமே!

ஏன் ஆணையிடவில்லை? கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்ற பெயரில் கழக உடன்பிறப்புகள் அடங்கிப் போகத் தேவையில்லையென்றும் கட்டுப்பாட்டைத் தளர்த்தலாம் என்றும் கழகப் பொதுக் குழுவில் பேசிய வீரவசனம் கடற்கரைக்கு வந்தவுடன் காற்றில் கரைந்தது ஏன்?

அப்படி ஆணையிட்டிருந்தால் கந்தசாமிகளைக் காட்டிலும் கடின சாமிகள் உதைப்பட்டிருப்பார்கள். கழக உடன்பிறப்புகளைக் காட்டிலும் காக்கிச் சட்டைகள்தான் அதிகம் களப்பலி ஆகியிருப்பார்கள்.

அத்தகையதொரு . சூழ்நிலையை நினைக்கவே நெஞ்சு நடுங்கியிருக்கும் தி.மு.க. தலைவர்களுக்கு! கழக உடன்பிறப்புகள் செத்தால் அது ஜனங்களின் அழிவு மட்டும்தான். காக்கிச் சட்டைகள் செத்தால் அது ஜனநாயகத்துக்கே பேரழிவல்லவா?

**எதைப் பாதுகாக்க**
**இந்தக் கோழைத்தனம்?**
**யாரைப் பாதுகாக்க**
**இந்த அவமானம்?**
**தாழ்ந்து தாழ்ந்து தாழ்ந்து**
**நாயினும் தாழ்ந்து போகும்**
**இந்த ராஜதந்திரத்தின்**
**ரகசியம் என்ன?**

படிப்பகம்

www.padippakam.com

''எய்தவன் இருக்க அம்பை நொந்து கொள்ளும் முட்டாள்கள் அல்ல நாங்கள்'' என்று அந்த மேடையிலேயே போலீசுக்குச் சமாதானம் சொல்கிறார் கலைஞர். ''நாங்கள் அனைத்துப் போலீசாரையும் எதிர்க்கவில்லை'' என்று அவசர அவசரமாகத் தன்னிலை விளக்கம் தருகிறார் அன்பழகன்.

எய்தவனை (ஜெயலலிதாவை) அடுத்த தேர்தலில் தோற்கடிப்பதன் மூலம் ஜனநாயகபூர்வமாக மக்கள் தண்டிக்க வேண்டுமாம். அம்பை (போலீசு அதிகாரிகளை) தண்டிக்கும் அதிகாரமோ அத்வானியிடம் இருக்கிறது. அவர் பார்த்து ஏதாவது செய்தால் உண்டு.

அதிலும் போலீசு அதிகாரிகளை மாற்றச் சொல்லியோ, ஆட்சியைக் கலைக்கச் சொல்லியோ தான் கோரவில்லை என்று எல்லா நிருபர்களின் தலையிலும் அடித்து சத்தியம் செய்கிறார் கலைஞர். அரசியல் சட்டத்தின் மீதும் ஜனநாயக மரபுகளின் மீதும் அத்தனை பக்தி போலும்!

ரவுடிகளும் போலீசும் கூட்டுச் சேர்ந்துதான் பேரணியைத் தாக்கினார்கள் என்பதை நிரூபிக்கும் படங்களைப் பத்திரிகைகளுக்குத் திரையிட்டுக் காண்பிக்கிறார் கலைஞர். அதன் பிறகு, கலைஞரின் வாயிலிருந்து ஒரு வீரவசனத்தை யாவது வரவழைத்துவிட வேண்டும் என்று தொண்டை வரை கொக்கி போட்டுக் கேள்வி கேட்கிறார்கள் நிருபர்கள். ''டில்லி... டில்லி'' என்பதைத் தவிர வேறொரு வார்த்தையையும் கலைஞரின் தொண்டையிலிருந்து அவர்களால் வரவழைக்க முடியவில்லை.

டில்லியிடமிருந்தோ கருப்புப் பூனைகளைத் தவிர வேறெதையும் கலைஞரால் வரவழைக்க முடியவில்லை. ''பாரதீய ஜனதாவை நம்பாதீர்கள்'' என்று வாரந்தோறும் எச்சரிக்கை செய்கிறார் சின்னக் குத்தூசி. ''எனக்கு மேலிருந்து சிக்னல் வந்து விட்டது'' என்று சட்டசபையில் ஜெயலலிதாவுக்குப் புகழாரம் சூட்டுகிறார் பா.ஜ.க. உறுப்பினர் லட்சுமணன். தி.மு.க.வோ மவுனம் சாதிக்கிறது.

துரைமுருகன் வாய் திறக்கிறார். ''நீங்கள் பாரதீய ஜனதாவுடன் சேர மாட்டோம் என்று சத்தியம் செய்தால் நாங்கள் தேசிய ஜனநாயக முன்னணியிலிருந்து விலகத் தயார்'' என்று ஜெயலலிதாவிடம் சவால் விடுகிறார்.

''நாங்கள் பாரதீய ஜனதாவுடன் சேரத் தயார் என்று



சொன்னால் அடுத்த கணமே பா.ஜனதா உங்களை வெளியே தூக்கி எறிந்து விடும்'' என்று பதிலுக்கு ஏளனம் செய்கிறார் ஜெயலலிதா.

தமிழ் சினிமாவில் பெண்டாட்டிக்கு வைப்பாட்டி சவால் விடும் காட்சியை இது நினைவுபடுத்துகிறது. துரைமுருகனின் பேச்சோ அரசியல் விபச்சாரத்திற்குப் புதிய இலக்கணம் வகுக்கிறது.

பாரதீய ஜனதாவுடன் கூட்டணி அமைத்ததுதான் தி.மு.க.வின் மிக மோசமான கொள்கைச் சரிவு என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்த சான்றோர்கள் இதற்கென்ன செய்வரீர்கள்?

**எ**தைப் பாதுகாக்க இந்தக் கோழைத் தனம்? யாரைப் பாதுகாக்க இந்த அவமானம்? தாழ்ந்து தாழ்ந்து தாழ்ந்து நாயினும் தாழ்ந்து போகும் இந்த ராஜதந்திரத்தின் ரகசியம் என்ன?

1963-இல் பிரிவினைத் தடைச்சட்டத்திற்கு அஞ்சி திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டபோது அண்ணா சொன்னார்: ''திராவிட நாட்டை அவ்வளவு எளிதில் விட்டு விடமாட்டோம். புலி வேட்டையாட ஒரு முறையும் கோழி பிடிக்க வேறொரு முறையும் இருப்பதை தி.மு.க. அறியாமலில்லை. சட்டமன்றத்திற்குச் செல்ல சில பேரையும் திராவிட நாடு கோரிக்கை பற்றிப் பேச சில பேரையும் பிரித்துவிட எனக்குத் தெரியும்.''

புலி வேட்டைக்குப் பிரித்து விடப்பட்ட தம்பிகள் யார் யார் என்ற தகவல் இல்லை. ஆனால் கோழி பிடிக்க சட்டமன்றப் பதவிக்கு போன உடன்பிறப்புக்களைக் கோழி பிடித்துக் கொண்டு விட்டது.

சண்டைக் கோழியைப் போல ஜெயலலிதா பேச எழும்போதெல்லாம் பேராசிரியர் பம்முகிறார். சட்டமன்றம் - அதன் அவை மரபுகள், நீதித்துறை - அதன் கேள்விக்கிடமில்லாத நடுநிலை, காவல் துறை - அதன் மடிப்புக் கலையாத நேர்மை, பத்திரிகைகள் - அவற்றின் தணியாத சுதந்திர தாகம்... என்று ஜனநாயகத்தின் தூண்கள் பற்றி கோழி பிடிக்கப் போன தி.மு.க. உடன்பிறப்புகளின் தலைவர் அன்பழகன் பக்திப் பரவசத்துடன் பேசுகின்றார். அண்ணா தி.மு.க.வினரோ, தெரு நாய்க்கே உரிய அலட்சியத்துடன் 'ஜனநாயகத்தின்' தூண்கள் மீது சிறுநீர் கழிக்கின்றனர்.

''அய்யோ''வெனக் கதறுவதைத் தவிர தி.மு.க.வுக்கு வேறு வழி தெரியவில்லை. பார்ப்பன ஜெயலலிதா கும்பலிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள பார்ப்பன இந்து மதவெறிக் கும்பலிடம் சரணடைவதைத் தவிர கலைஞருக்கு வேறு வழி தெரியவில்லை. போர்க் குணத்திற்குப் பதில் பிலாக்கணம்!

1967-இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை ஒரு போர்க்குணமிக்க பாதையில் மாணவர்கள் கொண்டு சென்றபோது அவர்களுடைய காலைப் பிடித்து இழுத்ததல்லவா தி.மு.கழகம்!

அவசர நிலைக்காலத்தில் வாங்கிய அடியில் வீங்கிய உதடுகளுடன் ''நேருவின் மகளே வருக'' என்று வரவேற்க முடிந்த கட்சியல்லவா தி.மு.கழகம்!

எனவே தி.மு.க.வின் இன்றைய 'அவல' நிலைக்கு என்ன காரணம் என்று ஆராயத் தேவையில்லை. உண்மையில் இது அவலநிலைதானா என்பதுதான் நாம் ஆராய வேண்டிய விசயம்.

வரவிருக்கும் எதிர்காலத்தைப் பற்றி ''எங்கப்பன் குதிருக்குள் இல்லை'' என்ற பாணியில் 1959-இல் (முதன்



**தலைவருக்காக அடிபட்ட தி.மு.க. தொண்டர்கள்!**

படிப்பகம்

www.padippakam.com

முதலில் தேர்தலில் நிற்பது என தி.மு.க. முடிவு செய்த மாநாட்டில்) அண்ணா கீழ்க்கண்டவாறு பேசினார்:

''எங்களுக்குப் புதிய அந்தஸ்தைத் தேடிக் கொள்வதற்கல்ல - தி.மு.கழகம் தேர்தலில் ஈடுபடுவது; தமிழ்நாட்டிற்குப் புதிய அந்தஸ்தைத் தேடித் தருவதற்காகத்தான்.''

கடந்த நாற்பது ஆண்டுகளில் அந்தஸ்தைத் தேடிக் கொண்டது தமிழகமா, தம்பிகளா என்பது உடன்பிறப்புகளுக்கும் புரிந்த உண்மைதான். தி.மு.க.வின் இன்றைய 'அவலநிலைக்கு' கழகத்தலைவர்கள் தேடிக் கொண்ட அந்தஸ்தும் ஒரு காரணம் என்பது உடன் பிறப்புகள் புரிந்து கொள்ள வேண்டிய உண்மை.

பணக்கார வர்க்கத்தின் அறிவுப் பிரதிநிதியாகத் தன் அரசியல் பயணத்தைத் தொடங்கிய தி.மு.க. தலைமை, தானே ஒரு பெரிய முதலாளி வர்க்கமாக மாறி விட்டது. இந்த அந்தஸ்து நீடிக்க வேண்டுமானால் சூடு, சொரணை, சுயமரியாதை போன்றவற்றைக் காவு கொடுத்துத்தான் தீரவேண்டும்.

''ஜெயலலிதாவால் என்ன செய்துவிட முடியும்? ஏதாவது வழக்குப் போட்டு சிறையில் வைக்க முடியும். எத்தனை நாள் வைத்துவிட முடியும்? இதற்காக பாரதீய ஜனதாவிடம் ஏன் பணிந்து போக வேண்டும்?'' என்று கேட்டார் ஒரு நண்பர்.

சலூன் கடையும் சைக்கிள் கடையும் வைத்திருக்கும் உடன்பிறப்புகள் வேண்டுமானால் இப்படிச் சிந்திக்கலாம். சன் தொலைக்காட்சி அதிபரும், கப்பல் கம்பெனி அதிபரும், பெரு முதலாளிகளும், காண்டிராக்டர்களும், அரசியல் தரகர்களும்... கடைசியாக சாராயக் கடை அதிபர்களும் இப்படிச் சிந்திக்க முடியாது.

சாராயக்கடை அதிபருக்கே உள்ளூர் இன்ஸ்பெக்டரின் தயவு தேவைப்படும் போது சன் டி.வி. அதிபருக்கு மைய அரசின் தயவு தேவைப்படுவதில் வியப்பென்ன? தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம் என வானத்திலிருந்து சன் டி.வி. கைப்பற்றியிருக்கும் திராவிட நாட்டைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டுமானால் இந்துராஷ்டிரக்காரர்களின் தயவு தேவைப்படுகிறதே!

இல்லையென்றால் அத்துமீறி நடந்த போலீசு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க அத்வானியிடம் எதற்கு இரகசியமாகக் கெஞ்ச வேண்டும்? கடற்கரையில் துப்பாக்கிச் சூடு நடந்தபோதே நடவடிக்கை எடுத்திருக்கலாம். அவ்வாறு போலீசை எதிர்த்துப் போராடத் தொண்டர்களைத் தூண்டிவிட்டால், நாளை தாங்கள் நடத்தவிருக்கும் ஆட்சியிலும் அதே நிலையை சந்திக்க நேரிடும்.

அத்துமீறி நடந்த போலீசு அதிகாரிகள் மீது கிரிமினல் வழக்கு போடலாம். ஆனால் அது அதிகாரவர்க்கத்தையும் போலீசையும் பகைத்துக் கொள்வதாய் முடியும். எனவேதான் ''எய்தவனிருக்க அம்பை நொந்து கொள்ளும் முட்டாள்கள் அல்ல நாங்கள்'' என்று துப்பாக்கிச்சூடு நடத்திய போலீசாருக்குத் தன்னிலை விளக்கம் கொடுக்கிறார் கலைஞர்.

29-ம் தேதி நள்ளிரவில் கருணாநிதி மீது ஜெயலலிதா தொடுத்த தாக்குதலை 'அய்யோ' என்று அவலக்குரல் எழுப்புவதன் மூலம் எதிர்கொண்டது தி.மு.க. கையை முறுக்கியதும், அரிவாளால் வெட்டியதும் தோற்றுவித்த உடல் வலியால் 'அய்யோ'வெனக் கதறுவதைப் புரிந்து கொள்ளலாம்.

**ஜனநாயகத்தின் தூண்கள் பற்றி கோழி பிடிக்கப்போன தி.மு.க. உடன் பிறப்புகளின் தலைவர் அன்பழகன் பக்திப் பரவசத்துடன் பேசுகின்றார். அண்ணா தி.மு.க. வினரோ, தெரு நாய்க்கே உரிய அலட்சியத்துடன் 'ஜனநாயகத்தின்' தூண்கள் மீது சிறுநீர் கழிக்கின்றனர்.**

ஆனால் போலி ஜனநாயகம் குறித்த பிரமைகளை ஜெயலலிதா கும்பல் ஒவ்வொன்றாக உடைத்தெறியும் போதெல்லாம் அந்தப் பிரமைகளைச் செதுக்கிய கலைஞனின் மன வேதனையுடன் ஒலிக்கிறது கலைஞரின் 'அய்யோ' என்ற அவலக்குரல். சட்டசபையில், நீதிமன்றத்தில், கடற்கரையில்... எங்கு நோக்கினும் அய்யோ... அய்யோ என்பதே தி.மு.க.வின் அரசியல் முழக்கமாக ஒலிக்கிறது.

போலீசும், கோர்ட்டும், எம்.எல்.ஏ.க்களும் தருகின்ற வேதனையைத் தங்கள் அன்றாட வாழ்வில் அனுபவித்து வரும் மக்கள் அவற்றின் 'மாண்புகள்' சிதைக்கப்படுவதை எண்ணிக் கண்ணீர் விடப்போவதில்லை.

அய்யோ என்பதை அரசியல் முழக்கமாக வைத்து அனுதாபம் தேடி ஒரு வேளை ஆட்சியைப் பிடிக்கலாம்; அதற்கு ஐந்தாண்டுகள் காத்திருக்க வேண்டும். ஆனால் இந்த ஆட்சியை வீழ்த்துவதற்கு அய்யோ என்ற கதறல் பயன்படாது. பாசிச ஜெயலலிதா கும்பலை வீழ்த்த அதற்கேயுரிய அரசியல் முழக்கமும், போர்க்குணம் கொண்ட நடைமுறையும் வேண்டும்.

அதற்கு போலீசை எதிர்க்க வேண்டும்; திடீர் பணக்கார அரசியல் ரவுடிகள் போலீசுடன் கொண்டிருக்கும் கூட்டணியை எதிர்க்க வேண்டும்; ஊழல் அதிகார வர்க்கத்தையும் நீதித்துறையையும் அம்பலப்படுத்த வேண்டும்; ஜெயலலிதாவின் பின்பலமாக இருந்து ஆதரிக்கும் பார்ப்பனக் கும்பலையும், பத்திரிகைக் கும்பலையும் அம்பலப்படுத்த வேண்டும்; இவர்கள் அனைவரின் வாயிலாகவும், அமல்படுத்தப்படும் உலகமயமாக்க - மறுகாலனியாக்கக் கொள்கைகளை எதிர்க்க வேண்டும்; மொத்தத்தில் பாரதீய ஜனதாவின் ஆட்சியையே எதிர்க்க வேண்டும்.

ஜெயலலிதா ஆட்சியின் அஸ்திவாரத்தை அசைக்க முற்பட்டால் அது அறிவாலயத்தையும் அல்லவா ஆட்டம் காண வைக்கிறது!

உலகமயமாக்கத்தின் நாயகனாக மாறன், நவீன முதலாளி வர்க்கத்தின் குலக்கொழுந்தாக கலாநிதிமாறன், அமைச்சர்கள் என்ற மாறு வேடத்தில் உலவும் தொழிலதிபர்கள், சாதிய சமஸ்தானாதிபதிகளான மாவட்டச் செயலாளர்கள், வட்டச் செயலர் பதவியை ஏலத்தில் எடுத்திருக்கும் பிராந்திக்கடை அதிபர்கள், வளர்ப்பு மகனின் அனைத்து குணாதிசயங்களும் கைவரப்பெற்ற சொந்த மகன் மு.க. அழகிரி, போலீசு ஆட்சியையும் இந்துவெறி தேசியத்தையுமே தம் நட்சத்திரத் தகுதியாகக் கொண்ட சரத்குமார் போன்ற பிரச்சார பீரங்கிகள், இந்தச் சூழ்நிலை எதையுமே அறியாத பாசாங்குடன் 'சேற்றில் முளைத்த செந்தாமரை போல' காலச்சுவடு பத்திரிகைக்குத் தன் மன அவஸ்தைகளைக் கவிதையாய் வடிக்கும் மகள் கனிமொழி!

இந்தக் கூட்டத்தில் கலைஞர் எங்கே இருக்கிறார் என்கிறீர்களா? அவர்தான் இவர்களனைவரையும் போர்த்தி மறைத்து இழுத்துக்கட்டப்பட்ட திராவிட இயக்க முகமூடி!

● சூரியன்

www.padippakam.com

# வாசகர் கடிதம்

● டர்பன் நிறவெறி எதிர்ப்பு மாநாடு குறித்து வந்த கட்டுரை இன்னும் சில விசயங்களைக் கூறியிருக்க வேண்டும். இங்குள்ள தன்னார்வக் குழுக்கள், அவைகள் விலைக்கு வாங்கிய மனித உரிமை அமைப்புகள், இவை தெரியாமலே 'பலி'யாகும் தலித் அமைப்புகள், இந்த மாநாடு குறித்து பெரிய அளவில் பிரச்சாரங்கள் செய்து வருகின்றன. வர்க்கம் என்ற அளவுகோலை எல்லாவிதத்திலும் மறக்கடிக்க வரும் இந்தக் குழுக்களின் யோக்யதையை 'தலித்' மக்கள் உணர அவசியம் ஒரு கட்டுரை வேண்டும்.

'One solution - Revolution' என்ற வாசகம் தாங்கிய தோழரின் புன்சிரிப்பான புகைப்படமும், தொடர்ந்து உலகெங்கும் பரவிவரும் வர்க்கப் போருக்கான ஆயத்த சூழ்நிலைகளின் புகைப்படங்களும் தொடர்ச்சியாக அட்டையில் வெளிவருவது மிகுந்த நம்பிக்கையூட்டக்கூடிய விசயமாகும்.

**— குருசாமி மயில்வாகனன்,** சிவகங்கை.

● டிரேசி சாப்மனின் 'எதையும் காண வில்லை' கவிதையில் கருப்பின மக்களின் ஆதங்கம் வெளிப்படுகிறது. ''சுதந்திர தேவி ஏந்தி நிற்கும் தீப்பந்தத்தின் ஒளியில் இந்த அநீதியைக் காண முடியவில்லையா?'' தீச்சுடரின் நிழல் கருப்புச் சேரியின் மீது கவியும்போது எப்படிக் காணமுடியும்? எனவே விடுதலை வேட்கை குறையாமல் சாப்மென் போன்றவர்கள் தொடர்ந்து கர்ஜனை செய்ய வேண்டும்.

**— எ. பென்யா,** வ. புதுப்பட்டி.

● வேலையின்மை பற்றிய முகப்புக் கட்டுரை அருமை. 100 ஊழியர்களை ஆட்குறைப்பு செய்ய வேண்டுமானால் முன் அனுமதி பெறவேண்டும் என்ற சட்டத்தை ரத்து செய்து 1000 பேர் வரை வேலை நீக்கம் செய்யும் உரிமையை வழங்கிய மைய அரசு முதலாளிகளின் வாயில் இனிப்பையும், தொழிலாளிகளின் வயிற்றில் ஈரத்துணி கட்ட வைப்பதும் நியாயமில்லை. ஆர்.எஸ்.எஸ். தொடர் கட்டுரை ஏனைய சிறுபான்மையினரின் இதழ்கள் செய்யத் துணியாதவற்றை செய்திருப்பது பாராட்டுதற்குரியது.

**— கா. ஷபீ உல்லாஹ்,** ஏரப்புதூர், வேலூர் மாவட்டம்.

● சமீபத்தில் வெளியான 'குட்டி' திரைப்படம் மனதளவில் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது. அதைப் பற்றிய விமர்சனக் கட்டுரையை எதிர்பார்க்கின்றேன். ஆனால் இரண்டு சொட்டு கண்ணீரை மட்டுமே பார்வையாளர்களிடமிருந்து எதிர்பார்த்து படமெடுத்திருப்பது வேதனைக்குரியது.

**— பி. தர்மராஜ்,** திருச்சி.

● ஓய்வு - பொழுதுபோக்கு - இசை ரசனை: இம்மூன்றையும் பற்றி தனித்தனியேயும் அவற்றுக்கிடையிலான இயங்கியல் உறவு குறித்தும் பேசுவதாய்த் தொடங்கிய கட்டுரை ஆழம் மேலும் ஆழம் என்று போய் இறுதியில் முதலாளித்துவத்தின் ஏகாதிபத்திய கட்டத்தில் கலை இலக்கியத் துறையில் அதன் செயல்பாடுகளனைத்தையும் விளக்கி விடுகிறது. அதனூடாகவே அதுவே பாட்டாளி வர்க்கத்தின் அல்லது மார்க்சிய லெனினியத்தின் கலை இலக்கியம் பற்றிய கோட்பாட்டறிக்கையாகவே அமைந்து விட்டது. தத்துவத்துறையில் பொருளியலும் கருத்தியலும் ஒருங்கிணைந்து ஒன்றையொன்று சார்ந்தும் பாதித்தும் இயங்குவதாக கூறுவதில் கருத்தியலின் உளவியலின் எதிர்வினையும், பாதிப்பும் என்ன என்பதை துல்லியமாகத் தெளிவுபடுத்தி விட்டது கட்டுரை.

இறுதியில் அவர்கள் நம் உளவியலை அசைக்கும் முயற்சியை தம் அறிவின் துணை கொண்டு அல்லாமல், நேரடியாக அதற்கெதிராக நாம் ஒரு உளவியல் யுத்தத்தை அவர்கள் மீதோ மக்கள் மீதோ தொடுத்து அவர்களை வெற்றி கொள்ள முடியாதென்பதும் உணர்த்தப்பட்டிருக்கிறது. மக்களின் எதிரிகளை அடையாளம் காட்டும் உரைகல்லாக, அவர்களின் முகமூடிகளைக் களையும் கைக்கருவியாக இக்கட்டுரையை பயன்படுத்த வேண்டியது நம் திறமைக்கும், அரசியல் சமூக உணர்வுக்கும் விடப்பட்ட சவாலாக முன்னிற்கிறது.

**— சிங்காரம்,** திருச்சி.

*தலையங்கம்:* பூலானைக் கொன்றவன் இந்தக் கொலையை வைத்து நான் பிரபலமாகி பெஹ்மாய் தொகுதியில் நின்று எம்.பி.யாகி விடுவேன் என்று சொன்னது, பாராளுமன்றத்தின் சமூகநீதிக் கோட்பாடுகள் ஆதிக்க சாதிவெறியர்களின் கழிப்பறை காகிதங்களாக்கப்பட்டு விட்டதையும் எடுத்துக் காட்டுகிறது.

*அட்டைப்படக் கட்டுரை:* உற்பத்தி பெருகும்போது வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருவது முதலாளித்துவத்தின் தவிர்க்கவியலாத விதி என்பதை விபரங்களின் மூலம் நிறுவியது சிறப்பாக இருந்தது. இதுபற்றி பொருளாதாரம் பயின்ற மாணவர் ஒருவர் ''நாங்கள் ஆண்டுதோறும் பொருளாதார வளர்ச்சி எப்படி உயர்ந்து வருகிறது என்பதற்காக வரைபடம் போடுவோம். இனி அதன் கூடவே வேலையில்லாத் திண்டாட்டம் எவ்வாறு வளர்ந்துள்ளது என்பதற்கும் வரைபடம் போடவேண்டும்'' போலிருக்கிறது என்றார்.

*தொடர் கட்டுரை:* 'ரேடியோவில் காலை 3 மதப்பாடலையும் ஒலிபரப்புவதைக் கேட்டவுடன் அரசு மூன்று பேருக்கும் பொதுவானது என்று நினைத்துக் கொண்டிருந்தேன். இக்கட்டுரையைப் படித்தவுடன் செய்தித் துறையில் எதைத் தொட்டாலும் அது பார்ப்பனியத்தில்தான் சென்று முடிகிறது என்பதைப் பரிந்து கொண்டேன்'' என்றார் ஒரு வாசகர்.




*நூல் அறிமுகம்:* முதலாளித்துவ லாப, நட்டக் கணக்கை பொறுத்தே மனித உரிமைச் சட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன என்பனதயும், குற்றங்களின் காரணம் புரியாமல் சட்டத்தை தடவிப் பார்த்து தீர்ப்பளிக்கும் குருடர்களான நீதிபதிகளின் வர்க்கத் தன்மை குறித்தும் விளக்கியது சிறப்பாக இருந்தது.

*கவிதை:* கோக் குடிப்பது வெறும் நுகர்வு மட்டுமல்ல - அது ஒரு கொள்கை என சென்ற இதழில் விளக்கப்பட்டது. மனித இதயத்தை மனிதத் தன்மையற்ற இரும்பாக்கக்கூடாது அந்த நுகர்வுக் கொள்கை என்பதற்கு 'கின்லே' கவிதை எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

தான் மட்டும் முன்னேற முடியுமா என்று சிந்திக்கும் கறுப்பின நடுத்தர வர்க்கத்துக்கு சாப்மென் தன் சுயவிமரிசனத்தின் மூலம் பதிலளிப்பது நம்மையும் 'நம்பிக்கை கொள்.... போராடு' என இழுக்கிறது.

*ஓய்வு... இசை ரசனை*

ஒவ்வொருவரையும் தங்களைத் தாங்களே கேள்வி கேட்க வைத்துள்ள 'நான் அவனில்லை' என்ற தலைப்புக்கு நன்றி. அதை நான் இவ்வாறு புரிந்து கொள்கிறேன். ஒரு புரட்சிகர பாடல் சலிப்பூட்டுகிறதென்றால், எல்லாம் தெரிந்திருக்கும் ஒரு ஏழையின் துயரம் இயல்பாக தெரிகிறதென்றால், கற்பிக்கும் தேவையைக் கற்றுணர்ந்த பின்னும் அதற்கு தகுந்தாற்போல் உங்களை தகவமைத்துக் கொள்ளாவிட்டால் உங்களின் ஓய்வும், பொழுது போக்கும் மட்டுமல்ல - உழைப்பும் கூட நேர்மையற்றதாகவே இருக்கும்.

— சுரேஷ், திருச்சி.

www.padippakam.com

# சிவாஜி கணேசன்: ஒரு நடிப்பின் கதை

"இந்தியாவின் ஐம்பது ஆண்டுகளில் தோன்றிய நடிகர்களில் தலை சிறந்தவர்; நடிப்புக் கலையின் பல்கலைக் கழகம்; இன்றைய நடிகர்கள் அனைவரையும் ஏதோ ஒரு வகையில் பாதித்தவர்; அவர் ஏற்று நடிக்காத பாத்திரங்கள் ஏதுமில்லை; தமிழ் மொழியின் ஆகச் சிறந்த உச்சரிப்புக் கலைஞர்; அவரது திரைப்படங்களைப் பார்க்காத எவரும் சுதந்திரத்திற்குப் பிந்தைய தமிழகத்தைப் புரிந்து கொள்ள இயலாது; தேசியமும் தெய்வீகமும் கண்க்கென வாழ்ந்த ஒரு சிறந்த குடிமகன்" என்று அனைத்துப் பிரிவினராலும் போற்றப்படுகிறார், நடிகர் திலகம் என்றழைக்கப்படும் சிவாஜி கணேசன்.



அவரது நடிப்பை மிகை நடிப்பு என்று விமரிசிப்பவர்கள் கூட சிவாஜியின் திரையுலகச் சாதனையை மறுப்பதில்லை. பொதுவில் அவரது வாழ்க்கையைப் பொறுத்தவரை கலையுலகில் சாதனையாளராகவும், அரசியல் செய்யத் தெரியாத தோல்வியாளராகவும் அனுதாபத்துடன் மதிப்பிடப்படுகிறார்.

ஆனால் அவரது சமகால வரலாறும், அவரது திரைப்படங்களும், அதில் அவர் ஏற்று நடித்த பாத்திரங்களும் அவரால் உருவாக்கப்பட்ட நடிப்பு பாணியும், ஒரு நட்சத்திரமாகத் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள அவர் செய்த முயற்சிகளும், அதையொட்டி மாறிய அவரது அரசியல் வாழ்க்கையும், 'இமேஜ்' கரைந்து போன பிற்காலத்தில் அவர் நடித்த கேவலமான படங்களும், வளர்ப்பு மகன் திருமணத்தில் வாழ்ந்து கெட்ட நல்ல மனிதரைப் போன்று பங்கேற்றதும், 80-களின் இறுதியில் வேறு வழியின்றி அரசியல் துறவறம் மேற்கொண்டதும் - நமக்கு வேறு ஒரு மதிப்பீட்டைக் காண்பிக்கின்றன.

அவை சிவாஜி பற்றிய பாராட்டுரைகள் மிகைப்படுத்தப்பட்டவை என்பதோடு தவறு என்பதையும் தெரிவிக்கின்றன. கூடவே திராவிட இயக்கங்களின் அரசியலையும் - அதையொட்டிய திரையுலகத்தையும் அவையிரண்டின் வளர்ச்சியையும் - சமரசத்தையும் அதிலிருந்து பிரிக்க முடியாத சிவாஜி எனும் கலைஞனின் வாழ்க்கையையும் நமக்கு புரிய வைக்கின்றன.

●

### பராசக்தி கால சமூகப் பின்னணி

'பராசக்தி' தயாரிப்பாளருக்கு பண உதவி செய்த ஏவிஎம் செட்டியாருக்கு, புதுமுகமான சிவாஜியின் நடிப்பு பற்றி நம்பிக்கை யில்லை. அதையும் மீறி கிருஷ்ணன் - பஞ்சு இயக்கத்தில், கருணாநிதி வசனமெழுத 1952-இல் வெளியான இப்படம் பெரும் வெற்றியடைந்தது. மேடை நாடகங்களில் கணீரென வசனம் பேசிக் கொண்டிருந்த சிவாஜிக்கு இப்பட வாய்ப்பு தற்செயலாக கிடைத்திருந்தாலும், பராசக்தியின் வெற்றிக்குத் தேவைப்பட்ட அவசியமான சூழ்நிலைகள் அப்போது உருவாகியிருந்தன.

அன்றைய திரையுலகம் பாட்டிலிருந்து வசனத்திற்கு மாறிக் கொண்டிருந்தது. புராணக் கதைகளில் சிக்கியிருந்த திரைக்கதை, பார்ப்பனியத்தின் அநீதியை எடுத்துரைக்கும் சமூக நோக்கம் கொண்டதாக விரிவடைய ஆரம்பித்திருந்தது. மவுசிழந்த தியாகராஜ பாகவதர், சின்னப்பா போன்ற நட்சத்திரங்களுக்குப் பதிலாக, திராவிட இயக்கக் கலைஞர்கள் புகழ் பெற ஆரம்பித்திருந்தனர்.

கலையுலகின் இம்மாற்றத்திற்கு முன்பாகவே அரசியல் உலகமும் மாறத் துவங்கியிருந்தது. காங்கிரசின் மேட்டுக்குடி நலனுக்கான அரசியல் பின்தங்கி, கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு முன்னணிக்கு வந்தது. இன்னொருபுறம் மொழிவழி மாநிலங்களுக்கான போராட்டப் பின்னணியில் திராவிட இயக்கமும் வளர ஆரம்பித்திருந்தது. மொழி-இனப் பெருமையை வைத்து, சாமானிய மக்களின் குரலாக உருவெடுத்து, விரைவிலேயே தமிழ் மக்களின் பிரதிநிதியாக இவ்வியக்கம் தன்னை முன்னிருத்திக் கொண்டது. அதற்கு அவ்வியக்கத் தலைவர்கள் தமது பிரச்சாரத்தை எளிய வடிவில் மக்களிடம் கொண்டு சென்றது ஒரு முக்கியமான காரணமாகும்.

### திராவிட இயக்கமும் திரைப்பட முதலாளிகளும்

1967-இல் தி.மு.க. ஆட்சியைப் பிடிக்கும் வரை முதன்மையான எதிர்க்கட்சியாக இருந்த கம்யூனிஸ்டுகளை அபாயமாகக் கருதிய முதலாளிகள், திராவிட இயக்கத்தைத் தமக்கு சாதகமானது என்று சரியாகவே கருதினர். சமூக அரங்கில் வரவேற்பைப் பெற்றிருந்த திராவிட இயக்க படைப்புக்களை திரையுலகில் 'ஸ்பான்சர்' செய்வதற்கு முதலாளிகள் தயாராயினர். இரு பிரிவினரும் தமது அரசியல் நலனைக் காப்பாற்றிக் கொண்டு பண ஆதாயம் பெறுவது உறுதி செய்யப்பட்டது.

அப்போதே அண்ணாவும், கருணாநிதியும் தமது வசனங்களுக்காக ஆயிரக்கணக்கில் ஊதியம் பெற்றனர். சிவாஜி தவிர எம்.ஜி.ஆர், எஸ்.எஸ். இராசேந்திரன், கே.ஆர். ராமசாமி, என்.எஸ். கிருஷ்ணன் போன்ற திராவிட இயக்க நடிகர்கள் புகழ் பெற ஆரம்பித்திருந்தனர். 47-க்குப் பின் பிரச்சினையின்றி தனது படத்தில் பாரதி பாடலைச் சேர்த்த ஏவிஎம் செட்டியார் போன்ற முதலாளிகள் தயாரிப்பாளரானார்கள். 'பராசக்தி' காலப் படங்களில் பார்ப்பனிய எதிர்ப்பும், சமூகப் பிரச்சினைகளும் வீரம் - காதல் - கற்பு - பாசம் போன்ற 'தமிழ் நெறி'களின் பின்னணியில் வெளிப்பட்டன. அந்தத் 'தமிழ் நெறி' அற்ப உணர்வாகவும், இனப்பெருமை சவடாலாகவும் சீரழிய அதிககாலம் ஆகவில்லை. அதுவே திராவிட இயக்கத்தின் அரசியல் வழிமுறையாகவும் உறுதியானது.

### நட்சத்திர இலக்கணத்தில் சிவாஜியின் வளர்ச்சி

இதனிடையே சிவாஜியின் சிம்மக்குரல் கர்ஜனையில் பணம், மனோகரா, இல்லற ஜோதி போன்ற படங்கள் வெளிவந்தன. இவை அவரது பாணி நடிப்பு - வசனமுறை உருவாவதற்கும், சிவாஜி என்ற நட்சத்திரம் உதிப்பதற்கும் அடித்தளமிட்டன. 50-களில் எழுதப்பட்ட கதைகளில் சிவாஜி நடித்தார் என்ற நிலை மாறி 60-களில் சிவாஜிக்கு ஏற்ற கதைகள் எழுதுவது தொடங்கியது. அப்போது அவர் 'இமேஜ்' முழுமையடைந்த ஒரு உயர் திரை நட்சத்திரமாகி விட்டார்.

அவரது 'இமேஜு'க்குப் பொருத்தமான, அவரது நடிப்புக்கு **தீனி போடும்** வகையிலான பாத்திரங்கள் உருவாக்கப்பட்டன. அதைச் சுற்றியே ஏனைய நடிகர்கள், ஒலி, ஒளி, பாடல், இசை, இயக்கம் போன்றவை கட்டுப்படுத்தப்பட்டன. எம்.ஜி.ஆர்., ரஜினி, அமிதாப் தொடங்கி ஹாலிவுட்டின் நடிகர்கள் வரை அனைத்து 'சூப்பர் ஸ்டார்'களுக்கும் இதுவே இலக்கணம்.

எம்.ஜி.ஆர் - ரஜினியின் நட்சத்திரச் சுமையை சண்டை, சமூக நீதிப் பாட்டு, கவர்ச்சி நாயகிகள், ஆடம்பர அரங்குகள், வில்லன்கள் போன்றோர் சுமந்தனர். கமலஹாசனுக்கு ஹாலிவுட்டிலிருந்து சுடப்பட்ட கதையும், வித்தியாசமான மேக்-அப்பும், மணிரத்தினம் - ஷங்கர் போன்ற இயக்குநர்களும் வேண்டியிருந்தது. ஆனால் சிவாஜி மட்டும் தன் சுமையை - தனது நடிப்பாற்றலால் - தானே சுமந்தார் என்பதே அவருக்குள்ள திறமையாகும்.

படிப்பகம்

www.padippakam.com

இத்தகைய நட்சத்திர நடிகர்கள், தம்து ஒரு சில படங்களின் வெற்றியை வைத்து, வெற்றி பெறும் கதை, மக்களின் ரசனை, தமது திற மையின் மகிமை போன்றவை இன்னதுதான் என தமக்குத்தாமே தீர்மானிக்கின்றனர். உலகமே தம்மை மேதைகளாக மதிப்பதாகவும் கருதிக் கொள்கின்றனர்.

திரையுலகில் திறமையும் - சமூக நோக்கமும் கொண்டவர்கள் நுழைய முடியாமல் இருப் பதும், இருந்தால் ஒழிக்கப்படுவதும் மேற்படி நட்சத்திர முறையின் முக்கிய விளைவுகளாகும். திரையுலகத்தைக் கோடிகளைச் சுருட்டும் மாபெரும் தொழிலாக மாற்றிவிட்ட முதலாளிக ளுக்கு, இந்த 'சூப்பர்ஸ்டார்கள்' நம்பகமான மூல தனமாக இருப்பதால், நட்சத்திரங்களை அவர் களே திட்டமிட்டு உருவாக்கவும் செய்கின்றனர்.



நடிகர்களின் திறமை, முதலாளிகளின் ஆத ரவு போக இந்த நட்சத்திரங்கள் எழுவதற்கும், குறிப்பிட்ட காலம் மின்னுவதற்கும், பின்னர் மங்குவதற்கும் குறிப்பான - சமூக வர லாற்றுக் காரணங்களும் தேவை என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

காங்கிரசின் மேட்டுக்குடி அரசியலுக்கு மாற்றாக தமிழினப் பெருமை பேசி வந்த திராவிட இயக்கம், உழைக்கும் மக்களின் ஏக்கப் பெருமூச்சாய் சில பத்தாண்டுகள் நீடித்தது. அதனால்தான் தி.மு.க.வின் தமிழ்ப் பண்பான காதல், வீரம், கற்பு, தாய்ப்பாசம், மொழி - இனப் பெருமை போன்றவை கலந்து ஒரு நாட்டுப்புற வீரனாய் உருவெடுத்த எம்.ஜி.ஆரின் இமேஜ் செல்வாக்குடன் பல ஆண்டுகள் நீடித்தது.

**உயர்குடி மாந்தராக சிவாஜியின் இமேஜ்**

இதே காலப்பின்னணியில் உருவான சிவாஜியின் இமேஜ் வேறு ஒரு பின்புலத்தைக் கொண்டிருந்தது. ஆங்கிலேயர் ஆட்சி யிலும் - அதன் பின்னரும் பின்தங்கிய நிலவுடைமைச் சமூகம் மெல்ல மெல்ல மாறத் துவங்கியிருந்தது. தொழில் துறை - நகரங் களின் வளர்ச்சி, பழைய சமூக உறவுகளை அப்படியே நீடிப்பதற்கு அனுமதிக்கவில்லை. பார்ப்பன - பார்ப்பனரல்லாத மேல்சாதி களும், மேல்தட்டு வர்க்கங்களும் இந்த மாற்றத்தின் பொருளாதார ஆதாயங்களைப் பெற்றாலும் மறுபுறம், தமது பிற்போக்கான, பழ மையான சமூக மதிப்பீடுகள் அழிவதாகவும் அரற்றிக் கொண்டன. இந்த முரண்பாட்டில் சிக்குண்ட மேல்தட்டு மனிதர்கள் மற்றும் வாழ்ந்து கெட்ட நல்ல மனிதர்களின் பெருமை, ஏக்கம், புலம்பல், இத்யாதிகளை, சற்று அழுத்தமான மிகை நடிப்பில் வெளிப்படுத்து வதற்கு ஒரு சிவாஜி தேவைப்பட்டார்.

பணக்கார விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த பாசமிக்க இளை ஞனாக, இராமனுக்கேற்ற தியாகத் தம்பி பரதனாக, நவரசங் களையும் பிழிந்து தரும் கொண்ட உயர்குடி நாயகர்களாக, பக்தர்கள் மீது பழமையை நிலைநாட்டும் பரம்பொருளாக, கம்பீரம் குறையாமல் காதலிக்கும் நாதசுவரக் கலைஞனாக, குடும்ப வேத னையில் குமுறும் இளைஞனாக, வேலை செய்யும் வீட்டின் சுமை தாங்கும் விசுவாசமான வேலையாளாக, காதலியைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கும் மருத்துவராக, குற்றம் மறந்து நிம்மதி தேடும் கனவானாக, போதையில் விழுந்து புனர் ஜென்மமெ டுக்கும் 'தத்துவ' இளைஞ னாக, வெளிநாட்டு நாகரீக மனைவியைத் திருத்தும் பட்டிக்காட்டானாக, மகன்கள் தரும் சோதனை மேல் சோதனைகளைச் சந்திக்கும் ஏகப்பட்ட தந்தைகளாக சிவாஜி நடித்தார், நடந்தார், ஆடினார், ஓடினார், பாடினார், கர்ஜித்தார், குமுறினார், கலங்கினார், அழுதார், அழஇயலாமல் தவித்தார், சிரித்தார், சிரித்த வாறே அழுதார் - என்று எதையெல்லாம் முடி யுமோ அத்தனையும் செய்து காட்டினார்.

வளர்ந்து வந்த திராவிட இயக்கத்தின் ச வடால் அரசியலுக்கு பொருத்தமான கட்-அவுட் வீரனாக எம்.ஜி.ஆரும், சரிந்து வந்த காங்கிரசின் மேட்டுக்குடி அரசியலுக்கு பொருத்தமான சென்டிமென்ட் கனவானாக சிவாஜியும் இருந் தனர். அதேசமயம் சிவாஜி பிரதிபலித்த 'உயர்ந்த மனிதர்களின்' பிரச்சினைகள், அவர்கள் உலகத் திற்கும் - உணர்ச்சிக்கும் தொடர்பேதுமில்லாத சாதாரண மக்களையும் பற்றிக் கொண்டது எவ்வாறு என்பதையும் நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

**ஆண்டான் அடிமை படங்களும் ஜப்பானிய ரசனையும்**

ஜப்பானில் முத்து, எஜமான், அண்ணாமலை போன்ற ரஜினி படங்கள் வெற்றிகரமாக ஓடியது குறித்து வாசகர்கள் அறிந்திருக் கலாம். காட்சி உலகின் அதிநவீனக் கருவிகளை உலகிற்களிக்கும் முன்னேறிய ஜப்பான் நாட்டு மக்கள், ரஜினியின் ஆண்டான் - அடிமைக் காட்சிகளை ரசிப்பது எங்ஙனம்? 19-ஆம் நூற்றாண்டு வரை விவசாய நாடாக இருந்த ஜப்பான் பெரும் சமூகப் புரட்சிகள் ஏதுமின்றியே தொழில்துறை நாடாக மாறியது. எனவே ராஜவிசு வாசம், பழமைவாதம், அடிமைத்தனம், மூத்தோர் பக்தி, முதலாளி மரியாதை போன்ற நிலவுடைமைப் பண்புகள் மீதான மயக்கம் இன்றளவும் ஜப்பானில் நீடிக்கக் காண்கிறோம்.

"சோம்பேறிகள் இல்லாத உழைப்பாளிகளின் நாடு, வேலை நிறுத்தம் கிடையாது, பழுதான எந்திரங்களைச் சரிசெய்யாத பொறி யியலாளர்கள் கூட தற்கொலை செய்வார்கள்" போன்ற முதலாளி களின் சுரண்டலை மறைக்கும் மோசடியான கருத்துக்கள் உலவுவ தற்கும் இதுவே அடிப்படை. எனவேதான் அடிமைத்தனமும் - அற்ப உணர்வுகளும் கொண்ட ரஜினியின் படங்கள் ஜப்பானிய மக்களை வசியம் செய்ய முடிந்திருக்கிறது.

**சாதாரண மக்களும் உயர்குடி உணர்ச்சியும்**

ஆகவே முன்னேறிய ஜப்பானுக்கே கதி அதுவென்றால், இன்னமும் பின்-தங்கிய விவசாய நாடாக இருக்கும் இந்திய சமூ கத்தின் அடிமை மனப்பான்மை பற்றிச் சொல்லவே வேண்டாம். மேலும் வரலாறு முழுவதும் இன்றுவரை ஆளும் வர்க்கமே ஆளப் படும் வர்க்கத்தின் உணர்ச்சியைக் கட்டுப்படுத்துகிறது. நமது நாட்டுப்புறக் கலைகளின் கதைகளோ, தற்போதைய நவீனக் கலை களின் கதைகளோ எதுவும் உயர்குடி மாந்தர்களின் வாழ்வோடும் - உணர்ச்சியோடும்தான் நம்மை ஒன்ற வைக்கின்றன.

இன்றும் ஒரு பார்ப்பனன் பிச்சை எடுப்பதும், ஒரு பண்ணையார் தெருவில் நடப்பதும், இந்திராவைப் பறிகொடுத்த ராஜீவின் சோகமும், கேளிக்கைச் சீமாட்டி டயா னாவின் மரணமும், மூப்பனார் சைக்கிள் ஓட்டியதும், ஜெயல லிதாவை மன்னிக்கலாம் என்ற கருணையும், கருணாநிதியின் 'ஐயோ'வும் - போன்ற உயர் குடி மனிதர்களின் அவலம், சோகம், எளிமை, வறுமை, இரக்கம் என்ற உணர்ச்சிகள் சாதாரண மக்களின் சொந்த

**வளர்ந்து வந்த திராவிட இயக்கத்தின் சவடால் அரசியலுக்கு பொருத்தமான கட்-அவுட் வீரனாக எம்.ஜி.ஆரும், சரிந்து வந்த காங்கிரசின் மேட்டுக் குடி அரசியலுக்கு பொருத்தமான சென்டிமென்ட் கனவானாக சிவாஜியும் இருந்தனர்.**

படிப்பகம்

www.padippakam.com

உணர்ச்சியில் கலந்து விடுகின்றன. ஆனால் இதே நெருக்கடிக ளுக்கு ஆளாகும் சாதாரண மனிதர்களின் அவலத்தை, மக்கள் பெரி தாக எடுத்துக் கொள்வதில்லை. காரணம் அவை உழைக்கும் மக்க ளுக்கு விதிக்கப்பட்டிருக்கின்றன; உயர்குடி மனிதர்களுக்கோ விலக்களிக்கப்பட்டிருக்கின்றன.

இப்படி விலக்களிக்கப்பட்ட உயர்குடி மனிதர்களின் வாழ்க்கை யைத்தான் சிவாஜி மட்டுமல்ல அவரது சமகாலத் திரையுலகம், இயக்குநர்கள், நடிகர்கள் அனைவரும் பிரதிபலித்தனர். அப்போது இத்தகைய 'குடும்பப் படங்கள்' எனும் மதிப்புடன் வெளிவந்த கதைகளே வெற்றிக்குரிய சூத்திரமாகக் கருதப்பட்டன. அதில் சிவாஜி மட்டும் குறிப்பிடத்தகுந்த வகை நடிப்பைக் கொண்டி ருந்தார் என்பதே அவருக்குரிய பங்காகும்.

**சிவாஜியும் மிகை நடிப்பும்**

அதை மிகை நடிப்பு என்பாரின் விமரிசனமும், நமது கலைம ரபின் தொடர்ச்சி என்பாரின் பாராட்டும், நடிப்பை மட்டும் கவனிக் கின்றன. கூத்திலும், அதன் வளர்ச்சியான நாடகத்திலும் தொலைவி லிருக்கும் பார்வையாளருக்கும் குரலையும், உடலசைவையும் உணர்த்திக் காட்ட மிகை நடிப்பு தேவைப்பட்டது. உலகெங்கிலும் உள்ள நாடக மரபுகளும் மிகை நடிப்பையே கொண்டிருப்பதால் இது நமக்கு மட்டுமே உள்ள மரபு அல்ல. எ னவே நாடகப் பின்னணியில் தோன்றிய திரையுலகம் மட்டுமே சிவாஜியின் மிகை நடிப்புக்கு காரணம் என்று கூறிவிட முடி யாது.



மேன் மக்களின் பாத்திரமேற்று நடித்த சிவாஜியின் சமகால நடிகர்களில் பலர் அவரைப் போல மிகையாய் நடிக்கவில்லை. உயர்குடி மாந்தர்களின் உணர்ச்சிகளையும், அவர்களது வாழ்க்கைப் பிரச்சினைகளையும் மிகைப்படுத்தி அவையே சமூகத்தின் பிரச்சி னைகள் என்று நம்பவைத்தன திரைக்க தைகள். அந்த ஜாடிக்கேற்ற மூடியாகப் பொருந்திவிட்டது சிவாஜியின் மிகை நடிப்பு.

தி.மு.க.வின் சவடால் அரசியலுக்கு ஏற்ற அலங்கார நடை அடுக்குத் தொடர் வச னங்கள் என்ற ஜாடிக்கும் இந்த மிகை நடிப்பு ஒரு பொருத்தமான மூடியாகவே இருந்தது.

முதலில் ஜாடிக்கேற்ற மூடி; பிறகு மூடிக் கேற்ற ஜாடி என்றவாறு அதாவது கதைக்கேற்ற நடிப்பு, பிறகு நடிக ருக்கேற்ற கதை என்றவாறு - அது முற்றத் தொடங்கியது.

**கற்ற நடிப்பும் காட்டிய வித்தையும்**

சிவாஜி தனது நடிப்புத்திறனை எப்படி வளர்த்துக் கொண்டார்? அவரே கூறியிருப்பது போல பலரது வாழ்க்கைப் பாணிகளை பார்த்துப் பதிந்து கொண்டதுதான். ஆனால் யாரை - எதை பார்க்கப் பழகியிருந்தார் என்பதுதான் பிரச்சினை. சிவாஜியின் படங்களைப் போல அவரும் சமகால சமூகத்தைப் பற்றியும், அது மாறி வந்தது குறித்தும், மக்களின் யதார்த்தமான வாழ்க்கை - பிரச்சினைக ளையும் அறியாதவராகவே இருந்தார். அப்படித் தெரிந்து கொள்ள வேண்டிய தேவையை அவரது படங்களும் - பாத்திரங்களும் கோர வில்லை. கூடவே அவரது அரண்மனை வீடும், காங்கிரசின் மேட்டுக்குடி நட்பும், திரைப்பட முதலாளிகளின் சூழலும் - உயர் குடி மனிதர்களைப் பற்றியே சிந்திக்க வைத்திருக்க முடியும். நடிப்பும் - வாழ்க்கையும், இமேஜும் - கற்பனையும் ஒன்றை யொன்று சார்ந்திருந்தன.

ஆகவே சிவாஜி கற்றுக் கொண்டு நிகழ்த்திக் காட்டிய ஸ்டை லாக - புகை விடுவது, கம்பளியுடன் இருமுவது, தலையைப் பிய்த்து நிம்மதி தேடுவது, தரை அதிரவோ - நளினமாகவோ நடந்து வருவது போன்ற சாதனைகளுக்கும், சர்க்கஸ் வித்தைக ளுக்கும் வித்தியாசம் எதுவும் இல்லை. சீனியர் சங்கராச்சாரியைப் பார்த்து அப்படியாக நடித்ததைப் பெருமையுடன் குறிப்பிடும் சிவாஜி, தனது வித்தியாசமான வேடங்கள் பலவற்றையும் எங்கிருந்து கற் றார் என்பதை எங்கேயும் கூறியதில்லை.

**வீழ்ந்த நட்சத்திரம்**

சிவாஜி கால உயர்குடி மிகை யதார்த்தப் படங்களுக்கான வர லாற்றுக் காரணங்கள் மாறத் துவங்கிய போது அவரது நட்சத்திர இமேஜ் மங்கத் தொடங்கியது. அதைச் சரிக்கட்ட சிவாஜியும் - எம்.ஜி.ஆரும் 70-களின் வண்ணப் படங்களில் நாயகிகளைத் துகி லுரிவதிலும், காதலைக் காமமாக மாற்றுவதிலும் போட்டியாக ஈடு பட்டனர். அதன் பின்னர் 80-களின் துவக்கத்தில் பேரன் - பேத்தி களைப் பெற்றெடுத்த நிலையிலும் 'தர்மராஜா'வில் ஸ்ரீதேவியு டனும், 'லாரி டிரைவர் ராஜாக் கண்ணுவில்' ஜெயமாலினியுடன் ஆடிப்பாடிய சிவாஜியை அவரது ரசிகர்களாலேயே சகிக்க முடிய வில்லை.

இனிமேலும் அவர் ஒரு நட்சத்திரமில்லை என்பது முடிவு செய்யப்பட்டது. அதன் பின் சிவாஜி நடித்த 'முதல் மரியாதை, தேவர் மகன்' திரைப்படங்கள் அவரது யதார்த்தமான நடிப்பிற்காக வரவேற்கப்பட் டாலும், இவையும் வாழ்ந்து கெட்ட கவுரவ மான மனிதர்களின் பாத்திரம்தான். இறுதி யாக 90-களில் 'ஒன்ஸ்மோர்' படத்தில் இளைய தளபதி விஜயின் சில்லறைக் காத லுக்கு உதவிடும் சில்லறைத் தந்தையாக நடித்தார். இதுபோக அவர் பெரியாராக நடிக்க விரும்பியது நிறைவேறவில்லையே என்று சிலர் வருத்தப்படுகின்றனர். பெரியார் பிழைத்தார் என்று நாம் மகிழ்ச்சியடைவோம்.

●

**சிவாஜியும் அரசியலும்**

அடுத்து 'அரசியலில் மட்டும் சிவாஜி தோல்வியடைந்தார்' என்ற கருத்தைப் பரிசீ லிக்கலாம். முதலில் இந்த மதிப்பீடே நேர்மை யற்ற மதிப்பீடு. காரணம் மக்களுக்கு சேவை யாற்ற வேண்டும் என்று அரசியலில் ஈடு படும் ஒருவர் தோல்வியடைந்தால் அப்படி மதிப்பிடலாம். மாறாக தனது 'நடிகர் திலகம்' இமேஜைத் தக்க வைக்கவும், விரிவுபடுத் தவும், அதன் மூலம் அரசியலிலும் புகழடைய வேண்டும் என்ற சிவாஜியின் நோக்கமே பச்சையான சுயநலமாகும். இது பெருங்க னவாக வளருவதற்கு எம்.ஜி.ஆரின் போட்டி ஒரு காரணமாக இருந் தது.

திராவிட இயக்கத்தின் முன்னணிக் கலைஞராக வளர்ந்த சிவாஜி 1955-இல் திடீரென திருப்பதி சென்று வழிபட்டார். கொதித்தெழுந்த உடன்பிறப்புகளோ ''திருப்பதி கணேசா! திரும் பிப்பார் நடந்து வந்த பாதையை, நன்றிக் கெட்டுப் போனாயே, நல்லதுதானா?'' என்று கேட்டனர். திராவிட அரசியலும் - நாத்தி கமும் தனது இமேஜை குறுக்கிவிடும் என்று கருதிய சிவாஜி தேசி யமும் - தெய்வீகமும் உள்ளவராகக் காட்டிக் கொண்டார். அதன் படி அடுத்த சில ஆண்டுகளில் ஏ.பி. நாகராஜனின் புராணப் படங் களில் நடித்து, 50 களில் புதையுண்டு போயிருந்த புராணப் புரட் டல்களுக்கு மீண்டும் உயிர் கொடுத்தார்.

இதே ஏ.பி. நாகராஜன்தான் திராவிட இயக்கங்களைப் பல படங்களில் கொச்சைப்படுத்தி கேலி செய்தவர். பராசக்தியில் சிவா ஜியுடன் நடித்த எஸ்.எஸ். இராசேந்திரன் போன்றோர் புராண - கடவுள் படங்களில் நடிப்பதில்லை என்பதை உறுதியுடன் கடைபி

படிப்பகம்

www.padippakam.com

டித்தார்கள். இந்தக் குறைந்தபட்ச நாணயம் கூட சிவாஜியிடம் இல்லை.

**காங்கிரசில் சேர்ந்த கூத்தாடி**

திரையுலகில் திராவிட இயக்கத்தின் செல்வாக்கினால் காழ்பு ணர்ச்சியடைந்த காங்கிரசு கட்சி நடிகர்களை 'கூத்தாடிகள்' என்று கேவலப்படுத்தியது. கோபக்கார நடிகரான சிவாஜி இதில் மட்டும் ரோசமின்றி 62-இல் காங்கிரசில் பகிரங்கமாகச் சேர்ந்து, 67 தேர்தலில் பிரச்சாரமும் செய்தார். ஒரு வகையில் சாதாரண பாத்தி ரங்களிலிருந்து உயர்குடி மாந்தர்களின் வேடங்களுக்கு மாறிய சிவாஜிக்கு இந்த மாற்றம் பொருத்தமாகவே இருந்தது.

50-களில் 'தாராசிங் - கிங்காங்கை' வைத்து மல்யுத்தக் காட்சிகள் நடத்திப் புகழ் பெற்ற சின்ன அண்ணாமலை என்ற காங்கி ரசுக்காரர், 60-களில் நடிப்புடன் யுத்தம் நடத்திக் கொண்டிருந்த சிம்மக்குரலோனை வைத்து அகில இந்திய சிவாஜி கணேசன் ரசிகர் மன்றம் உருவாக்கினார். புதுப்படங்களுக்கு பூசை, தோரணம், அபி ஷேகம், ஊர்வலம், ஒவ்வொரு படத்தின் பெயரிலும் ரசிகர் மன்றம் என்று ரசிகர்களை பொய்யான உணர்ச்சியில் மூழ்கடித்து, சினி மாவை முக்கியமான சமூக நிகழ்வாக மாற்றி சீரழித்ததில் எம்.ஜி.ஆரும், சிவாஜியும் சம பங்காற்றினர். இந்த ரசிகர் மன்ற நோய் பரவுவதற்கு, திரையுலகின் புகழையும், செல்வாக்கையும் கவர்ச்சியையும், அரசியலுக் காக கேடாகப் பயன்படுத்திய தி.மு.க.வும் கார ணமாக இருந்தது.

பால்கனி, பெஞ்சு டிக்கட் என்ற இரு பிரி வையும் கவர்ந்த சிவாஜிக்கு சாதிகளைக் கடந்த ரசிகர்களே அதிகம். இருப்பினும் தேவர் சாதி மக்கள் இருக்கும் ஊர்களில் சிவாஜி மன்றா டியார் - தேவர் மகன் சிவாஜி ரசிகர் மன்றங்க ளாக இருந்ததை அவர் ஆதரித்தார். 70-களின் சில படங்களில் 'நான் தேவன்டா' என்று அடிக் கடி வலிந்து பேசி தன் பெருமிதத்தைக் காட்டிக் கொண்டார். இவ்வளவு இருந்தும் பின்னாளில் அவர் ஆரம்பித்த தனிக்கட்சிக்கு டெபாசிட் வாங்கிக் கொடுத்த சில தொகுதிகளில் தேவர் சாதி மக்கள் அதிகம் கிடையாது.

**பார்ப்பனர்களிடம்**
**பறி கொடுத்த பிரஸ்டீஜ்**

அதே சமயம் தன் புகழ் உச்சத்திலிருக்கும் போதும் பார்ப்பனர்களுக்கு அடிபணிந்தும் போயிருக்கிறார். 71-ஆம் ஆண்டில் அவரது 'களம் கண்ட கவிஞன்' எனும் நாடகத்திற்கு சென்னையின் 'அவாள்' சபாக்கள் இடம் கொடுக்கவில்லை. பார்ப்பனக் குடும்பக் கதைகளை மட்டும் நாடகங்களாக நடத்தும் சபாக்களின் விதிப்படி தனது நாடகத்தை விடுத்து, 'வியட்நாம் வீடு' என்ற நாடகத்தை சிவாஜி அரங்கேற்றினார். இதில் 'பிரஸ்டீஜ் பத்மநாப அய்யராக' நடித்து அவாளின் உள்ளம் கொள்ளை கொண்ட நடிகர் திலகம் தன்னுடைய 'பிரஸ்டீஜ்' பறிபோனது குறித்து கவலைப்பட வில்லை.

இக்காலத்தில் வெளியான 'ராஜபார்ட் ரங்கதுரையில்' தூக்கு மேடையேறும் பகத்சிங் "காந்தி வாழ்க" என்று பேசத் தொடங்கி அலையோசை, நவசக்தி போன்ற காங்கிரஸ் பத்திரிகைகளுக்கு விளம்பரம் செய்து கற்றில் தொங்குவார். இப்படி பகத்சிங்கையும் தன் பங்குக்கு கேவலப்படுத்தினார்.

**அரசியல் வேண்டாம் ஆளை விடுங்கப்பா**

இடையில் இந்திராவிடமிருந்து பிரிந்து ஸ்தாபனக் காங்கிரஸ் ஆரம்பித்த காமராஜருடன் சேர்ந்தார். காமராஜர் இறந்ததும் இந்தி ராவிடம் திரும்பினார். 80-களில் இவ்விருக்கும் மூப்பனாருக்கும் நடந்த காங்கிரஸ் குழுச்சண்டையில் தோற்றார். எம்.ஜி.ஆர். இறந் ததும் அடுத்த புரட்சித் திலகம் நாம்தான் என்று முடிவு செய்து தமி ழக முன்னேற்ற முன்னணி என்ற புதுக்கட்சி ஆரம்பித்தார். 88 தேர்தலில் "234 தொகுதிகளிலும் போட்டியிட்டு 3-ல் மட்டும் டெபாசிட் பெற்றது" எனுமளவுக்கு கேவலமாகத் தோற்றார்.

அப்போதும் சளைக்காமல் வி.பி.சிங்கின் ஜனதா தளத்தில் சேர்ந்து மாநிலத் தலைவரானார். அந்தக் கட்சியும் கட்டெறும்பாக கரைந்த நிலையில் 'அடங்கொப்புரானே, அரசியலும் வேண்டாம் ஒரு மண்ணும் வேண்டாம், ஆள விடுங்கப்பா' என்று அரசியல் துற வறம் மேற்கொண்டார். சிவாஜியின் அரசியல் சந்தர்ப்பவாதம் இத்தனை விகாரமாகத் தெரியக் காரணம், அதையே நேர்த்தியாக செய்யும் திறமை அவருக்கில்லை என்பதுதான்.

**இப்படி விலக்களிக்கப்பட்ட உயர்குடி மனிதர்களின் வாழ்க்கையைத்தான் சிவாஜி மட்டுமல்ல அவரது சமகாலத் திரையுலகம், இயக்குநர்கள், நடிகர்கள் அனைவரும் பிரதிபலித் தனர். அப்போது இத்தகைய 'குடும்பப் படங்கள்' எனும் மதிப்புடன் வெளிவந்த கதைகளே வெற்றிக்குரிய சூத்திரமாகக் கருதப்பட்டன.**

**அண்ணாவும், தம்பி கணேசனும், நண்பர் கருணாநிதியும்**

அந்தத் திறமை அடுக்கு மொழியில் சவுடால் அரசியல் செய்து வந்த தி.மு.விடம் இருந்தது. திருப்பதிக்குப் போன சிவாஜியை உடன்பிறப்புகள்தான் எதிர்த்தனர். 'அறிஞர்' அண்ணாவோ 'தம்பி கணேசன் எங்கிருந்தாலும் வாழ்க' என்று தந்திரமாக சமரசம் செய்து கொண்டார். காரணம் அப்போது அண்ணா எழுதிய சில படங்களில் நடிப்பதற்கு சிவாஜி தேவைப்பட்டார். அதன் பின் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று பகுத்தறிவுக்கு அவர் சமாதி எழுப்பியபின் திரை யுலகில் கொள்கையுமில்லை - வெங்காயமு மில்லை என்ற வணிகப் பண்பு நிலைபெற்றது.

அதனால்தான் பராசக்தி படத்தில் ஏழை களின் துன்பத்தை எழுதிப் பேசிய கருணாநிதி - சிவாஜி ஜோடி 1981 'மாடி வீட்டு ஏழை' படத்தில் இலட்சாதிபதியின் துன்பத்தை எடுத்து ரைத்தது. அப்போது இருவரும் உண்மையி லேயே இலட்சாதிபதிகளாக இருந்தார்கள் என்ற விசயம் அவர்களது கொள்கையின் பரிணாம வளர்ச்சியைக் காட்டுகிறது. மூன்று ஆண்டுக ளுக்கு முன்பு சிவாஜிக்கு திரையுலகம் நடத்திய பாராட்டு விழாவில் இருவரும் கட்டிப்பிடித்து அழுதார்கள். எதை நினைத்து அழுதார்களோ தெரியவில்லை!

**உயர்ந்த மனிதனின் இறுதிக் காட்சி**

இனியும் இந்தக் கட்டுரையை நீட்டினால் மிகையாகி விடும் என்பதால், புகழ் பெற்ற வளர்ப்பு மகன் திருமணக் காட்சியுடன் முடித்து விடுவோம். இத்தி ருமணத்தின் போது தமிழக மக்களால் வெறுக்கப்படும் முதல் நப ராக ஜெயலலிதா இருந்தார். தமிழகத்தையே கொள்ளையடித்த ஜெயா - சசி கும்பல் தனது டாம்பீகத்தைக் காட்ட நினைத்த இத்திரு மணத்தில் சிவாஜிக்குத் தனது பேத்தியைக் கொடுப்பதில் முழு சம்ம தமில்லை என்று கிசுகிசுக்கள் வெளியாயின. சிவாஜி அதை பகிரங் கமாக உறுதி செய்யவோ மறுக்கவோ இல்லை. தனது நடிப்பு சாம்ராஜ்ஜியத்தில் அடங்கிக் கிடந்த ஒரு நடிகையும், புதுப்பணக்கா ரியாக உருவெடுத்த நடிகையின் உயிர்த் தோழியும், பரம்பரைப் பணக்காரரான தன்னுடன் சரிக்கு சமமாக எப்படி சம்பந்தம் செய்யலாம் என்ற வேதனையாக இருக்கக் கூடும்.

இந்தியாவின் முக்கிய பிரமுகர்கள் கூடிய அந்த மாபெரும் 'வர லாற்றுப் புகழ் மிக்க' நிகழ்ச்சியில், தூய வெள்ளை ஆடையுடன், அதிகம் பேசாமல், ஒருவாய்கூட சாப்பிடாமல், சோகத்துடன் நின்ற நடிகர் திலகம் சிவாஜி கணேசன், இங்கும் 'வாழ்ந்து கெட்ட உயர் குடி மனிதராகவே' காட்சியளித்தார் - நடிக்கும் தேவை ஏற்பட வில்லை.

● **வேல் ராசன்**

www.padippakam.com

**தொடர் கட்டுரை: 17** இறுதிப்பகுதி



### சிறுபான்மையினருக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ்.இன் பொய்யும் புரட்டும்:

# பார்ப்பன இந்து மதவெறிக்கு எதிராக கருத்திலும் களத்திலும் போராடுவோம்!

அன்பார்ந்த வாசகர்களே!

1998ஆம் ஆண்டின் 'இந்து மதவெறி பாசிசப் பயங்கரவாதத்தை முறியடிப்போம்' என்ற மைய அரசியல் இயக்கத்திற்காக எழுதப்பட்ட இக் கட்டுரையை கடந்த 16 இதழ்களில் தொடராக வெளியிட்டோம். இதில் ஆர்.எஸ்.எஸ். கும்பல் பொது மக்களிடம் இயல்பாக உருவாக்கி வரும் 26 வகையான அவதூறுகளையும் - அதற்கான உண்மை விளக்கத்தையும் பார்த்தோம். அந்த அவதூறுகளை மட்டும் இங்கே மீண்டுமொருமுறை தொகுத்துக் கூறுகிறோம்.

1. மதமாற்றம் என்பது வெறும் கடவுளை மட்டும் மாற்றிக்கொள்ளும் விசயமல்ல. அது ஒரு தேசிய மாற்றம்.

2. தேசிய கீதமான 'வந்தே மாதரத்தை' முசுலீம்களும் கிறிஸ்தவர்களும் பாட மறுக்கிறார்கள்.

3. மசூதி - சர்ச் போன்றவற்றின் சொத்துக்கள் கிறிஸ்தவ - முசுலீம் மதத்தினர் வசமே உள்ளது. ஆனால் இந்துக் கோவில்களின் சொத்துக்களை மட்டும் அரசு வைத்திருக்கிறது.

4. கல்வி நிறுவனங்களை நடத்துவதில் முசுலீம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் ஏராளம் சலுகை உள்ளது. இந்துக்களுக்கு எந்தச் சலுகையும் இல்லை.

5. இந்துக்கள் புண்படும் அளவிற்கு ஏராளமான பசுக்கள் கொல்லப்படுகின்றன. பசுக்களை முசுலீம்கள் கொல்வதினால் - அவர்களின் ஓட்டு வங்கியை நினைத்துத் தடை செய்யாமல் இருக்கிறார்கள்.

6. முகலாயர் ஆட்சியிலும், ஆங்கிலேயர் ஆட்சியிலும் நகரங்களுக்கும், வரலாற்று இடங்களுக்கும் இடப்பட்ட முசுலீம் - கிறிஸ்தவப் பெயர்களை மாற்றம் செய்து இந்துப் பெயர்களையே சூட்ட வேண்டும்.

7. இந்துக்கள் அனைவரும் இந்து உணர்வைக் காட்டும் வகையில் இந்துக் கடைகளிலேயே பொருள் வாங்க வேண்டும். பிற மதத்தினரின் கடைகளைப் புறக்கணிக்க வேண்டும்.

8. இட ஒதுக்கீட்டுச் சலுகைகள் அனைத்தும் பிற்படுத்தப்பட்ட அரிசன - பழங்குடி இந்துக்களுக்கு மட்டும் வழங்க வேண்டும். மதம் மாறுவோருக்கு வழங்கக் கூடாது.

9. தேச விரோதச் செயல்களுக்கு தோதாக முசுலீம்களும், கிறிஸ்தவர்களும் தனிக்குடியிருப்புகளில் ஒதுங்கி வாழ்கிறார்கள்.

10. சிறுபான்மையினரைப் பற்றி மட்டும் கவலைப்படும் ஒரு சார்பான சிறுபான்மையினர் கமிசன் கலைக்கப்பட வேண்டும்.

11. திருட்டு, போதை, காமம், கொலை போன்ற குற்றங்கள் கிறிஸ்தவ நாடுகளில்தான் அதிகம் நடக்கின்றது. ஜனநாயகமில்லாத இசுலாமிய நாடுகள் சர்வதேச அமைதிக்கெதிரான பயங்கரவாத நாடுகளாய் இருக்கின்றன.

12. கடத்தல் போன்ற சட்டவிரோத தொழில்களில் முசுலீம்கள்தான் அதிகம் ஈடுபடுகின்றனர்.

13. இசுலாத்தை நம்பாதவர்களைக் கொன்று குவித்து அத்தகைய நாடுகளை முசுலீம் நாடுகளாக மாற்ற நடத்தப்படும் புனிதப்போரே 'ஜிகாத்'.

14. குடும்பக் கட்டுப்பாடு இந்துக்களுக்கு மட்டும் அமல்படுத்தப்படுகிறது. நான்கு மனைவிகளை வைத்திருக்கும் முசுலிம்கள் அதிக குழந்தைகள் பெற்று, தமது மக்கள் தொகையை அதிகரிக்கின்றனர்.

15. வேறு எந்த மொழிக்கும் கிடைக்காத சலுகையும், அங்கீகாரமும் உருது மொழிக்குத் தரப்பட்டிருக்கின்றது.

16. மசூதி முன் ஊர்வலம் செல்ல இந்துக்களுக்கு அனுமதியில்லை.

17. இந்தியாவில் அமைச்சர், நீதிபதி, ஜனாதிபதி போன்ற உயர் பதவிகளில் முசுலீம்கள் பணியாற்ற முடியும்.

18. பாகிஸ்தானில் இருக்கும் இந்துக்கள் அடிமைகளாக நடத்தப்படுகின்றனர்.

19. பாகிஸ்தான் - வங்கதேச நாடுகளிலிருந்து சுமார் இரண்டரைக் கோடி அன்னியர்கள் பாரதத்தில் ஊடுருவியிருக்கிறார்கள்.

20. பாக்கிஸ்தானின் சதிவேலை உளவுப் பிரிவான ஐ.எஸ்.ஐ. பாரதத்தைச் சீர்குலைப்பதற்காக இந்நாட்டு முசுலீம்களைப் பயன்படுத்துகிறது.

21. ஏசு கிறிஸ்து, முகமது நபி பிறந்த தினங்கள் தேசிய விடுமுறையாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. பாரதத்தின் தேசிய புருஷர்களான ஸ்ரீராமர், ஸ்ரீகிருஷ்ணர் பிறந்த தினங்களுக்கு விடுமுறை கிடையாது.

22. இராணுவத்தில் முசுலீம்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற கோரிக்கை தேசப்பாதுகாப்புக்கு ஊறுவிளைவிக்கும் செயலாகும்.

23. ஆக்கிரமிப்பாளன் பாபரைப் போற்றும் முசுலீம்கள் பாரதத்தின் அவதார - தேசிய புருஷரான ஸ்ரீராமரை ஏற்க மறுக்கிறார்கள்.

24. வெளிநாட்டுப் பண உதவியுடன் மத மாற்றத்தில் ஈடுபடும் கிறிஸ்தவ மிஷனரிகள், வட கிழக்கு மாநிலங்களில் ஒரு கிறிஸ்தவ ராஜ்ஜியத்தையே உருவாக்கும் வண்ணம் பிரிவினைவாதக் குழுக்களுக்கு உதவி செய்கின்றன.

25. அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்களை நாகரீகப்படுத்துவதற்கு இந்து மதத்தின் உட்பிரிவான புத்த மதத்திற்கு மதம் மாறினார்.

26. இந்துக் கலாச்சாரத்தைக் கிண்டல் செய்யும் பத்திரிகைகள், தொலைக்காட்சி, திரைப்படங்கள் பாதிரியார்களையும், மௌல்விகளையும் மகாத்மா போல சித்தரிக்கின்றன.

● ● ●

இசுலாமிய - கிறித்தவ மக்களை எதிரிகளாகச் சித்தரித்து ஆர்.எஸ்.எஸ். கும்பல் நடத்தும் மதக்கலவரங்களுக்கு இத்தகைய அவதூறுகளே மூலப் பொருளாக விளங்குகின்றன. இவை வாழ்க்கை, பண்பாடு, கல்வி, வரலாறு, பொருளாதாரம், அரசியல், தேசபக்தி, பொழுது போக்கு, மொழி என சகல அம்சங்களிலும் சிறுபான்மை மத மக்களை வெறுக்கும் வண்ணம் இயல்பாய் பிரச்சாரம் செய்யப்படுகின்றன. முசுலீம்கள் மீதான துவேசம் என்பதைத் தவிர்த்து விட்டுப் பார்த்தால் கூட ஆர்.எஸ்.எஸ்.-இன் பண்பாட்டு விழுமியங்கள் அனைத்தோடும் காங்கிரசு - போலிக் கம்யூனிஸ்டுகள் - திராவிடக் கட்சிகள் - தமிழின ஆர்வலர்கள் ஆகிய சகல பிரிவினரும் வெவ்வேறு அளவில் ஒன்றுபடுகின்றனர். இதுவே இந்து மத வெறியர்களின் பலமாக இருந்து, இத்தகைய அவதூறுகளை பொதுமக்களின் கருத்தாக இயல்பாக மாற்ற முடிகிறது.

'புரட்சிக் கலைஞர்' விஜயகாந்த் இந்து முன்னணிப் பேச்சாளராக மாறியதும்,

www.padippakam.com

தமிழர் தேசியக் கழகம் என்ற புதிய அவதாரமெடுத்திருக்கும் சுப.வீரபாண்டியன் 'அர்த்தமுள்ள இந்து மதம்' எழுதிய கண்ணதாசனை 'நம்மாளு' என்று போற்றுவதும், கருணாநிதியும் - ஜெயலலிதாவும் போட்டி போட்டுக் கொண்டு இந்து முன்னணி இராம.கோபாலனை தாஜா செய்வதும், விடுதலைப் புலிகளும் அவர்களது ஆதரவாளரான பழ.நெடுமாறனும் சிவசேனா பால் தாக்கரேவோடு உறவாடுவதும், வேத காலத்தையும் விவேகானந்தரையும் போற்றும் ஈ.எம்.எஸ்.நம்பூதிரிபாடும், கம்பராமாயணமே எனக்குப் பிடித்த நூலென்று புல்லரிக்கும் நல்லக்கண்ணுவும், பா.ஜ.க.வின் அக்ரகாரத்திற்குள் குடியிருந்து கொண்டே சேரி விடுதலை பேசும் திருமாவளவனும், கிருஷ்ண்சாமியும் - தலித் முரசும், பா.ஜ.க. அரசுக்காக உயிரைக் கொடுக்கவும் தயாராக இருக்கும் 'புரட்சிப் புயல்' வை.கோவும், வாஜ்பாயி மந்திரி பதவி கொடுத்தால் பூணூல் போடவும் தயாராக இருக்கும் பா.ம.க. ராமதாசும் - இப்படி பார்ப்பன இந்து மதத்தின் அரசியலையும் - பண்பாட்டினையும், நேரடியாகவும், மறைமுகமாகவும் ஆதரிப்போர் பலர் இருக்கின்றனர்.

பத்தாண்டுகளுக்கு முன்பு வரையிலும் கூட தீவிர ஆர்.எஸ்.எஸ். எதிர்ப்புச் சவடால் அடித்தவர்கள் இப்போது இவ்வாறு மாறியிருப்பதை வெறும் அரசியல் சந்தர்ப்பவாதம் என்று மட்டும் மதிப்பிடக் கூடாது.

தாங்கள் இவ்வாறு இந்துத்துவத்தை அரசியல் ரீதியாகவோ, பண்பாட்டு ரீதியாகவோ ஆதரித்தாலும் தங்களது வாக்கு வங்கியும் ஆதரவாளர்களும் தம்மை விட்டு விலகிவிட மாட்டார்கள் என்ற நம்பிக்கை இவர்களுக்கு இருக்கிறது. இந்தத் 'துணிச்சலு'க்குக் காரணம் உண்டு. இந்தியப் பண்பாடு, தமிழ்ப்பண்பாடு ஆகியவற்றில் நீக்கமற விரவியிருக்கும் பார்ப்பனிய விழுமியங்களை எதிர்த்த போராட்டத்தினூடாக இவர்கள் தங்களது அடித்தளத்தை உருவாக்கிக் கொள்ளவில்லை.

சாதியம், இனவாதம் உள்ளிட்ட இந்துத்துவக் கறை படிந்த பண்பாட்டுடனும் கண்ணோட்டங்களுடனும் இருந்து வரும் சமூக அடித்தளத்தின் மீது ஏறி நின்று ஆர்.எஸ்.எஸ். எதிர்ப்புச் சவடால் அடித்தார்கள். இப்போது அதே அடித்தளத்தின் மீது ஏறி நின்று பா.ஜ.க.வுடன் கை குலுக்குகிறார்கள்.

இந்தியாவின் மதச்சார்பற்ற அரசியல் தலைமைச் சக்திகள் எனப்படுவோர் இப்படி இருப்பது என்பது திடீரென்று ஏற்பட்ட விபத்தல்ல. வெள்ளையர் காலந்தொட்டே காந்தி, திலகர், பாரதி போன்றோர் இப்படித்தான் இருந்தனர். இத்தகைய அரசியல் நிகழ்ச்சிப் போக்கு ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு எத்தகைய ஆதரவான சூழ்நிலையை உருவாக்கியிருக்கும் என்பதை வாசகர்கள் புரிந்து கொள்ளலாம். அரசியல் துறையே இப்படி இந்துமயமாக மாறியிருக்கும் போது; இலக்கியம், இசை, பத்திரிகைகள், திரைப்படம், தொலைக்காட்சிகள் எப்படி இருக்கும் என்பதையும் விரிவாக விளக்கத் தேவையில்லை.

எனவே, ஆர்.எஸ்.எஸ். உருவாக்கிப் பிரச்சாரம் செய்யும் அவதூறுகள் அவர்களிடமிருந்து மட்டும் தான் கிளம்ப வேண்டும் என்பதில்லை. நீங்கள் எதிர்பாராத ஏதாவது ஒரு திசையிலிருந்தும் அந்த அவதூறுகள் வரும்.

இத்தொடரில் இடம்பெற்றுள்ள அவதூறுகளோடு ஆர்.எஸ். எஸ்.-இன் பொய்ப் பட்டியல் முடிந்துவிட்டதா என்றால் இல்லை. இவற்றுக்கு முடிவேதுமில்லை. காலம், இடம், பிரச்சினை சார்ந்து புதிய பொய்கள் புதிய வடிவில் கொட்டப்படும். ஆயினும் எத்தகைய அவதூறுகளையும் இனங்கண்டு, பரிசீலித்து, ஆய்வு செய்து, உண்மையைக் கண்டுபிடிக்கும் நம்பிக்கையை இத்தொடர் கட்டுரை உங்களுக்கு அளிக்கும்.

**ஆர்.எஸ்.எஸ்.-இன் பண்பாட்டு விழுமியங்கள் அனைத்தோடும் காங்கிரசு - போலிக் கம்யூனிஸ்டுகள் - திராவிடக் கட்சிகள் - தமிழின ஆர்வலர்கள் ஆகிய சகல பிரிவினரும் வெவ்வேறு அளவில் ஒன்றுபடுகின்றனர். இதுவே இந்து மத வெறியர்களின் பலமாக இருந்து, இத்தகைய அவதூறுகளை பொது மக்களின் கருத்தாக இயல்பாக மாற்ற முடிகிறது.**

ஆப்கானிஸ்தானில் ஆட்சி செய்யும் தாலிபான்களை வைத்து இசுலாமை பயங்கரவாதமாகக் காட்டும் பிரச்சாரமும், பாலஸ்தீன் உள்ளிட்டு அரபு நாடுகளை - அதாவது முசுலீம் நாடுகளை எதிர்கொண்டு 'வீரஞ்செறிந்த' நாடாகச் சித்தரிக்கப்படும் இஸ்ரேல் பற்றிய பிரச்சாரமும் இங்கே இடம்பெறவில்லை. இவற்றினைப் பிறிதொரு சந்தர்ப்பத்தில் எழுதுவோம். கிரிக்கெட்டில் பாக்கிஸ்தான் வெற்றி பெற்றால் இந்திய முசுலீம்கள் கொண்டாடுகிறார்கள், விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்களை எதிர்த்து முசுலீம்கள் கலவரம் செய்கிறார்கள் போன்ற அவதூறுகளைப் பற்றி **புதிய கலாச்சாரத்**தின் இதழ்களில் விரிவான கட்டுரைகள் வந்திருக்கின்றன.

அடுத்து முகலாய மன்னர்கள் பற்றி ஆர்.எஸ்.எஸ். கும்பல் கொண்டிருக்கும் துவேச வெறி கலந்த முக்கியமான அவதூறு இத்தொடரில் இடம்பெறவில்லை. இதையும் உள்ளிட்டு வேதகாலந்தொட்டு, நாடு பிரிவினையடைந்தது வரை ஆர்.எஸ். எஸ். கும்பல் உருவாக்கியிருக்கும் 'வரலாற்றுப் புரட்டல்கள்' பற்றிய தொடரை கூடிய விரைவில் வெளியிடுவோம். இதற்கடுத்து ஆர்.எஸ். எஸ். மற்றும் அதன் வானரப் படைகள் தோன்றிய விதம், அதன் தலைவர்கள் - ஊழியர்கள் உருவாக்கப்படும் வழிமுறை, ஆர்.எஸ்.எஸ். கொண்டாடும் விழாக்கள் - அதன் சேவைப்பணிகள், அது உருவாக்க விரும்பும் பண்பாடு ஆகியவையும் ஒரு தொடராக வெளியிடப்படும். இவ்விரண்டு வெளியீடுகளும் 98ஆம் ஆண்டின் இந்து மதவெறி எதிர்ப்பு இயக்கத்திற்காக எழுதப்பட்டவைதான். சில திருத்தங்கள் - சேர்க்கைகள் செய்ய வேண்டியிருப்பதால் சற்று கால அவகாசம் தேவை.

இவற்றையெல்லாம்விட வாசகர்களும், தோழர்களும் செய்ய வேண்டிய முக்கியமான பணி ஒன்றிருக்கிறது. இந்து மதவெறியர்களின் இத்தகைய அவதூறுகளை எங்கெல்லாம் காண்கிறோமோ — திரைப்படம், நாவல், கவிதை, பத்திரிகை, வானொலி - வானொளி நிகழ்ச்சிகள் — அங்கெல்லாம் அவற்றினை முறியடிக்க வேண்டும். துண்டறிக்கை, சுவரெழுத்து, சுவரொட்டி, கடிதம், நேரடி விவாதம் போன்ற வடிவங்களில் மக்களிடம் உண்மையைக் கொண்டு செல்லலாம். இத்தகைய அவதூறுகளை வைத்து இந்து முன்னணி - ஆர்.எஸ்.எஸ். கும்பல் நடத்தும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் மேற்கண்ட முறைகளில் தலையிட வேண்டும்.

இத்தகைய போர்க்குணமிக்க - செயலூக்கம் நிறைந்த முயற்சிகளினூடாகத்தான் இந்து மதவெறியின் பிடியிலிருந்து நாட்டையும் - மக்களையும் விடுவிக்க முடியும்.

இந்து மதவெறி பாசிஸ்டுகளுக்கு எதிரான போராட்டத்திற்கு இத்தொடர் கட்டுரை ஒரு சித்தாந்த ஆயுதமாகப் பயன்பட வேண்டும் என்பதே எமது நோக்கம். வாசகர்கள் கருத்தறிய ஆவலாயிருக்கிறோம்.

(முற்றும்)

**அறிவிப்பு:**
**வெகு விரைவில் இத்தொடர் கட்டுரையை தனி நூலாக வெளியிடவுள்ளோம்.**

படிப்பகம்

www.padippakam.com

# நடத்தைச் சான்றிதழ்

● நீரை. மகேந்திரன்

முனுசாமி அந்தக் காட்சிகளை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். நீலம், வெள்ளைச் சீருடையில் பள்ளிக்கூடப் பிள்ளைகள் கூட்டம் கூட்டமாக விளையாடிக் கொண்டும், மூட்டையளவு புத்தகங்களை கைத்தாங்கலாக முதுகில் சுமந்து வருவதும் அவனுக்கு மேலும் ஆர்வத்தைத் தூண்ட 'புளிச்'சென வெத்தலப் பாக்கு எச்சிலை நின்றிருந்த இடத்தை விட்டுச் சற்று தள்ளி துப்பிவிட்டு வந்து அந்த வேப்பமரத்தடியில் மீண்டும் உட்கார்ந்து வேடிக்கை பார்க்கலானான்.

''எங்க படிக்க வுட்டானுவ. பள்ளிக் கொடம் போனா மாடு யார்டா மேக்கிறதுன்னு தொரத்தியடிச்சானுவ, மண்ணுலேயே கெடந்து மண்ண திங்கிறதாவே ஆய்ட்டுது பொழப்பு. நீயாவது புத்தியோட இருந்து பொழச்சிக்கனும்; என்னால முடிஞ்ச அளவுக்குப் படிக்க வைக்கிறேன். கையேந்தி காசெடுத்தாவது ஒன்னெய படிக்க வெக்கிறதுன்னு உன் ஆயாவும் ஒத்தக் கால்ல நிக்கிறா.''

பள்ளிக்கூடக் கனவுகளோடு பக்கத்தில் நின்றிருந்த மகளிடம் அறிவுரை சொல்லியபடியே ''இரு இரு பெரிய சார எப்ப பாக்கலாம்னு கேட்டுட்டு வாரேன்'' என வகுப்பறைக் கட்டிடங்களை நோக்கிப் போனான் முனுசாமி.

அவனும் நான்கு நாட்களாக அலைந்து கொண்டிருக்கிறான். அவர பாரு, இவர பாரு எனவும், சாரு லீவு போட்டிருக்காரு எனவும் சொல்லி அலைய விடுகிறார்கள்.

''என்ன எழவுடா இது? பத்து நாளு பொழப்பும் போய்ட்டு'' என சலித்துக் கொண்டாலும் எப்படியாவது பிள்ளையைப் பள்ளியில் சேர்த்துவிட வேண்டும் என்ற வைராக்கியம் அவனுக்கு.

''இந்தா! தலைய அடகு வெச்சாவது படிக்க வெப்பம், நீ போயி பள்ளிக்கொடத்துல சேர்த்தீ வுட்டுட்டு வந்துடு அது போதும்'' என பொண்டாட்டி வள்ளி நச்சரிக்கிறாள். ''பெரிசப் படிக்க வெச்சோம். சேத்த குத்தி மோந்து பாக்குற புத்தி போவுமா? அருந்தமங்கலம் எங்க, கொருக்க எங்கன்னு முக்கார்வா நடவுக்கும் இப்ப ஓடிகிட்டு கெடக்குறா. இது எட்டாவது பாசு பண்ணிட்டு, மேல படிப்பங்குது, படிக்க வெக்க ஆசதான். ஏந்து செய்ய மனுசமக்க இருக்கணும், இல்ல பணங்காசு இருக்கணும். வெறுங்கைய மொழம் போடுடிங்குறா.''

''அந்த பள்ளிகொடம் போனா, வாத்தியாரா அவனுவ? காசு பிசாசு. இங்க வந்தா நாளேக்கி இன்னக்கின்னு இழுத்தடிக்கிறானுவ. ஆரெய்யி, சார்ப்புகாரு, வீஓன்னு அவனுவ பங்குக்கு வேற பொனம் புடுங்கி மாதிரி குறியா இருக்குறானுவ காசு புடுங்குறதுல.'' கோபமாகவும், ஆத்திரமாகவும், அதே சமயம் அதை வெளிக்காட்ட இயலாத இயலாமையோடும் முனுசாமி மகளிடம் கொட்டினான்.

''என்னதான் சொன்னாங்கப்பா...?''

''மத்தியானத்துக்குப் பெறகுதான் அட்டுமிசனே ஆரம்பிப்பாங்கலாம் அதுவரைக்கும் காத்திருக்கனுமாம். இன்னக்கி சேத்துவுட்டுட்டு நா போயி அடுத்தடுத்த சோலிய பாக்க ஆரம்பிக்கனும். ஒனக்கு பாவாட சட்டை, பொஸ்தகமுன்னு இந்த செலவுவ வேற இருக்குது.''

அடுத்த கட்ட வேலைக்கான யோசனை முனுசாமிக்கு வெறும் வயிற்றையும் மறக்கடித்திருந்தது.

''அய்யிய்ய என்னப்பா இது? இங்க பாரு வேட்டில பபுள்கம்மு ஒட்டியிருக்கு. நல்ல எடமா பாத்து ஒக்காரக்கூடாதா?''

''எங்குன எங்குன காட்டு'' என வேட்டியைத் தூக்கிப் பார்த்தான்.

''இந்த ஒரு வேட்டித்தான் இருக்கு போக்குவரத்துக்குன்னு, இத வெச்சித்தான் நானும் காலத்த ஓட்டுறன். நமக்குன்னு ஒரு காலம் பொறக்காமலா பூடும்.''

''நம்ப ஊருல ஒரு பள்ளிகொடத்த வெச்சிகிட்டு இங்க வந்து நாயா காத்து கெடக்க வேண்டியிருக்கு.''

தானாய் பேசிக்கொண்டு புகையிலைப் பொட்டலத்தைப் பிரித்து கொஞ்சம் எடுத்து வாயில் அடக்கிக் கொண்டான்.

அங்கேயுந்தான் போயி என்ன கொஞ்ச பாடா? அந்த சான்றிதழ் வாங்கிட்டு வாடா, இந்த சான்றிதழ் வாங்கிகிட்டு வாடா என வேதாரணியத்துக்கும், பள்ளிக் கூடத்துக்குமாக அலைய விட்டதில், வேலைக்கு வேலையும் கெட்டு பள்ளிக்கூடம் சேர்க்க வைத்திருந்த பணமும் செலவழிஞ்சி எல்லா சான்றிதழும் கொண்டு வந்த பெறகும் பள்ளிக்கூடம் சேக்குறதுக்குன்னு பணம் வேற தனியா கேட்க திருதிருவென முழித்துவிட்டான் முனுசாமி.

''அரசாங்கத்து பள்ளிகொடத்திலேயும் பணம் கட்டித்தான் படிக்க வேணுமா'' என கேட்கப்போக,

''ஆங்... இது நொப்பன் வூட்டு ஸ்கூல் பாரு ஓசில படிக்க.''

''ஏதோ தெரிஞ்ச ஆளு, உள்ளூரு ஆளு, எட்டாவது வரையிலும் இங்கேயே படிக்க வெச்சேங்குறதுக்காக கொஞ்சம் கொறைக்கலாம். அதுக்காக நீ பல்லெயே பதம் பிடிச்சி பார்ப்ப போலிருக்கே. போ... போ... எங்கயாவது ஓசில சொல்லி குடுத்தான்னா படிக்க வெய்யி இல்லன்னா நடவுக்கு அனுப்பு'' என பிடரியில் தள்ளாத குறையாய் பிச்சைக்காரனை விரட்டுவது போல விரட்டினார்கள்.

வெளியில் டீக்கடைக்காரரோடு பேசுகையில் ''இப்படித்தாண்டா முனுசாமி ஒலகத்துலேயே கொடுத்து வச்ச உத்தியோகம் வாத்தியானுவளுக்குதாண்டா. கொறையாத சம்பளம், வார லீவு, மாச லீவு, டியுசன் சொல்லிக் குடுக்குறேன்னு பத்து புள்ளைவள சேத்தா லம்பா காசு. பள்ளியோடம் சேக்குறதுக்கு காசு... இதுக்குன்னே பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஆரம்பிச்சி, அதுக்கு காசு கட்டு, இதுக்கு காசு கட்டுன்னு ஒரு சொரண்டு சொரண்டிர்ரானுவ' எனச் சொன்னது சரியாகத்தான் பட்டது.

அந்த காண்டு கொறையாமலேயே எப்படியாவது மொவளைப் படிக்க வைத்துவிட வேண்டுமென வைராக்கியம் பிறந்து விட்டது அவனுக்கு. அந்தச் சுட்டிலேயே செந்தில் சீட்டுக்காரரிடம் வார வட்டிக்குப் பணம் வாங்கிக் கொண்டு இந்தப் பள்ளிக்கூடத்துக்கு அழைத்து வந்து விட்டான்.

மத்தியான பசிக்கு மகளுக்கு பண்ணு வாங்கிக் கொடுத்துவிட்டு, ''ஒரு ருவாய்க்கி பாக்கு மட்டும் குடுங்க, வெத்தல இருக்கு. அப்பிடியே கொஞ்சம் சுண்ணாம்பும் குடுத்துடுங்க'' என காம்பவுண்டுக்கு வெளியேயிருந்த கடையில் வாங்கிக் கொண்டான்.

உணவு இடைவேளை முடிந்து மணியடித்ததும் மாணவர்கள் பரபரப்பாக வகுப்பறைகளை நோக்கி ஓடிக் கொண்டிருக்க சற்று தள்ளியிருந்த கட்டிடத்திற்குப் பின்னாலிருந்து விசில் சத்தம் பிளக்க பி.டி. வாத்தியார் மாணவர்களை விரைவுபடுத்தி ஓட விட்டுக் கொண்டிருந்தார்.

www.padippakam.com

''அங்க பாரு... அங்க பாரு... சாருக்கு வணக்கம் வச்சிக்க'' என மகளிடம் சொல்லிக் கொண்டே அலுவலக அறைக்கு அருகில் சென்று நின்று கொண்டான்.

வாத்தியார்கள் குறுக்கும் நெடுக்குமாய் போய்க்கொண்டிருக்க, ஏழெட்டுப் பேர் தங்கள் பிள்ளைகள் சகிதம் சேர்க்கைக்குக் காத்திருந்தனர். கொஞ்ச நேரத்தில் ஏழு பத்தாகி கூட்டம் கூட ஆரம்பித்தது.

''சத்தம் போடாதீங்க. ஹெச்.எம். உள்ளே இருக்காரு'' என பியூன் அதட்டி விட்டுப் போக அந்த இடம் அப்படியே கப்சிப் என்றானது.

''ஒருத்தர் ஒருத்தரா உள்ள வாங்க'' என பியூன் சொல்ல முனுசாமிக்கு கனவெல்லாம் நனவாகிவிட்ட பூரிப்பிலும் சந்தோஷத்திலும், கால்கள் தடதடவென ஆட, ரொம்ப ஆசுவாசப்படுத்தி வேட்டியை கீழே இறக்கி விட்டுக் கொண்டு மடியில் பணமிருக்கிறதா என இடுப்பருகே கையை வைத்துப் பார்த்து உறுதிப் படுத்திக் கொண்டான்.

நேத்து வந்த பொழுதும் இந்த பியூனுக்கு டீ வாங்கிக் கொடுத்து ''உள்ளூரு பள்ளி கொடத்த விட்டுட்டு இங்க வந்து சேக்குறமுன்னா, ஒத்தாசைக்கு ஒதவவோ நல்லது பொல்லது சொல்லவோ ஆளு வேண்டாமா'' என பியூனை பழக்கப் படுத்திக் கொண்டான்.

அவன் முறை வர, கதவோரம் ஒண்டி வேட்டியை ஒருமுறை சரிபார்த்து வெத்தல பொட்டலத்தை நன்றாக இடுப்பில் மறைத்து வைத்துக் கொண்டு, தலையை நீட்டி உள்ளே எட்டிப் பார்த்தான். தடுப்பு மறைக்கப்பட்டிருந்ததால் ஒன்றும் தெரியாது போக ஆர்வ மிகுதியால் கதவுக்கு அந்தப் பக்கமும், இந்தப் பக்கமுமாக திரும்பி சுவரோடு ஒட்டி லேசாக ஒரு எக்கு எக்கினான்.

''யோவ்.... இருய்யா... அதான் ஒருத்தர் ஒருத்தரா வுடுறேன்ல...ரொம்ப பறக்குற... கதவுக்கு அந்தப் பக்கமா வழி விட்டு நில்லு'' என பியூன் பரட்டென்று தள்ள அப்படியே தடுமாறி விட்டான் முனுசாமி.

தடுப்புக்குப் பின்னால் மேசையில் இரண்டு பேர் உட்கார்ந்து எழுத, பக்கத்து மேசையில் அமர்ந்திருப்பவருக்கு வலது புறம் சாக்பீஸ் வைக்கும் பெட்டி கல்லாப் பெட்டி போல காட்சியளிக்க, டக்கென்று பார்வையை திருப்பிக் கொண்டு, ''வ்ணக்கங்க சார்'' என்றான்.

''கொண்டா... யார சேக்கனும் பொண்ணா? பையனா?''

''பொண்ணுதாங்க.''

அவசர அவசரமாக கையில் வைத்திருந்த மஞ்சள் பைக்குள் கைவிட்டு பாலிதீன் கவரில் சுற்றி வைத்திருந்த சான்றிதழ்களை எடுத்து நீட்டினான்.

''என்னய்யா வெத்தல பாக்கு பொட்டனம் மாதிரி இந்த சுத்து சுத்தி வெச்சிருக்கிற...?''

சான்றிதழை மேலும் கீழுமாக பார்த்து விட்டு ''என்ன பேரு?''

''முனுசாமிங்க''

''ஊரு...?''

''நீர்மலைங்க''

''வெவசாயந்தானெ?''

''ஆமாங்க''

''கூலியின்னு போட்டிருக்கு''

''ஆமாங்க''

''என்னய்யா எல்லாத்துக்கும் ஆமா போடுற?''

''இல்லீங்க''

''ஒன்னோட நல்ல ஜோக்குய்யா'' என்று இருவரும் சிரித்து அடங்க, அடுத்த மேசையிலிருந்தவரும் சேர்ந்து கொண்டார்.

''என்னவாம்? எந்த ஊராம்?''

''நீர்மலையாம்''

''ஓகோ'' என இழுத்து ''ஆங்.. அங்கதான் ஸ்கூல் இருக்குதே.... பின்ன ஏன் இங்க வந்து சேக்கணும்?''

சான்றிதழைச் சரிபார்த்துக் கொண்டிருந்த இருவரும் அட ஆமா என கீழே வைத்து,



www.padippakam.com

''அங்க ஸ்கூல் இருக்குல்ல எதுக்கு இங்க கொண்டு வந்து சேக்கணும். இதுக் கெல்லாம் ஹெச்.எம். கிட்ட பர்மிஷன் வாங்கியிருக்கணும்.''

''அது வந்துங்க சார்....''

''என்னய்யா அது வந்து... இது வந்துண்டு... ஏன்யா இப்படி உயிர வாங்குறதுக்குன்னே வர்றீங்க...''

''சன்முகநாதன்'' என குரலெடுக்க பியூன் ஓடிவந்தான்.

''இவர ஹெச்.எம். கிட்ட அழச்சிக் கிட்டுப் போ.''

''என்ன ஏதுன்னு விசாரிக்காம உள்ள அனுப்பிடுறதா... அடுத்த ஆள வரச் சொல்லு.''

ஹெச்.எம். அறை வாசலில் முனுசா மியை நிற்க வைத்து விட்டு பியூன் உள்ளே சென்று பிறகு தலையை மட்டும் நீட்டி ''உள்ள வா'' என்றான்.

பெரிய மேசை, சுற்றிலும் ஃபைல் கட்டுகள். தலைவர்கள் படம். ஹெச்.எம். தலைக்கு மேல் காந்தி படம், தேசியக் கொடி என முனுசாமியை பிரமிக்க வைத்து விட்டது. போன வேகத்தில் வணக்கம் வைத்து, ஒரு குற்றவாளியைப் போல ஒடம்பு குறுக்கி நிற்பதைப் பார்த்தாலே 'என் மேல் இரக்கம் காட்டுங்கள்' என்பது போலிருந்தது.

''என்ன விஷயம் சண்முகநாதன்.''

''சார் இவரு நீர்மலைக்காரராம். இவங்க ஏரியாவுலேயே ஸ்கூல் இருக் குது. ஏற்கனவே அங்கதான் படிக்க வெச்சிருக்காரு. அங்கேருந்து டி.சி. வாங்கிக்கிட்டு இங்க சேக்க வந்துருக் காரு.... ஏதோ...'' என இழுத்துச் சொல்லி முடித்து நிற்க,

''ம்ஹூம்... சரி... சரி...'' ஹெச்.எம். ஆரம்பித்தார்.

''ஒங்க ஊரிலேயே ஸ்கூல் இருக்குது. இங்க வந்து சேர்க்குறதுங்குறது... ஒவ்வொரு ஸ்கூலுக்கும் ஒரு ஏரியா லிமிட் இருக்குங்க. அந்தந்த ஊருக்குட் பட்ட புள்ளைகள மட்டுந்தான் சேக்க ணுமுன்னு அரசாங்கமே சட்டம் போட்டு ருக்குங்க. பெற்றோர் - ஆசிரியர் சங்கத் திலே கூட பேசி முடிவெடுத்தாச்சு. இதுல ஒன்னும் சொல்லுறதுக்கில்ல... வேணுன்னா அட்மிஷன் இன்சார்ஜை பாருங்க, அவரு ஏதும் சொன்னாருன்னா ஆட்சேபணையில்ல.'' ஹெச்.எம். பொடி வைத்துப் பேசியது புரியாது போனது முனுசாமிக்கு.

ஒன்னும் விளங்காமல் பியூன் பின்னால் ஓடலானான். முன்பு கல்லாப் பெட்டியில் ஒக்காந்திருந்த அவருதான் அட்மிஷன் இன்சார்ஜ்ஜாம்.

அழைத்துச் சென்ற பியூன், ''ஹெச்.எம். பேச சொல்லியிருக்காரு... கட் அன்ட் ரைட்டா பேசிருங்க சார்'' என்று சொல்லிவிட்டு மறைப்பு தாண்டிச் சென்றுவிட,

''ஸ்கூல்ல சேத்துடணுங்குறது ஒங்க பிரச்சினை. ரூல்ஸ மீறி எப்படி சேத்தீங் கன்னு கேட்டா பதில், சொல்ல வேண்டி யது எங்க பிரச்சினை. இப்படி இருக்கு நெலம. என்ன செய்யலாம் சொல்லுங்க.'' என கொக்கி போட்டார் அவர்.

''இப்பகூட அது மாதிரி ஒரு சில பேர சேத்திருக்கோம். அவங்கல்லாம் வேற மாதிரி வந்தாங்க. சொல்லுங்க எனக்கு கிளாஸ்க்கு நேரமாயிட்டு.''

''ஏதோ ஏழபாழைங்க சார். நாஞ்சொல்லுறதுக்கு என்னங்க சார் இருக் குது. நீங்களா பாத்து செஞ்சாதான்.''

சொந்த ஊர் பள்ளியில் நடந்த சம்பா ஷனைகளை மறுபடி நினைத்து வார்த்தை களை நயந்து அளந்து பேசினான்.

''அட்மிஷனுக்குப் பணம் கட்டிடுங்க. அப்புறம் பெற்றோர் - ஆசிரியர் சங்கத் துக்கு ஒரு முன்னூறு. மொத படிச்ச ஸ்கூல் லேர்ந்து ஒரு காண்டக்ட் சர்டிபிகேட் வாங்கிக்கிட்டு வந்துடுங்க. வேல சுலபமா முடிஞ்சிடும்.''

**தான் படிக்க ஆசபட்ட காலத்துல பறப்பயன்னு சொல்லி வெரட்டி யடிச்சானுவ. புள்ள ஆசப்படுற காலத்தில பணம் இல்லாத பயன்னு சொல்லி வெரட்டி அடிக்கிறானுவ.**

ஒருகணம் திகைத்து ''எவ்வளவுங்க சார் ஆவும்'' என்றான்.

''என்ன... ஒரு நானூத்து எண்பது, அப்புறம் ஒரு முன்னூறு எல்லாஞ்சேத்து தொள்ளாயிரம் ரூவா ஆவும்.''

''அம்புட்டு ஆவுங்களா சார்'' என அடி வயிற்றை ஒரு முறை தொட்டான். ரெண்டு நாட்களுக்கு முன் சீட்டுக்கார னிடம் வாங்கிய நானூறு ரூபாய் கனத்துக் கொண்டிருக்க, இதை வைத்துக் கொண்டு பள்ளியில் சேர்த்து விடலாம் என எவ்வ ளவு பேராசைப் பட்டுக் கொண்டி ருந்தான்.

''பாத்து செய்யக் கூடாதுங்களா சார்'' எனக் கேட்க வாயெடுத்தான்.

''அவ்வளவுதாங்க விசயம்... இதுல பேசுறதுக்கே ஒண்ணும் இல்ல. மொதல்ல நீங்க அந்த ஸ்கூல்லேர்ந்து காண்டக்ட் சர்டிபிகேட் வாங்கி வாங்க அப்புறம் பாக்கலாம்'' என முடித்துக் கொண்டார்.

சொன்ன பணத்தைக் கொடுத்துவிட்டு ''சரிங்க சார்... சரிங்க சார்'' என தலையாட் டிவிட்டு இவனுக்கு பிறகு வந்த பலர் போய்க் கொண்டிருக்க முனுசாமி யோசிக் கலானான்.

தான் படிக்க ஆசபட்ட காலத்துல பறப் பயன்னு சொல்லி வெரட்டியடிச்சானுவ. புள்ள ஆசப்படுற காலத்தில பணம் இல்லாத பயன்னு சொல்லி வெரட்டி அடிக்கிறானுவ. ஏதும் செய்ய இயலாத விரக்தியில் வெளியே வர, மதிய வெயில் சுள்ளென மூஞ்சியில் அடித்தது.

நிலைமை புரிந்தும் புரியாமலும் பின்னாடியே ஓடிவரும் மகளைப் பார்த்தான். காம்பவுன்ட் கேட்டருகே வாட்ச்மேன் சிகரெட் பிடித்துக் கொண்டி ருக்க... நெருங்கி, ''வணங்கங்க சார்'' என்றான்.

''சொல்லுங்க என்ன வேணும்?''

''எனக்கு நீர்மலைங்க. பாப்பாவ பள்ளியோடம் சேக்க வந்தேன். ஒரு கொளப்படி ஒன்னு. அதான் கேக்கலா முண்ணு''

''கேளுங்க.''

''ஏதோ ஒரு சர்டிபியேட்டு பேரு சொன்னாங்க, கடேசிவரைக்கும் மண்டைல ஒறைக்கவே இல்ல. அது என்னம்மா அது'' என மகளைத் திரும்பி கேட்க,

''காண்டக்டு சர்டிபிகேட்டுப்பா''

''ஆங் அதாங்க அதாங்க''

''ஓ அதுவா இந்த பொண்ணு மொத படிச்சஸ்கூல்லேர்ந்து நடத்த நல்லா உள்ள பொண்ணு, அடக்க ஒடுக்கமா - சொல்லுற பேச்ச கேட்டுப் படிக்கிற பொண்ணுன்னு அங்க உள்ள சாருங்க குடுக்குற சர்டிபி கேட்டுங்க.''

''பணம் பணம்னு புடுங்குற அவங்க நடத்த சரியில்லாமதான் இங்க சேக்க லாம்னு வந்தா இங்க அதுக்குமேல. இவங்க நடத்தையும் இப்படி இருக்கு. நான் என்னான்னு சொல்லுறது. நமக்கு வாய்ச்சது அவ்வளவுதான்.'' என மகளைப் பார்க்க...

''சரி வாப்பா போலாம். காலை லேர்ந்து ஒரே அலைச்சல் சாப்புடாம வேற இருக்க. அங்கயும் இங்கேயும் நடக் கவே முடியல... இதுல நடத்தை சர்டிபி கேட்டுக்கு எங்க அலையிறது'' என சலித்துக் கொண்டவளாய் முன்காலை வைத்தாள். ஆனால், அவளின் பார்வை மட்டும் பள்ளிக்கூடத்தின் மீது நிழலாய்க் கவிந்திருந்தது. ●

www.padippakam.com

# இனப்பெருமை இனியும் ஏனடா வர்க்க வாழ்வை நீயும் பாரடா!



தமிழ்நாட்டில்
காவிரி, தென்பெண்ணை, பாலாறு,
தண்பொருநை, குடமுருட்டி, கொள்ளிடம்...

படித்துக் கொண்டிருந்த பாடப்புத்தகத்தை
பாதியிலேயே போட்டுவிட்டு
தண்ணி லாரிக்குப் பின்னே ஓடுகிறது
எனது தலைமுறை.

எட்டுச் சுரைக்காயில் பழந்தமிழர் பெருமை
பசியாறும் தமிழா
வீட்டை விட்டுக் கொஞ்சம் வெளியே வா!

புதையுண்டு போனது கடலுக்குள்
புகார் நகரம் எனும்
கடற்கோள் கணக்கு முடிவில்லை
இப்பொழுது
தண்ணீர் பாட்டிலுக்குள்
தமிழ்நாடே புதைந்து கொண்டிருக்கிறது
என்ன செய்யப் போகிறாய்?

நிகழ்காலச் சோகத்தையும்
நின்று வேடிக்கை பார்த்தால்
பின்னொரு நாளில்
கடலுக்குள் மூழ்கியது
இலெமூரியா கண்டமல்ல
கொக்கோ கோலா கண்டம் என
பன்னாட்டுக் கம்பெனிகள் உரிமை கோரும்.

பஃறுளி ஆற்றின் பழைய பெயர்
பெப்சி என மருவிய உரைபோட்டு
அமெரிக்கப் பல்கலைக் கழகம்
ஆய்வு முடிவுகளை அறிவிக்கும்.

வடக்கே இமயத்திலிருந்து
கனகவிசயன் தலையில் கல்லை ஏற்றி
பத்தினிக்குச் சிலை சமைத்த
பராக்கிரமம் இருக்கட்டும்!



வழக்கத்திலுள்ள உன் மலைகளையெல்லாம்
கல்குவாரியாக்கி
பாராண்ட தமிழன் தலையில்
பாறாங்கல்லை ஏற்றி
வெளிநாட்டுச் சந்தைக்கு விலை சமைக்கும்
அக்கிரமத்தைத் தடுக்க
உன்னால் ஆவதென்ன?

ஆநிரை கவர்ந்த
அந்தநாள் மயக்கம் போதுமா?
பால்பவுடரை இறக்கி
உன் தாய் முலையையும் கவரும்
சந்தைப் பிடிப்புக்கு எதிராக
உன் சமர் எப்போது?

வெட்சிப்பூ, உழிஞைப்பூ சூடிய
உன் வீர காவியங்கள் முகத்தில்
கரியைப் பூசுகின்றன.
உனது நொச்சிப் பூவையும்
அள்ளிக் கொண்டு போகும்
அந்நிய விமானங்கள்.

ஒரு எழுத்துக்குக் கால் வாங்கா விட்டாலும்
உறுமும் புலவர் குலத்தீர்!
உன் நாட்டு நெசவாளிகளின்
கால்களையே வாங்கிவிட்டது
பன்னாட்டு இறக்குமதி.
உங்கள் நக்கீரக் கோபம்
வெடிப்பது எப்போது?

ஆண்மைத் திறத்தோடு வாதாபியைத்
தீக்கிரையாக்கிய
வாதாபி கொண்டானின்
வாய்ச்சவடால் கிடக்கட்டும்.
ஒரு மலட்டு விதையை
உன் மண்ணுக்குள் அனுப்பி
தமிழகத்தைத் தீக்கிரையாக்கிய
மான்சாண்டோ கம்பெனியானுக்குச்
சாப்பறையடிக்கும் உன் சந்ததி எங்கே?

இமயத்தில் மீன் கொடி பொறித்த
இமயவரம்பன் முழக்கம் இருக்கட்டும்,
அந்நியக் கப்பல்களின் ஆக்கிரமிப்பால்
சமயத்துக்கு ஒரு மீன்கூடக் கிடைக்காமல்
கரைக்குத் துரத்தியடிக்கப்படும்
பரதவர் சோகத்துக்குப் பதிலடி எப்போது?

முத்துக் குளித்த எங்கள் தூத்துக்குடி
என கத்திப் பயனில்லை
இனி கிளிஞ்சல் பொறுக்கவும்
கேட்க வேண்டும் அந்நியக் கம்பெனியிடம்

வடக்கே விந்தியமலை,
தெற்கே குமரிக்கடல்
என தமிழகத்தின் எல்லைகள் காவலிருக்க
எவன் வருவான் கால்வைக்க என்ற
இறுமாப்பில் அர்த்தமில்லை.
பூகோள எல்லைதாண்டிப்
புரள்கிறது உலகமயம்..

படிப்பகம்

www.padippakam.com

வடக்கே ஐ.எம்.எஃப்
தெற்கே தேசங்கடந்த
பன்னாட்டுக் கம்பெனிகள் என
தமிழகத்தின் எல்லைகளை
மூலதனச் செப்பேடுகளில்
செதுக்கி வைக்கிறார்கள் முதலாளிகள்.

ஆதிச்ச நல்லூரின் ஈமத் தாழியில்
இட்டு நிரப்பிக் கொள்வாயோ
உனது இயலாமையை!
அந்நியர்கள் உன்னை
அடையாளம் காட்டுகிறார்கள் இப்படி.
''தமிழன் என்றொரு இனமுண்டு - அவர்க்கு
தனியார் மயக் குணமுண்டு''

பொருளாதாரம், அரசியலில்
புண்பட்டுப் போயிருக்கலாம்
தமிழனுக்கென்று தனித்தப் பண்பாடு
இன்னமும் இருக்கிறது என்பீரோ...?

தலைவனின் இரவுக் குறிகண்டு
தலைவி தாழ் திறக்க
தாய் தான் எழுந்து தாழ்மூட
இப்படியே இரவு முழுதும் நடக்க
தேயத் திரிந்த தாழ்ப்பாள் குடுமி எனும்
அகத்திணைகள் அந்தக் காலம்.

தாயும் மகளும்
தாழ்ப்பாள் குடுமி மூடினாலும்
இரவுக் குறியாய் எந்நேரமும்
இப்போது வீட்டுக்குள்
எம்.டிவியும், எஃப் டிவியும்
பொருள் வயிற் பிரிவில்
போன தலைவனை நினைத்து தலைவிக்கு
பசலை வந்தது இலக்கியத்தில்

பொருள் வயிற் பிரிவில்
போன தலைவனை நினைத்து
தலைவிக்கு பசலை வந்தது இலக்கியத்தில்

பொருள் வயிற் பிரிவில்
போன கணவன்
எய்ட்ஸ் இல்லாது இல்லம் திரும்ப வேண்டும்
என்று தலைவி இப்போது ஏக்கத்தில்.

ஐவகை நிலத்தில் மட்டுமல்ல
உன் அன்றாடக் கனவிலும்
உலக மயத்தின் கழிவுகள்
துடைத்தெறிந்து போர்ப் பரணி பாட
வெறும் சொல்லணி, பொருளணி மட்டும் போதாது
வர்க்க அணியால் மட்டுமே இனி வாழ முடியும்.

● துரை.சண்முகம்

---

நூலறிமுகம் :

## சித்திரவதை ஓர் முழுமையான பார்வை

பாலீதீன் பைக்குள் மிளகாய்த்தூளைப் போட்டு தலையை நுழைத்து மூச்சுத் திணற வைப்பது, பெண்ணுறுப்பைப் பல்வேறு பொருட்களால் கிழித்துப் புண்ணாக்குவது போன்ற வக்கிரமான சித்திரவதை முறைகள் - விளக்கங்கள் - அவை ஏற்படுத்தும் உடலியல் - உளவியல் பாதிப்புகள், சித்திரவதைக்காளாகும் அப்பாவிகளை மருத்துவ ரீதியாக குணமாக்கும் வழிமுறைகள், சட்ட ரீதியான நடவடிக்கைகள், சித்திரவதை பற்றிய ஐ.நா. பிரகடனம், இஸ்தான்புல் உடன்படிக்கை, சித்திரவதைக்கெதிரான அமெரிக்க, ஐரோப்பிய அமைப்பு செயல்பாடுகள் போன்றவற்றை இந்நூல் விளக்குகின்றது.

ஆயினும் சித்திரவதைக்கான சமூக, அரசியல் காரணங்கள், மூன்றாம் உலகின் போராளிக் குழுக்களை பயங்கரவாதிகளாகக் காட்டி மேற்குலக நாடுகள் தமது பயங்கரவாதத்தை மறைத்துக் கொள்வது போன்ற கேள்விகளுக்கு விடை தேடாமல், சித்திரவதையை ஒழிப்பது குறித்துச் சிந்திக்க முடியாது.

சமீபத்தில் வந்த 'சேவியர்' என்ற ஆங்கிலத் திரைப்படம் போஸ்னியா - செர்பியா பிரச்சினையால் வதைக்கப்படும் இரு பிரிவு மக்களையும் உணர்ச்சிப்பூர்வமாகக் காட்டி பார்ப்போரை அதிர்ச்சியடைய வைத்தது. அந்த அதிர்ச்சியில் விடுதலைக்காகப் போராடும் மக்களின் நியாயங்கள் கொல்லப்படுவதே நாம் உணர வேண்டிய உண்மையான அதிர்ச்சி. வன்முறை - போர்களற்ற மனித சமூகத்தை உருவாக்குவதற்கு வன்முறையும் - போர்களுமே முதல் நிபந்தனையாகின்றது. இதை விடுத்து வெறும் 'மனிதாபிமானம்' பேசுவது நடப்பிலிருக்கும் வன்முறை - போர்களடங்கிய ஆதிக்க அமைப்பிற்கு உதவி செய்வதேயாகும்.

சித்திரவதை என்பது அநீதியான ஒரு போரின் கோழைத்தனமான வக்கிரமான பிரிவாகும். சித்திரவதைக்கெதிரான நமது கோபமும், அதை ஒழிக்கப்பெற வேண்டிய தார்மீக ஆவேசமும் நாம் நடத்தவேண்டிய விடுதலைக்கான நேர்மையான நீதியான வன்முறைப் போரிலேயே உருவாக முடியும். அத்தகைய கண்ணோட்டமும் - உணர்வும், துறை சார்ந்த விருப்பு வெறுப்பற்ற நிறுவன ரீதியான கையேடு போல தொகுக்கப்பட்டிருக்கும் இந்நூலில் இல்லை என்பதை மட்டும் சுட்டிக்காட்டுகிறோம். ●




*நூல் :*
'சித்திரவதை
ஓர் முழுமையான பார்வை'

*தொகுப்பு மற்றும் தமிழாக்கம் :*
சேது

*வெளியீடு :*
மக்கள் கண்காணிப்பகம்,
தமிழ்நாடு.

7, பி.டி. இராசன் சாலை,
2-வது தெரு, மதுரை - 625 002
தொ.பேசி - 0452 - 532432

*நன்கொடை :*
ரூ. 75/-

www.padippakam.com

# தீக்கொழுந்து

## உருவாகிய கதை 2

◆

**தாயா புள்ளையா**
**இருந்து**
**பொழச்ச ஊருதான்**
**இந்த நீலகிரி.**
**இப்ப இங்கயும்**
**பொழக்க முடியலன்னா**
**சாக வேண்டியதுதான்.**

**சிரித்துக் கொண்டே**
**தனது வேதனையைக்**
**கொட்டுகிறார்**
**இந்தக்**
**கூலித் தொழிலாளி.**

◆



**ப**டித்த வர்க்கத்தினர் மத்தியில் கூட மிகச் சிறுபான்மையான ஒரு பிரிவினர்தான் செய்திப்படம் பார்ப்பவர்கள். பெரும்பான்மை மக்களோ தொலைக்காட்சிச் செய்திகளுக்கு அப்பால் வேறெதையும் பார்ப்பதில்லை. தமிழ்த் தொலைக்காட்சி அலைவரிசைகளோ செய்திப்படம் என்ற முயற்சியில்கூட ஈடுபடுவதில்லை. பார்வையாளர்களின் பொறுமையையும் ஈடுபாட்டையும் தீர்மானிப்பதில் மேற்கண்ட விசயங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன.

'தீக்கொழுந்து' குறும்படத்தை எந்தத் தொலைக்காட்சியும் ஒளிபரப்பப் போவதில்லை என்பதும், நாம் நமது சொந்த முயற்சியில் சாத்தியப்பட்ட அளவு விரிவாக மக்களிடம் எடுத்துச் செல்வதன் மூலம் புதியதொரு பார்வையாளர் வட்டத்தையும் ரசனை முறையையும் உருவாக்க வேண்டிய நிலையில்தான் இருக்கிறோம் என்பதையும் காமெராவைக் கையில் எடுக்கும் முன்பாகத் தெளிவாகவே அறிந்திருந்தோம்.

தேயிலைப் போராட்டத்தைப் பொருத்தவரை அது தகவல் ஊடகங்களில் பிரபலமாகக் காரணம் சாலை மறியல், தடியடி, மலர்க் கண்காட்சி ரத்து, இளைஞர்கள் அம்மண ஊர்வலம் - போன்ற பரபரப்பான செய்திகள். இப்போராட்டத்திற்குக் காரணமான தேயிலைப் பிரச்சினையோ இந்தப் பரபரப்புச் செய்திக்குப் பின்னால் இருக்கும் உப்புச்சப்பில்லாத பின் இணைப்பு.

போராட்டம் நடைபெறும் நாட்களில் அச்செய்தியை அசைபோட்டு, அந்தப் போராட்டத்திற்குப் பின்னால் இருக்கும் அரசியல், மக்களின் வாழ்க்கை, பிரச்சினை குறித்த அவர்களது கண்ணோட்டம் ஆகிய அனைத்தையும் சக்கையாகத் துப்பிவிடுகின்றன ஊடகங்கள்.

ஊடகங்கள் எதைச் சக்கை என்று கூறுகின்றனவோ அதை அவ்வாறே கருதுவதற்குப் பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறார்கள் மக்கள்.

தாமிரவருணிப் படுகொலையைப் போன்ற கண்ணீரை வரவழைக்கும் காட்சிகளோ, கலைஞர் கைதைப் போன்ற பரபரப்புப் பதிப்போ, ஆந்திர மின் கட்டண உயர்வுப் போராட்டம் போன்று அடக்குமுறையை நேரடியாகச் சித்தரிக்கும் விறுவிறுப்போ இல்லாமல் 'சக்கையை' வைத்துப் படம் பண்ணும் முயற்சிதான் 'தீக்கொழுந்து'.

போராட்டத்தின் மீதான ஒடுக்குமுறையை வைத்து நீலகிரி தேயிலைப் போராட்டத்தை மதிப்பீடு செய்வதானால் தாமிரவருணிப் படுகொலைக்கு ஒப்பான செய்தி மதிப்பு இதற்குக் கிடையாது.

''இது நீங்கள் பருகும் தேநீரின் கதை'' என்று கூறி தமிழக மக்கள் அனைவருக்கும் இதில் உள்ள தொடர்பை வலியுறுத்துவதனால், மக்களுக்கு உடனே இதன்மீது ஈடுபாடு வந்துவிடுவதில்லை. நாம் தின்னும் சோற்றில் உள்ள விவசாயிகள் பிரச்சினை, உடுத்தும் உடையில் உள்ள நெசவாளர் பிரச்சினை ஆகியவற்றின்பால் நிலவும் அக்கறையைத்தான் இதிலும் நாம் எதிர்பார்க்க முடியும்.

பிரச்சினை என்ற அளவில் பார்த்தால் இது நீலகிரி மாவட்டத்து சிறிய, நடுத்தர தேயிலை விவசாயிகளைப் பாதிக்கும் விலைவீழ்ச்சிப் பிரச்சினை. இவர்கள்தான் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள். இவ்விலை வீழ்ச்சியின் காரணமாக வேலை இழப்புக்கும், கூலி குறைப்புக்கும் ஆளான தோட்டத் தொழிலாளர்கள் 'மறைமுகமாகப்' பாதிக்கப்பட்டவர்களாகி விடுகிறார்கள்.

60-களில் இலங்கையிலிருந்து நாடு கடத்தப்பட்டு நீலகிரியில் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் தோட்டங்களை எஸ்டேட் பெரு முதலாளிகளுக்கு உருவாக்கித் தந்த மலையகத் தமிழர்களோ மேலும் மறைமுகமாக இருக்கிறார்கள்.

நீலமலையை வெள்ளையனிடம் பறிகொடுத்த தோடர்கள், குறும்பர்கள், இருளர்கள் போன்ற பழங்குடி மக்களோ வரலாற்றின் இருளில் மறைந்தே போய்விட்டார்கள்.

இவர்கள் அனைவரையும் இணைக்கும், இவர்களே அறியாத இழைதான் வெவ்வேறு வடிவங்களில் தொடரும் ஏகாதிபத்தியச் சுரண்டல். காலனியாதிக்கம் முதல் இன்றைய உலகமயமாக்கம் மறுகாலனியாக்கம் வரை அனைத்துக்கும் காரணமான இந்துஸ்தான் லீவர் போன்ற ஏகாதிபத்திய நிறுவனங்கள் நியான் விளக்கில் பெயர்ப் பலகை வைத்து **நான்தான்** என்று பிரகடனம் செய்து கொண்ட போதிலும் இந்த எதிரியை அடையாளம் காட்டுவாரில்லை.

மக்களின் மனதிலும், ஊடகங்களின் பிரச்சாரத்திலும் இன்றைய விலை வீழ்ச்சிப் பிரச்சினையும் அதனால் ஏற்படும் துன்பமும் போராட்டத்தின் மீதான ஒடுக்குமுறையும்தான் பிரதான

படிப்பகம்

www.padippakam.com



எல்லாரும்
எங்கள ஏமாத்துனா
எங்களுக்குன்னு
ஒரு தனி வழி வேணாம்?
அதான்
நீலகிரி இன்னும்
பத்தே வருஷத்துலே
பீகார் மாதிரி
தீவிரவாதமா மாறும்,
அதான் உண்மை.

சீறுகிறார்
இந்த
சக்கநாரை இளைஞர்.

பாத்திரம் வகிக்கின்றன.

எனவேதான் போராட்டத்தின் துன்பம் என்பதில் தொடங்கி, வாழ்க்கையின் துன்பம், வரலாற்றின் துன்பம், சந்தை தரும் துன்பம் என்று பிரச்சினையின் பல முகங்களையும் எடுத்துக்காட்டி இறுதியாக ''போராட்டமா துன்பம்?'' என்ற கேள்வியுடன் முடிகிறது இந்தக் குறும் படம். இப்படத்தின் திரைக்கதை அமைப்பு இதுதான்.

குறும்படத்திற்காக நாங்கள் சந்தித்த அதிகாரிகள் முதல் தோட்டத் தொழிலாளிகள் வரை அனைவரையும் இந்த ஒருங்கிணைந்த பார்வை என்ற சட்டகத்திற்குள் இழுத்திருக்கிறோம். அவர்கள் வழுக்கும் இடங்கள், தவறும் இடங்கள், தடுமாறும் இடங்கள் ஆகிய அனைத்தையும் பதிவு செய்திருக்கிறோம்.

''தர வீழ்ச்சிதான் விலைவீழ்ச்சிக்குக் காரணம்'' என்று கூறும் தேயிலைவாரிய அதிகாரிக்கு விவசாயிகள் தங்கள் மொழியில் பதிலளிக்கிறார்கள்; அரசுக் கொறடா முபாரக்கின் கூற்றை வழக்கறிஞர் மறுக்கிறார்; தீவிரவாதிகள்தான் வன்முறையைத் தூண்டிவிட்டார்கள் என்ற உச்சிகவுடரின் கூற்றை பா.ஜ.க இளைஞரான சிறு விவசாயியே எள்ளி நகையாடுகிறார்.

ஆளும் வர்க்கக் கருத்துக்களும், சுரண்டப்படும் வர்க்கத்தின் கருத்துக்களும் நேரெதிராக நின்று மோதும் ஒரு பரிமாணத்தை மட்டும் இப்படம் சித்தரிக்கவில்லை. அவ்வாறு சித்தரித்திருந்தால் அது ஒருவேளை பார்வையாளர்களுக்கு எளிய, குழப்பமற்ற சித்திரத்தைத் தந்திருக்கும். ஆனால், அதே அளவுக்கு அது செயற்கையானதாகவும் வலிந்து திணிக்கப்பட்டதாகவும் இருந்திருக்கும்.

''இப்போதுதான் ரேசன் அரிசியின் சுவையையே பார்க்கிறோம்'' என்று வெகுளித்தனமாகப் பேசும் நடுத்தர விவசாயப் பெண், ''20 ரூபாய்க் கூலிக்குக் கூப்பிடுகிறார்கள்'' என்று படுக நடுத்தர விவசாயிகளைக் குற்றம் சாட்டும் அதே இனத்தைச் சேர்ந்த கூலி விவசாயப் பெண், ''எங்கள் இனப் பெண்கள் படிதாண்டிப் போராட்டத்திற்கெல்லாம் வந்ததில்லை'' என்று அங்கலாய்க்கும் படுக ஆண்கள், இத்தனை நெருக்கடிக்குப் பின்னரும் தம் ஊதாரித்தனத்தை மாற்றிக் கொள்ளாத ஆண்களைக் குற்றம் சாட்டும் படுகப் பெண்கள் - என்று தண்ணீரில் விழுந்த எண்ணெய் போல தேயிலை விலை வீழ்ச்சி தோற்றுவிக்கும் மாற்றங்களையும் முரண்பாடுகளையும் வண்ணங்களாகப் பதிவு செய்கிறது படம்.

ஒய்வையே அறியாத தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை, விலை வீழ்ச்சியின் காரணம் விளங்காமல் விரக்தியின் விளிம்பில் நின்று ''சாக வேண்டியதுதான்'' என்று சிரித்தபடியே கூறும் பெண், அரசின்மீது சொல்லொணா ஆத்திரமும் செய்வதறியாத கையறு நிலையும் கொண்ட ஆடுபட்டு கிராமத்தின் தொழிலாளர்கள், ''தேயிலைத் தோட்டங்களை நாங்கள்தான் உருவாக்கினோம்'' என்று கூறும்போது மலையகத் தொழிலாளிகளிடம் வெளிப்படும் பெருமிதம், குடியிருக்கும் வீட்டுக்குக்கூட பட்டா கிடைக்காததால் அவர்கள் வெளிப்படுத்தும் கோபம், ''மத்தியானச் சாப்பாடா, அதெல்லாம் சாப்பிட்டா நாங்க இப்படியா இருப்போம்'' என்று தம் துயரத்தையே நகைச்சுவையாக்கும் முதியவரின் அவலம், ஊட்டியைப் பார்த்திராத குழந்தைகள் - என்று உழைக்கும் மக்களது வாழ்க்கை உள்ளது உள்ளபடியே பதிவு செய்யப்பட்டுள்ளது.

செய்திப் படங்களின் ''கதை மாந்தர்கள்'' நம் திரைக் கதையின் வரம்பில் நின்று பேசுவதில்லை. சில நேரங்களில் அதிலிருந்து விலகிச் செல்கிறார்கள்; சில நேரங்களில் நாம் எதிர்பாராத ஒரு கவிதையை வழங்கி படத்தைச் செழுமைப்படுத்துகிறார்கள்.

இக்குறும்படத்தை சுருக்கித் தொகுக்கும்போது, இயன்றவரை மொத்தக் கதையையும் அவர்களையே சொல்ல வைக்க வேண்டும் என்றுதான் முயன்றோம். இலக்கு தவறிவிடக் கூடாது என்பதற்காகவும், அனுபவம் இல்லாத பார்வையாளர்கள் குழம்பிவிடக் கூடாது என்பதனாலும் இடையிடையே குறுக்கிட்டு இணைப்புரை வழங்கியுள்ளோம்.

இந்தத் திரைக்கதையமைப்பு முறையும், படத்தொகுப்பு முறையும் ''நீளம்'' என்றும் ''தொய்வு'' என்றும் பல பார்வையாளர்கள் கருதுவதற்கான அபாயத்தைக் கொண்டிருக்கிறது என்பதை நாங்கள் அறியாமலில்லை.

கதை சொல்லும் பொறுப்பை நாம் ஏற்றுக் கொண்டு, மக்களின் பேட்டிகளை ஆதாரங்களாகவும், தகவல்களாகவும் இணைத்திருந்தால் 'வேகத்தை' கூட்டியிருக்க முடியும்; நீளத்தைக் குறைத்திருக்க முடியும். ஆனால் திரைக்கதையின் இயல்பான தன்மை குறைந்திருக்கும். சன் டிவியின் சிறப்புப் பார்வை போல அது அமைந்திருக்கும்.

தமிழ்த் திரையுலகமும் தொலைக்காட்சியும் தோற்றுவித்துள்ள ரசனை ஆகியவற்றைப் பின்பற்றி, அந்த அலை வரிசையில் படம் தொகுக்கப்பட்டிருந்தால் மக்கள் வெறும் காட்சிப் படிமங்களாகவே எஞ்சியிருப்பர்.

படிப்பகம்

www.padippakam.com

● தீக்கொழுந்து குறித்து ஞானியின் கருத்துக்கள் நமக்கு நம்பிக்கை ஊட்டுவதாகவே உள்ளன. அனுபவசாலியான அவரின் ஆலோசனைகள் நிச்சயம் தேவைதான். ஆனாலும், அவர் 'பரவலாக பார்வையாளர்களைச் சென்றடையக் கூடிய' என்று சொல்வதில் சிக்கல் இருக்கிறது.

21 மணிநேரப் பதிவை 110 நிமிடங்களாகக் குறுக்க முடிந்ததே பகீரதமுயற்சியான வேலையாக இருந்திருக்கும். அதை 30 நிமிடமாகச் சுருக்க வேண்டும் என்பது மீண்டும் ஏற்கனவே கட்டமைக்கப்பட்டுள்ள அரைமணி நேர பார்வையாளர்களை நாமும் வளர்த்தெடுத்தது போல ஆகிவிடும்.

உணர்வு குன்றாமல் எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும் ஊர்வலத்தில் நடப்பதோ மாநாடுகளில் அமர்ந்திருப்பதோ ஒன்றும் இயலாத காரியமல்ல. ஆனாலும் அவைகளில் சலிப்பு ஏற்படுமாயின் பார்வையாளர்களை வளர்த்தெடுத்த முறைதான் காரணம்.

இந்தத் தரகர்களின் ஊடகங்கள் அரைமணி நேரத்தையே 'ஸ்லாட்டு'களாகப் பிரித்து வைத்துள்ளன. அதிலும் விளம்பரங்கள் போக 18லிருந்து 20 நிமிடங்கள்தான். பத்திரிகைகளில் ஒருபக்கக் கதைகள். சுருக்கம் என்பது சொல்ல நினைக்கும் விசயத்தின் வீச்சிலேயே நிர்ணயிக்கப்பட வேண்டுமேயன்றி சுருக்கத்திற்காகவே விசயங்களை அணுகக் கூடாது. இது குறித்து தோழர் மருதையனின் ஓய்வு - பொழுது போக்கு - இசைரசனையில் போதுமான விளக்கங்கள் வந்துள்ளன.

என்னைப் பொறுத்தவரை 'தீக்கொழுந்தில்' பெரிய மாற்றங்கள் எதுவும் தேவையில்லை. சொல்லப் போனால் ஆனந்த் பட்வர்த்தனின் 'ராமனின்பெயரால்' (பாபர் மசூதி இடிப்பு) படம் போல இதிலும் நிறையச் சேர்த்திருக்கலாம் என்பதே என் அபிப்பிராயம். ஆரம்பத்தில் எனக்கும் படத்தின் நீளம் குறித்து இதே அபிப்பிராயம்தான் இருந்தது. அது என்னிலிருந்து வெளியில் பார்ப்பதாகும். பிறகே படத்திலிருந்து என்னை உணர்ந்தேன். நீளம் இப்போது பிரச்சினையாக இல்லை. இதுதான் சரியானது என்றே உணர்கிறேன். வசதிக்காக வேண்டுமானால் பாகங்களாகப் பிரித்துக் கொள்ளலாம் என்பதே அதிகபட்சமான எண்ணம்.

*குருசாமி மயில்வாகனன்,* சிவகங்கை

● இக்குறும்படத்தில் இன்னமும் கண்முன் நிற்பது அந்த மலைக்கிராம மக்களின் வாழ்க்கைக் காட்சிதான்.

பட்டுச் சேலையையே பார்த்திராமலும், அருகிலிருக்கும் ஊட்டிக்குக் கூட செல்லாத அளவிற்கு அவர்களை கூலியுழைப்பு கட்டி வைத்திருப்பதும், நாள் முழுதும் உழைத்தும் ஒரு நல்ல வீடில்லாமல் தகரப் பொந்துகளில் வாழ்க்கை நடத்துவதும் சுரண்டல் இப்படியும் நடக்குமா என பார்ப்பவரை நிலை குலைய வைக்கிறது.

குறும்படத்தில் பாடல்கள் சிறப்பாக இருந்தன. குறிப்பாக "உச்சிமலை மேல உசந்து நிற்கும் மரங்களடா" - பாடல் நீலகிரி இயற்கையின் பின்னணியில் மக்களின் எதார்த்த வாழ்வை எடுத்துக் காட்டுவது கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது.

ஒளிப்பதிவு சிறப்பாக இருந்தது. நீலகிரியின் பச்சைப் பசேலென்ற இயற்கை எழிலையும், அதன் பின்னே மறைந்திருக்கும் சோகத்தையும் அப்படியே எடுத்துக்காட்டியது. சில இடங்களில் காட்சியின் தேவையையும் மீறி மலைக் கிராம மக்களின் சிரிப்பையும், சோகத்தையும் ஒருசில வினாடிகள் உற்றுப் பார்க்கிறது கேமரா. அது அவர்களின் உணர்வோடு நாமும் பங்கு கொள்வது போல் இருந்தது.

எங்களைப் பொருத்தவரையில் இது வெறும் குறும்படம் மட்டுமல்ல, ஒரு ஆவணம். உலகமயத்தின் கேடுகளை அதன் அடி ஆழம் வரை சென்று திரைகிழித்த ஒரு சிறந்த வரலாற்று ஆவணம்.

ஆனால் இதன் கருத்தின் முக்கியத்துவத்துக்குத் தகுந்த அளவு இன்னும் மக்களிடம் பரவலாகக் கொண்டுச் செல்லப்படாமல் உள்ளது. எடுக்கப்பட்ட அளவில் உள்ள முக்கியத்துவம் மக்களிடம் சென்று சேர்ப்பதில் இன்னும் முழுமையாக்கப்படவில்லை என்றே கருதுகிறேன்.

இதனை அனைத்து உள்ளூர் கேபிள் டிவியிலும் ஒளிபரப்பலாம். வேனில் திரை ஏற்பாடு செய்து அருகில் உள்ள கிராமப் பகுதிகளில் சென்று திரையிட்டுப் பிரச்சாரம் செய்யலாம்.

*சுரேஷ்,* திருச்சி.

ஒரு திரைப்படத்தைக் காட்டிலும் இதில் கதாபாத்திரங்கள் பன்மடங்கு அதிகம். அதே நேரத்தில் ஒரு கதா பாத்திரத்தின் தன்மையை (Character) நிறுவ ஒரு திரைப்படம் எடுத்துக் கொள்ளும் கால அவகாசத்தை நாங்கள் எடுத்துக் கொள்ளவும் முடியாது.

இருக்கின்ற அவகாசத்தில் ஒவ்வொரு வர்க்கத்தையும் சேர்ந்த விதவிதமான மனிதர்களை அவர்களின் சிறப்புத் தன்மையோடு பதிவு செய்திருக்கிறோம். தேயிலை வாரிய அதிகாரி பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஆதரவான கருத்தை மென்மையாக முன்வைக்கிறார்; மடக்கப்படும்போது நாகரீகமாக முகம் சிவக்கிறார்; தி.மு.க. எம்.எல்.ஏ முபாரக்கோ வில்லன் பாத்திரத்தைத் தானே முன்வந்து எடுத்துக் கொள்கிறார். அதே நேரத்தில் பா.ஜ.க. தலைவர் அந்தக் கட்சிக்கே உரிய நைச்சியத்துடன் விவசாயிகளுக்கு எதிரான கருத்துக்களைப் பேசுகிறார்.

கோபம் கொண்டு வெடிக்கும் சக்கநாரை விவசாயிகள், அமைதியாக

◆

**நாங்கள் உருவாக்கியத் தோட்டத்திற்கு கணக்கில்லை என்கிறார் இலங்கையிலிருந்து வந்த ஒரு முதிய தொழிலாளி.**

◆



நியாயம் கேட்கும் தலைமையாசிரியர், அவலத்தைக் கண்களில் தேக்கிய பெண்கள், அமைதியாக இருந்து நறுக்கென்று முத்தாய்ப்பு வைக்கும் விவசாயிகள் என்று அவர்களிலும் பல ரகம்.

வெகுளித்தனம், கோபம், நையாண்டி என்று விதவிதமான உணர்ச்சிகளின் உருவமாகத் தொழிலாளிகள் பேசுகிறார்கள்.

இந்தக் கதை மாந்தர்கள் தங்களது சொந்த அனுபவத்தைத் தங்கள் சொந்தக் கண்ணோட்டத்தில் பேச அனுமதித்து, அவை தவிர்க்கவியலாமல் மறுகாலனியாக்க எதிர்ப்புப் போராட்டத்தின் தேவையை உணர்த்துவதை படம் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

தனிநபரைச் சுற்றி வருகின்ற கதை, அந்தக் கதாநாயகனின் சோகம், இன்பம் ஆகியவற்றை மட்டுமே பாடலில் உணர்ச்சிபூர்வமாகப் பதிவு செய்ய முடியும் என்ற தமிழ்த் திரையுலக ரசனைக்கு எதிராகப் பாடலையும் அதற்கான காட்சியமைப்பையும் கையாண்டுள்ளோம்.

படிப்பகம்

www.padippakam.com



உழைக்கும் வர்க்கத்தின் வாழ்க்கை, அவ்வர்க்கத்தின் துன்பம், அதன் வரலாறு ஆகியவை தோற்றுவிக்கும் உணர்ச்சியில் ஒரு தனிமனிதன் என்ற முறையில் பார்வையாளன் ஒன்றுகலக்க வேண்டும் என்று கோருகின்றன பாடல்களும் அதற்கான காட்சியமைப்புகளும்.

கோவை மாநாட்டில் இப்படத்தைப் பார்த்த ஒரு தோழர் கீழ்க்கண்டவாறு கூறினார்: ''காய்த்துப் போன கைகள், உழைத்துச் சோர்ந்த முகங்கள், தண்ணீரில்லை, சாலையில்லை, பட்டா இல்லை போன்ற பிரச்சினைகள் - இவையெல்லாம் தமிழகம் முழுதும் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும், உழைக்கும் மக்களுக்கும் சகஜமானவைதானே. ஒரு விவசாயியைக் கவர்ந்திழுக்க இதில் ஒன்றுமில்லையே'' என்று சொன்னார்.

இது மக்களின் கண்ணோட்டம் மற்றும் ரசனையில் உருவாக்கப்பட்டுள்ள ஒரு முக்கியமான பிரச்சினை. முதலாளித்துவப் பத்திரிகையுலகின் மொழியில் கூறுவதென்றால், ''நாய் மனிதனைக் கடித்தால் அதில் செய்தி இல்லை. மனிதன் நாயைக் கடித்தால் அதுதான் செய்தி.''

ஒருவேளை தங்களது துன்பத்தையே காண்பதாக இருந்தாலும் அதை மிகைப்படுத்தப்பட்ட, முலாம் பூசப்பட்ட வடிவத்தில் காண்பதற்கே மக்கள் பழக்கப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். கொத்துக் கொத்தாய்ப் பட்டினிச்சாவு நடந்தால் அந்த அதிர்ச்சி அவர்களைக் கவரக் கூடும்; தினமும் ஒருவேளை மட்டுமே சோறு தின்பதால் வரும் பட்டினிச்சாவோ அவர்களுக்குச் சகஜமானதாகத் தெரிகிறது.

ஆனால், இயல்பானது என்றும் சகஜமானது என்றும் கருதப்படும் வாழ்க்கையில் உறைந்துள்ள கொடூரத்தையும் அநீதியையும் மக்களுக்கு உரைக்கும்படி சொல்வதே நமது பணி. அதில் எப்படி வெற்றி பெறுவது என்பதை வேண்டுமானால் நாம் விவாதிக்கலாமேயொழிய அதீதமானவைகளைத் தேடக் கூடாது.

வழக்கமானதற்கும் அதீதமானதற்கும் இடையில், குறிப்பானதற்கும் பொதுவானதற்கும் இடையில் எப்போதுமே ஒரு உறவு இருக்கிறது. மாஞ்சோலை தோட்டத் தொழிலாளிகளுக்கும் எஸ்டேட் முதலாளிகளுக்கும் இடையிலான மோதலில் தெறித்த ஒரு பொறிதான் தாமிரவருணிப் படுகொலை. அந்தப் பொறி தெறிக்காமலிருந்திருந்தாலும் தொழிலாளி - முதலாளி மோதல் இருந்து கொண்டுதானிருக்கிறது.

அந்த மோதலில் தி.மு.க. எனும் ஆளும் கட்சியும் பிற ஓட்டுக் கட்சிகளும் போலீசும் அதிகார வர்க்கமும் தொடர்ந்து முதலாளிகளின் கையாட்களாகச் செயல்பட்டு வந்ததன் ஒரு கொடூரமான வெளிப்பாடுதான் அந்தப் படுகொலை. எனவே, படுகொலைக்கான காரணங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலக வாயிலிலும், தாமிரவருணி நதிக்கரையிலும் மட்டும் தேடிக் கண்டு பிடிக்க முடியாது.

மோகன் கமிசனின் மோசடியைத் தாண்டி தி.மு.க.வுடன் புதிய தமிழகம் கூட்டணி வைத்தது எப்படி? மாஞ்சோலை எஸ்டேட் அதிபர்களின் கையாட்களாகவும் ஐந்தாம்படையாகவும் செயல்படும் போலி கம்யூனிஸ்டுகளும், த.மா.காவினரும் தாமிரவருணித் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்த வருவதெப்படி? தேர்தலுக்கு முன் திருநெல்வேலியில் நடந்த தலித் கலை விழாவில் தாமிரவருணி பற்றிய நாடகத்தைப் பாதியிலேயே நிறுத்துமாறு புதிய தமிழகம் கட்சியினரே மிரட்டியது ஏன்? - என்ற கேள்விகளுக்கான விடை தெரிய வேண்டுமானால், நாம் குறிப்பானதிலிருந்து பொதுவானதற்குப் போய்த்தான் தீர வேண்டும்.

'தீக்கொழுந்து' குறும்படத்தில் நாங்கள் இதற்குத்தான் முயன்றிருக்கிறோம். நீலகிரி தேயிலை விவசாயிகளின் போராட்டத்தை ஒரு துவக்கப் புள்ளியாகக் கொண்டு தேயிலைத் தொழிலில் பன்னாட்டு நிறுவனங்கள் செலுத்தும் ஆதிக்கத்தையும், மறுகாலனியாக்கத்தின் கீழ் தேயிலை உள்ளிட்ட அனைத்து உள்நாட்டுத் தொழில்களும் சந்தித்து வரும் அழிவையும் சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

தொழில்நுட்ப வரம்புகள், முன் கூட்டியே போதிய கள ஆய்வு செய்ய இயலாமை, அனுபவமின்மை போன்ற காரணங்களால் இப்படத்தில் பல குறைகள் ஏற்பட்டிருக்கலாம். விமரிசனங்களையும் ஆலோசனைகளையும் கணக்கில் கொள்கிறோம். அடுத்த முயற்சியில் எங்களைச் செப்பம் செய்து கொள்கிறோம். தீயாக இருந்தாலும் இம்முயற்சி எங்களைப் பொறுத்தவரை ஒரு கொழுந்துதானே.

**தீக்கொழுந்து வாங்கிவிட்டீர்களா!**

'தீக்கொழுந்து' நீலமலைத் தேயிலை விவசாயிகளின் போராட்டம் பற்றிய களச்சித்திரம். இரு பாகமாய் - இரு குறுந்தகடுகள். விலை ரூ. 250. தபால் செலவு ரூ. 20. தேவைப்படுவோர் இரா. சீனிவாசன் பெயருக்கு புதிய கலாச்சாரம் முகவரிக்கு பணம் அனுப்பலாம்.

# ... அதன் இரண்டாம் பாகமும்

சக்கரவர்த்தி

மனிதம் முற்று முழுதாய் நாகரீகம் அடைந்து விட்டதாகஐயம் திரிபுற நம்பப் பட்ட காலகட்டம். இக்காலகட்டத்தில்தான் தலைவன் துரோகியானதும் - எதிரி ஸ்நேகிக்கப்பட்டதும் இக்காலகட்டத்தில்தான்.

அரசியல் காய் நகர்வுகளினால் மனிதம் சில சமயம் காயம்பட்டாலும் பாரதூரமாய் எதுவும் ஆகிவிடவில்லை, மனித உரிமை அமைப்புகள் ஆங்காங்கே தோன்றியதைத் தவிர. அசுரர்கள் ரகமாய் மலிந்து மனிதத்தை நசுக்க முற்படும் பொழுதுகளில், மனித உரிமை அமைப்புகள் நசியும் மனிதத்தைக் காக்கத் தவறும் பட்சத்தில் கடவுள்கள் ஆயுதங்களுடன் அவதரிப்பர். அங்கும் இங்கும் - முக்கிலும் மூலையிலும் - சந்திலும் பொந்திலும் - தூணிலும் துரும்பிலும் - குடிசையிலும் கூரையிலும் - எங்கும் எங்கும் ஆயுதம் தரித்த கடவுள்கள் ஏகமாய் அவதரித்தனர். இக்காலகட்டத்தில்தான் சித்தாந்திகளின் ஆசீர்வாதம் பெற்ற நான் நசியும் மனிதத்தை மீட்க ஆயுதம் அணிந்து அவதரித்தேன். அண்டம் கிடுகிடுங்க - ஆகாசம் நடுநடுங்க ஆயுத தாண்டவம் ஆர்ப்பரித்தது. ஒன்றாகி பலவாகி நூறாகி ஆயிரமாயிரமாகி அழிந்தொழிந்தனர், அரக்கர்கள்... ஆயினும் மானுடம் நசிவதைத் தடுத்திட முடியவில்லை.

ஆயுதம் மானுடத்தின் விரோதி - அது ஒருபோதும் மானுடத்துக்கு மீட்சி கொடுப்பதன்று. ஆயுதமும் மானுடமும் முரண்பாடானவை. தொடர்பு நிலையற்றவை. ஆயிரம் தாண்டிய உயிர்கள் அழிந்த பிற்பாடு தெளிவுநிலை அடைகிறது புத்தி. ஆயுதம் மானிடத்தை மீட்கும் என்பது முட்டாள்தனம்.

'துப்பாக்கி முனையில்தான் சுபிட்சம் பிறக்கும்' என்னும் அர்த்தத்தில் சித்தாந்திகள் சொன்னார்களே. சித்தாந்திகள் புத்திசாலிகள் அல்லவா. மேதாவிகளிடம் தானே சித்தாந்தமே பிறக்கிறது. என்னவோ துப்பாக்கி முனையில் உயிர் பறிக்கும் ரவைகள்தான் பிறக்கும். உயிர்களைக் கொல்வதைத் தவிர வேறு என்ன தெரியும் துப்பாக்கிக்கு?

மானுடம் மீட்க துப்பாக்கி என்பது எத்தனை பெரிய முட்டாள்தனம். அப்படி

படிப்பகம்

www.padippakam.com

யாயின் சித்தாந்திகள் புத்தியற்றவர்களா? அவர்கள் எப்படியோ போகட்டும். மானுடம் மீட்க ஆயுதம் அணிந்த நான் முட்டாளா புத்திசாலியா? சித்தாந்தி என உணர்கின்ற நேரத்தில் முட்டாளாகவும் - முட்டாள் என உணர்கின்ற நேரத்தில் மனிதனாகவும் தெளிவுறும் தத்துவார்த்தமா?

எது எப்படியோ முட்டாளாக இருப்பதில் நிறையவும் சௌகரியம் இருக்கிறது. கேள்விகள் ஒரு போதும் இல்லை.

காத்தான்குடியைக் கொழுத்து – சரி
எல்லா சோனகனையும் துரத்து – சரி
மக்காவுக்கு போறவனை ஒரேயடியாய்
மக்காவுக்கு அனுப்பு – சரி
தொழும் நேரம் வெட்டிக் கொல் – சரி

எல்லா பதில்களும் திருப்தி கொடுக்கும்.

நம் மொழி தமிழ்,
நாம் தமிழர்கள் – ஆமாம்!
அவன் மொழி தமிழ்,
ஆனால் சோனகன் – ஆமாம்!
நம்சாமி பிள்ளையார்,
அவன் சாமி அல்லாஹ் – ஆமாம்!
சோனகன் காட்டிக் கொடுக்கிறான். – ஆமாம்!

உண்மைதான் முட்டாளாக இருப்பதில் நிறைய சௌகரியம் இருக்கத்தான் செய்கிறது.

கொல் என்றால் கொல்லலாம். கொழுத்தென்றால் கொழுத்தலாம்.

ரம்பாவின் தொடைகளையும், மந்தாராவின் முலைகளையும் மணிக்கணக்காய் விவாதிக்கலாம். ஐஸ்வர்யாராய் முலைகள் சிலிக்கோன் ஜெல்லால் நிரப்பி செதுக்கப்பட்டதா, இல்லையா என்பதை அறிய வாராந்திரிகளை வாரம் தவறாமல் படிக்கலாம்.

டில்லிக்கு அந்தப் பக்கம் பஞ்சாப்பு
அங்க நான் பறிச்சன் ரோசாப்பூ
துருவி வச்ச தேங்காய்ப் பூ
நெஞ்சில முளைக்கிது வாழைப்பூ
அக்கா பொண்ணு குஸ்பு
இரண்டுபேருமா பண்ணினம் தப்பு – அவ
திங்கிறா இப்போது மாங்காயோட உப்பு
ஜலக்கு ஜக்கா ஜலக்கு ஜக்கா
அடங் கொக்க மக்கா கொக்க மக்கா...

பாடல்களைக் காது குளிரக் கேட்டு ரசிக்கலாம். கோபம் வராமல் குமுதம் குட்டிக் கதைகளைப் படிக்கலாம். அதிகம் ஏன் மூன்றெழுத்து பூ நடிகையுடன் இத்தனை காலமாய் சரசம் புரிந்த நான்கெழுத்து சுந்தர இயக்குநர், பூ நடிகையை கைகழுவிவிட்டு மூன்றெழுத்து தொடையழகியான ரம்ப நடிகையுடன் உல்லாச விடுதிகளில் கதை (!) டிஸ்கஸ் செய்கிறார்! என்கிற தினமுரசின் கிசுகிசுக்களில் சம்பந்தப்பட்ட நடிகைகளை கண்டு பிடிப்பதற்காக மண்டையைப் போட்டு உடைத்துக் கொள்ளலாம்.

முட்டாளாக இருப்பதில் நிறையவும் சௌகரியம் இருக்கத்தான் செய்கிறது. சே... இப்போதெல்லாம் அநாவசியமென பிறர்க்கு படுகின்ற கேள்விகள் என்னுள் எழுவதும் - அதைக் கேட்பதுவும் பிறர்க்கு பிழையெனப்படுகின்றதோ என்னவோ. நான் தனித்துவிடப்படுவது போன்றும் - தப்பித்து ஓடுவது போன்றும் - இருள் சூழ்ந்த நிலத்தடியில் அடைக்கப்படுவது போன்றும் - என் மூளையை நாய் நக்குவது போன்றும் உண்டாகும் உணர்வலைகளைக் கட்டுப்படுத்திட முடியாது போகிறது. கொலைகள் அற்ற ஒரு வாரம் சுகமாய் இருந்தது. 'ஆயுதத்தோட ஆளக் காணல்லயே' என்று கவலைப்பட்டு தேடிக் கொண்டிருப்பானுகள். தேடட்டும்.

''குட்ல வெள்ளாமைக்கு இல்லாட்டிக் கூட பரவாயில்ல எண்டு போட்டு சக்க கட்டுறத்துக்கு எண்டு கேட்ட ஒடனே மூட்ட மூட்டயா யூரியாவ தூக்கித் தரல்லயா தம்பி நாங்க? காத்தான்குடியில ஊடு பிள்ளயல் இருந்தாலும் வயவாக்கால் எல்லாம் ஆத்துக்கு இஞ்சால

கனடாவில் வாழும் ஈழத்து எழுத்தாளரான சக்கரவாத்தியின் 'யுத்தத்தின் இரண்டாம் பாகம்' எனும் சிறுகதைத் தொகுப்பு நூலில் இக்கதை இடம் பெற்றுள்ளது. ஈழத்து முசுலீம் மக்களை புலிகள் விரட்டியடித்ததைப் பற்றிக் கவலைப்படும் இதுபோன்ற ஈழத்துப் போராளி அமைப்புகளின் அராஜகம், தார்மீகசீருலைவு ஆகியவற்றை அதிர்ச்சியூட்டும் வகையில் உணர்த்திக்காட்டும் பல கதைகள் இத்தொகுப்பில் உள்ளன. அவை பற்றிய விரிவான விமரிசனம் அடுத்த இதழில் இடம்பெறும்.

தானே... நாங்க ஆரு மெனேய்? காசு கேட்டு நாங்க எப்ப இல்ல எண்டு செல்லிரிக்கம் செல்லுபாப்பம். அறுத்துப்போட்ட வெள்ளாமைய எரக்கமில்லாம கொழுத்திப் போட்டயே... வகித்துப் புள்ளத் தாச்சிய உயிரோட போட்டு பத்த வக்கிர மாதிரி எலவா நீ இந்த சூட்டக் கொழுத்தினது. நீ இப்படி செய்யலாமா?''

பிசிறு தட்டிய குரலில் அழுகின்ற கண்களுடன் பேசும் சின்னலெவ்வ காக்காவின் வெண்ணிற ஆடைகளில் எல்லாம் திட்டுத்திட்டாய் சாம்பல் அப்பியிருந்தது.

''எனக்கு இந்த விசயம் தெரியாது காக்கா. நான் ஒரு கிழமையா...'' மனது உறுத்த தயங்கித் தயங்கிச் சொன்னேன்.

''நீ யாழ்ப்பாணத்தில இருந்தது எங்கட இனசனத்த தொரத்தி உட்டுத்தாய் அப்ப நான் அவ்வளவா கவலப்படல தம்பி. எண்பத்திநாலாம் ஆண்டு எங்கட ஆடுமாடு எல்லாத்தையும் பத்தாயிரத்துக்கு மேல பழுகாமப் பக்கம் சாச்சித்துப் போய் ஒரு கிலோ ஆட்டுறைச்சி ஒரு ரூபாக்கும் மாட்டுறச்சி அம்பது சதத்துக்கும் நீ விக்கெக்க நாங்க என்னமும் கதைச்சமா தம்பி. ஏன் நீ இப்பிடி செஞ்சி போட்டாய்? விளைஞ்ச வெள்ளாமய சாம்பலாக்கிப் போட்டாயே''

காக்கா கேட்க கேட்க மனது பாரமாய் போகிறது எனக்கு. கண்கள் சிவந்தும் வீங்கியும் இருந்தது. நெடுநேரமாய் அழுதிருப்பார் போலும். எனக்கும் கூட மனது பாரமானதால் வெளிக்காட்டிக் கொள்ளாது அழுது கொள்கிறேன். கருகிச் சாம்பலாகிப் போன சூடுகளில் இருந்து புகை புகைந்து கொண்டு இருந்தது. காற்று சுழன்றடிக்க சாம்பலுடன் சேர்ந்து நெருப்புத் துகள்களும் மேலெழுந்து பறந்து போயின. இந்தக் கொடுங்காரியத்துக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதை எப்படிப் புரிய வைப்பேன் சின்னலெவ்வைக் காக்காவுக்கு? காக்கா விறுவிறுவென எங்கோ வேகமாய்ப் போகிறார். இதுகளிடம் பேசி என்ன ஆகப்போகிறது என நினைத்திருப்பாரோ என்னவோ.

''வெள்ளாம போனாப் போகிது உசிரயாவது காப்பத்துவம்'' என நினைத்துக் கொண்டாரோ என்னவோ.

''இப்பல்லாம் நான் அப்படி இல்ல காக்கா'' என மனது சொல்லச் சொல்லியது. நான் சொன்னால் காக்கா என்ன நம்பவா போகின்றார். வலது தோளில் இயமன் தொங்குகின்றானே.

தோளில் தொங்குவதைக் கழற்றி இரு கைகளாலும் பிடித்து முகத்துக்கு நேராகக் கொண்டு வந்து பார்க்கிறேன். ஜடம்! பாவம் இதற்கு என்ன தெரியும்?

விடியல் சூரியன் கொழுத்த ஆரம்பிக்கும் முன்னதாகவே பிரதேசம் எங்கும் வெகிர் அடித்துக் கொண்டிருந்தது. எத்தனை சூடுகள் எரிந்து சாம்பல் ஆகின என்று கணக்கெடுக்க முடியாதபடி கண் எட்டும் திசையெங்கும் புகைந்து கொண்டு இருந்தது.

எத்தனை தொழிலாளிகளின் உழைப்பு, எத்தனை ஆயிரம் வயிறை நிரப்பப் போகும் நெல்மணிகள், எத்தனையோ இலட்சம் மனங்கள் எல்லாமும் ஒரு இரவுக்குள் சாம்பலாகிக் கிடக்கிறது களத்து இருட்டில்.

ஏன்? நெஞ்செரியும் இந்தத் தீ ஏன்?

எந்த சாமியை எந்த பகவானை குளிர்விக்க இந்த வேள்வி?

''இந்த பொட்டணிக்காக்கா எங்க பொயித்தான் ஒரு கிழமையா? வரிசகா

www.padippakam.com

**''நீ யாழ்ப்பாணத்தில இருந்தது எங்கட இன சனத்த தொரத்தி உட்டுத்தாய், அப்ப நான் அவ்வளவா கவலப்படல தம்பி. எண்பத்திநாலாம் ஆண்டு எங்கட ஆடுமாடு எல்லாத்தையும் பத்தாயிரத்துக்கு மேல பழுகாமப் பக்கம் சாச்சித்துப் போய் ஒரு கிலோ ஆட்டுறைச்சி ஒரு ரூபாக்கும், மாட்டுறச்சி அம்பது சதத்துக்கும் நீ விக்கெக்க நாங்க என்னமும் கதைச்சமா தம்பி. ஏன் நீ இப்பிடி செஞ்சி போட்டாய்? விளைஞ்ச வெள்ளாமய சாம்பலாக்கிப் போட்டாயே.''**

லமும் அதுவுமா? மூத்தவள் பள்ளிக்கு போட்டுப்போற சட்டைக்கு ரெண்டு யார் வெள்ளைப் பப்பிளின் வாங்கிடலாம் எண்டால் இவனைக் காணல்லயே.. எண்ட கைச்சட்டயும் முதுகால பிரிஞ்சி பொயித்து. புளியந்தீவுக்கு போய் சீத்த வாங்கிறது எண்டால் லேசிப்பட்ட வேலயா?'' பொட்டணிக் காக்காவை காணாது அம்மா சலித்துக் கொள்வாள்.

முன்னர் எல்லாம் காத்தான்குடியில் இருந்து பொட்டணியில் துணி புடவை களை கட்டிக் கொண்டு இருபத்தி ஐந்து மைல்கள் சைக்கிளை ஓட்டிக் கொண்டு அவர்கள் வந்தால்தான் ஏழை அம்மாக்க ளுக்கு உடுதுணிகள். உடுபுடவைக ளுக்காய் அம்மாக்கள் காத்திருக்க - எங்கே போனார்கள் இந்த பொட்டணிக் காக்காக்கள்?

துணிகளையும் சைக்கிளையும் கொன்றவர்கள் எடுத்துக் கொள்ள - மூளை சிதறிய காக்கா அரைகுறையாய் கிரான் குளக்காட்டுக்குள் புதைக்கப்பட்டது எப்படித் தெரியும்?

காத்திருந்து விட்டு அம்மா துணி வாங்க புளியந்தீவு போய் இருப்பாள். உம்மா இப்போதும் காத்திருப்பாளே.

மூணு போகம் வெளஞ்ச ஓடன... ஒண்ட
மூத்த மாமன் கொண்டோடி வருவான்
முன்னூறு சாக்கு நெல்லு
ஆராரோ.... ஆரிரரோ...

சித்தாண்டி சின்ன மாமன்
ஆண்டி முருகன் தீர்த்தம் கொண்டு
ஓடோடி வருவான்
ஆராரோ... ஆரிரரோ...
பாழாப்போன பழுகாமத்தானோட
ஓடிப்போன உன்னோட மாமி
மூத்த மகன உனக்கு கட்டித்தர பாலையடி
வட்டைக்க கிடக்க வயலோட உறுதிய
தொண்டோடி வருவான்
ஆராரோ ஆரிரோ...
...
வட்டானையாரு வயலையெல்லாம்
பாப்பாரு
கூத்தாடப் போன உன்னோட
அண்ணனார அண்ணாவியாரு பாப்பாரு
பால நீ குடிச்சித்து படுத்துறங்காயோ
என்னோட சோனகத்து முட்டாசே...

சோனகத்து முட்டாசைத்தவிர என்னை உவமிக்க வேறு பொருள் கிடைக்கவில்லை அம்மாவுக்கு.

முன்னூறு சாக்கு நெல்மூட்டையைக் காட்டிலும் சித்தாண்டி முருகன் தீர்த்தத்தைக் காட்டிலும் பாலையடி வெட்டை வயலைக் காட்டிலும்

மாமி வீட்டு மகளைக் காட்டிலும் கவர்ந்தது என்னவோ சோனத்து முட்டாசி தானே...

சோனகரும் நாங்களும் ஸ்நேகமாகத் தானே இருந்தோம். ஒன்றோடு ஒன்றாய் தானே இருந்தோம். ஒரு மொழிதானே பேசினோம். அவர்கள் அரபும் நாங்கள் சமஸ்கிருதமுமா பேசினோம். இல்லையே... ஒரே பள்ளியில்தானே படித்தோம். சரஸ்வதி பூசைக்கு, இக்பால் வேஸ்டி கட்டி... திருநீறு பூசி கைகூப்பி நின்று ''ஆயகலைகள் அறுபத்தி நான்கி னையும் ஏய உணர்விக்கும் என் அம்மை'' என்று நெஞ்சுருகத்தானே பாடுவான்.

என் புறம் கையில் அருவருப்பாய்த் தோன்றிய உண்ணிகள் உதிர்ந்து போக வேண்டி கல்முனைக் கடற்கரைப் பள்ளி வாசலுக்கு உப்பு தருவதாக நேர்த்திக் கடன் வைத்தாளே அம்மா.

நான் கூட றம்ழான்-நோன்பின் இறுதி மாலையில் இக்பால் வீட்டு முற்றத்தில் இருக்கும் கடற்கரையில் நின்று தலையில் துணிகட்டி பிறை நிலா பார்த்திருக்கின் றேனே...

என்ன ஆயிற்று எங்களுக்கு?

கண்கள் கலங்கி வழிந்தன.

அடித்த காற்றில் கண்களுக்குள் சாம்பல் அப்பிக் கொள்ள கசக்கி எரிகிறது கண்கள்.

சாம்பலாகிப் போன சூடுகள் புகைந்து கொண்டிருக்க பற்றி எரிகிறது நெஞ்சம்.

யார்... யார்? யார் இட்ட தீ இது?

இதற்கோர் முற்றுப்புள்ளி வேண்டாமா?

இதுவே கடைசியாக இருக்கட்டுமே. இந்த துவக்கும் வேண்டாம். சித்தாந்தி களின் சித்தாந்தமும் வேண்டாம். சாந்தி வேண்டும். எரியும் தேசத்தில் புற்கள் முளைவிட வேண்டும். பூக்கள் பூத்திட வேண்டும். சாம்பல் மேடெல்லாம் மீண்டும் களத்து மேடாக வேண்டும்.

துவக்கையும் மூன்று மகசினையும் மேசையில் வைத்தேன். அவர்கள் எல்லோரும் விநோதமாய் என்னைப் பார்த்தார்கள். நான் இறுக்கமாய் நின்றி ருந்தேன்.

''வாரும்... ஒரு கிழமையாய் எங்க போன நீர்?''

சுந்தர அம்மானின் கேள்விக்கு பதில் சொல்ல வேண்டும் போல் எனக்குத் தோன்றவில்லை.

''இயக்கக்கட்டுக்கோப்பை மீறுறதால என்ன விளைவு ஏற்படும் என்று உனக்குத் தெரியும்தானே...?''

சுந்தர அம்மானை வெறுப்பாய்ப் பார்த்தேன். ஒன்றரை வருடம் தான் யாழ்ப்பாணத்தில் இருந்தார். ஒட்டிக் கொண்ட பிறதேச தமிழை அவரால் கழற்ற முடியவில்லை.

''முசுலீம் சனத்தின் சூட்டுக்கு ஆரு நெருப்பு வச்சது?''

கோபமாய் கேட்ட என்னை... விழி களை மட்டும் உயர்த்தி மேற்பார்வை பார்த்து, இதமாய் ஒருவித வீரக்க ளிப்பாய் புன்னகைத்தார். பின் உடல் முழு வதும் அசைய தலையை மேலும் கீழுமாய் ஆட்டி உடல் மொழி பேசினார். அவரது உடல்மொழி எனக்குப் புரிய வில்லை என நினைத்தாரோ என்னவோ.

''நான் தான்! நேற்று இரவு. மொத்தம் ஐம்பத்திமூணு. எல்லாம் சாம்பல். அது சரி ஒரு கிழமையா எங்க போன நீர்?'' என்றார் வாய் மொழியாய்.

''....''

சிறு விநாடி இடைவெளிக்குள் மௌ னமாகி எனைப் பார்த்தார். பின்.

''எத்தனை தரம் அவையளுக்கு கடிதம் அனுப்பினங்கள். இந்தப் பக்கம் தொழில் செய்யப்போடாது எண்டு. இனி வரமாட்டாங்கள்.'' சொல்லி முடிக்கும் போது நிதானமாகி இருந்தார்.

''அதுக்கு நெல்லுச் சூட்டுக்கா நெருப்பு வைக்கிறது? நமக்கு மாதிரி அவ னுகளுக்கும் இதுதான் பாரம்பரிய மண்'' என்னில் ஆத்திரம் தணியவில்லை.

''போராட்டம் எண்டு வந்தபிறகு நெல் என்ன சோனி என்ன? நம்மளின்ர

www.padippakam.com

பாதைக்கு குறுக்க வந்தால்...? அது என்ன ஒரு மாதிரியா கதைக்கிறீர். மேலிடத்தில் இருந்து இரண்டு பேர் வந்திருக்கினம் தெரியுமா உமக்கு''. சுந்தர அம்மாள் சொல்ல நெஞ்சுக்குள் திக்கென்றது.

''எதுக்கு இப்ப இஞ்ச... மேலிடத்தில இருந்து...''

...சுருக்கிக் கொண்டேன்.

''நம்மளோட வேகம் காணாமல் இருக்குதாம். வடக்கு மாதிரி கிழக்கில நடவடிக்கை அவ்வளவு திருப்தியா இல்லையாம். சோனிமாரோட நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி சில ஒப்புரேசன் செய்ய வேணுமாம்.''

சுந்தர அம்மான் சொல்லச் சொல்ல திகில் பற்றி எரிந்தது இதயத்துக்குள்.

சிங்களவன் சிறுபான்மையான எம்மை இம்சிக்க - நமக்குச் சிறுபான்மையான சோனகரை நாம் இம்சிப்பதா?

சிங்களவன் மோடன் எனில்; நாம் யார்?

யுத்தத்தை நாம் விரும்பவில்லை. யுத்தம் எம்மீது திணிக்கப்படும் போது... நாம் ஆயுதம் ஏந்தி அதற்கு எதிராய் போராடாமல் இருப்போமாயின் அது எம் இனத்துக்கு செய்கின்ற துரோகமாகி விடும். என நாளை ஒரு இசுலாமியர் குழந்தைகளின் கவச அரண்களுக்குள் இருந்து கொண்டு அறிக்கை விட ஆரம்பித்து விட்டால்...? தாங்குமா தாய் மண்? சாம்பலுக்குத்தான் தேசமா?

''முசுலீம் சனத்தோட இன்னும் இன்னும் பிரச்சனையை வளர்க்க நான் விரும்பவில்லை... எண்பத்தி மூணுக்கு முதல் ஒழுங்காதானே இருந்தம். இப்ப என்ன வந்திட்டுது நமக்கு?''

''அப்ப நாமள் மடையரா இருந்திட்டோம்.''


எட்டத்தில் சத்தம் கேட்டது. புதிய குரல். வடதிசையில் இருந்து கிழக்கைதுரிதப்படுத்தவும் முசுலீம்களுக்கு ஒப்பரேசன் செய்வதற்காகவும் வந்தவர்களில் ஒருவர் போலும்.

சத்தம் கேட்டு - ஒரு மௌன இடைவெளியின் பின் இருவர் வந்து என் முன் நின்றனர். தலையை ஆட்டி, கண்களில் குரோதமும் உதட்டில் புன்னகையுமாய் அறிமுகமாக்கிக் கொண்டனர். அதே பாசையில் நானும் அறிமுகத்தை ஏற்றுக் கொண்டேன். பலத்த காற்று அடித்துக் கொண்டிருந்தது. தென்னை தலைவிரித்து ஆடுகின்ற சத்தம் பேயோசையாய்க் கேட்டது. இந்நேரம் எரிந்த குடுகளின் சாம்பல் திசை கெட்டு பரவிப் பரந்து கொண்டிருக்கும் பிரதேசம் எங்கும்.

''மன்னார் பள்ளிவாசல் ஞாபகம் இருக்குத்தானே... இவர்தான்'' — சுந்தர அம்மான் ஒருவரைக் காட்டி பெருமைப் பட்டுக் கொண்டார்.

அந்த ஒருவர்.

''நீங்கள்தானாமே அம்பிளாந்துறை சந்தியில வச்சி மக்காவுக்குப் போன மௌலவிமாரை...'' என்றார். நான் தலை குனிந்து கொண்டேன். வேறு எதுவும் எனக்குத் தோன்றவில்லை அதைத்தவிர.



www.padippakam.com

**ஆனால் யாழ்ப்பாண ஆக்கள் அப்படியா? அந்தக் காலத்திலேயே எரிச்சுப் போட்டான்கள் — நூலகத்த எரிச்சுப் போட்டான்கள் என்று சொல்லி சொல்லி யாழ்ப்பாணத்த விட்டு ஓடிப்போய் எத்தினை பேர் யூரோப்பில பணக்காரர் ஆயிட்டாங்கள். இவ்வளவு பிரச்சினை நடந்தும் இன்னும் ஒரு சோனகனும் நாட்ட விட்டு ஓடயில்ல. நம்மள விட சோனகச் சனத்துக்குத்தான் தமிழ் மண்ணுல பற்று மாதிரி தெரியுது''**

யாழ்ப்பாணத்தில இருந்து சோனகச் சனத்த துரத்தின நாளான வார வெள்ளிக் கிழமை இஷாத் தொழுங்க முடிய கண்டனம் கலந்த அனுதாபக் கூட்டம் நடத்தப் போறாங்களாம். உங்களுக்கு காத்தான்குடியில இருக்கிற மூலை முடுக்கெல்லாம் நல்லாத் தெரியுமாமே...?''

அந்த ஒருவர் பேசிக் கொண்டே இருக்க தலை சுற்றுவது போன்றும் இதயம் எகிறிக் குதிப்பது போலும் இருந்தது.

நெடுநேரம் மௌனித்திருந்தேன். என் மௌனம் அவர்களை எதுவேனும் செய்திருக்க வேண்டும்.

''ஏன் ஒண்டும் சொல்லாமல் இருக்கிறீர்?''

''முசுலீம் சனத்தோட இனியும் பிரச்சனைப்பட்டுக் கொண்டிருக்க எனக்கு விருப்பம் இல்ல. அதுகள் நமக்கு என்ன செய்யுதுகள்?''

அவர் என்னை ஒரு மாதிரியாய்ப் பார்த்தார். என்மேல் வெறுப்பாரோ என்னவோ...

''நீர் விஷயம் எதுவும் தெரியாத ஆளா? அவங்களாலதானே யாழ்ப்பாணத்துக்குள்ள...

தமிழன காட்டிக் குடுக்கிறவன் பாடம் படிக்க வேணும்.''

— சற்று கோபமாகத்தான் இருந்தார்.

''ஏன், சோனகன் மட்டும்தான் காட்டிக் கொடுத்தானா? யாழ்ப்பாணத்தான் காட்டிக் குடுக்கல்லயா?''

நான் கூட கோபமானேன், விழி விரித்தார்.... புருவம் உயர்த்தினார்.

''யாழ்ப்பாணத்தான் காட்டிக் குடுக்கிறானா? ஆதாரம் இல்லாமல் கதைக்காதேயும்'' அவர் கேட்க வேறு திசையில் நான் முகத்தைத் திருப்பிக் கொண்டேன். அவருக்கு புரையேறியது. கனநேரம் ஆடிப்போய் நிதானமானார்.

''அதுதான் அவங்களயெல்லாம் தட்டியாச்சே...'' சமாதானம் ஆனார். ஆனாலும் வியர்த்திருந்தார். சுந்தரத்தாருக்கு என்ன பேசுவது என்றோ எது செய்வது என்றோ எதுவும் தோன்றாது திணறிக் கொண்டிருந்தார். நான் நிதானமாய் சுவாசித்துக் கொண்டிருந்தேன். காலம் நல்லதாய்ப் போயிற்று த.செல்வாவிற்கு. நாங்கள் பிறந்த உடனே அவர் செத்துப் போனார். யார் கண்டது இன்றவர் இருந்திருப்பின் அவர் கூட துரோகியாக இருப்பார்...

''அதுமாதிரி காட்டிக் குடுக்கிற முசுலீம் சனத்த புடிச்சி வச்சி மண்டையில போட ஒரு நியாயம், சோனகருக்கு ஒரு நியாயமா? அல்பர்ட் துரையப்பா காட்டிக் கொடுத்தான் எண்டு தானே கொண்டம். எல்லாக் கத்தோலிக்கரையும் ஏன் அப்பவே யாழ்ப்பாணத்த விட்டுத் துரத்தயில்ல? எனக்கு உங்களோடை இந்த யாழ்ப்பாண இசம் என்ன எண்டு விளங்கயில்லை. எவ்வளவோ அநியாயம் நடந்தும் ஒரு சோனகரும் நாட்ட விட்டு ஓடயில்ல. ஏன் சிங்கள ஊருக்க கூட போகயில்ல. சுத்தி சுத்தி இந்தத் தமிழ் மண்ணுக்கதான் திரியுதுகள். ஆனால் யாழ்ப்பாண ஆக்கள் அப்படியா? அந்தக் காலத்திலேயே எரிச்சுப் போட்டான்கள் — நூலகத்த எரிச்சுப் போட்டான்கள் என்று சொல்லி சொல்லி யாழ்ப்பாணத்த விட்டு ஓடிப்போய் எத்தினை பேர் யூரோப்பில பணக்காரர் ஆயிட்டாங்கள். இவ்வளவு பிரச்சினை நடந்தும் இன்னும் ஒரு சோனகனும் நாட்ட விட்டு ஓடயில்ல. நம்மள விட சோனகச்சனத்துக்குத்தான் தமிழ் மண்ணுல பற்று மாதிரி தெரியுது''

சொல்லி முடிக்கும்போது உடல் எங்கும் எனக்குக்கூட வியர்த்திருந்தது. அவர்கள் நான் சொல்வதை மிக நிதானமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். நெடு விநாடி மௌனத்தில் பின் கொடுப்புக்குள் புன்னகைத்துக் கொண்டார்.

''நீர் வெளிநாட்டில் இருக்கிற சனத்த குற்றம் சொல்லாதேயும். அவங்கள் தாற காசிலதான் இண்டைக்கு சண்டையே நடக்கிறது...'' என்றார்.

பெருவிடயம் ஒன்றை எனக்குப் புரிய வைத்து விட்டோம் என் பெருமிதப் பட்டுக் கொள்கின்றார் என்பது அவர்களில் தெரிந்தது.

படிப்பகம்

எனக்கு பலமாய் சிரிக்க வேண்டும் போல் இருந்தது. இருந்தாலும் புன்னகைத்துக் கொண்டேன்.

''வெளிநாட்டில் இருக்கிறவன் காசு தரத்தானே வேணும். சண்டை நடத்துறதுக்கு இலங்கையில சண்டை நடந்தால் தானே வெளிநாட்டில அவங்கள் பிழைப்பு நடத்த முடியும். இங்க சமாதானம் வந்திட்டால் அவயலோட சொகுசு வாழ்க்கை அங்க நாறிடுமே. ஒட்டு மொத்தமா எல்லாரையும் கப்பல் ஏத்தி விட்டுருவாங்கள் வெள்ளக்காரனுகள். இலங்கையில சண்டை முடிய வெளிநாட்டுத் தமிழன் விரும்ப மாட்டான். சண்டை நடத்த கட்டாயம் காசு தருவான்கள்தான்.''

என் பேச்சு அவங்களை கோபப்படுத்தி விட்டதுபோலும். இதுவரையும் எதுவும் பேசாமல் நின்றிருந்த மற்ற ஒருவர் என்னை விரோதியாவும் விநோதமாயும் பார்த்தார்.

''நீர் என்ன எடுத்ததுக்கெல்லாம் விதண்டாவாதம் பேசிக் கொண்டு. நீர் சத்தியபிரமாணம் எடுத்தது ஞாபகம் இருக்கோ...''

அந்த ஆள் சொல்ல... மண்டை விறைத்தது. மூளை பழையபடி கழுவப் பட்டு நிர்மலமாயிற்று. சத்தியப்பிரமாணம் ஞாபகம் இருக்கிறது. ஞாபகம் இருக்கிறது... ஞாபகம் இருக்கிறது.

என் ஈ....
தேசத்துக்காகவும்....
............ தேசிய
.... உயிரையும்........
... விடுதலை வேள்வியில்...
... என்னை நானே...
... உயிராயுதம்...
... தாகம்... தாயகம்!

விட்டுவிட்டு மண்டைக்குள் ஓங்காரம் ஒலித்தது. பிற சிந்தனைகள் எதுவும் என் மூளைக்குள் புகக்கூடாது. நான் என் தேசத்துக்காகவும் அதன் விடுதலைக்காகவும் படைக்கப்பட்டேன். என் உடல், உயிர் சகலமும் சகலமும் என் தேசத்துக்கே... தேசத்துக்கே...

மூளை வியூகம் வகுக்கத் தொடங்கியது....

நூல் :
**யுத்தத்தின் இண்டாம் பாகம்**

ஆசிரியர் : **சக்கரவர்த்தி**

வெளியீடு : **எக்ஸில், பிரான்சு**

விலை ரூ. 65.

கிடைக்குமிடம் : **யாதுமாகி**
**6, பருவத சிங்கராஜ தெரு**
**திருநெல்வேலி டவுன் - 627 006**

www.padippakam.com

2 ஆம் பக்கத் தொடர்ச்சி



சாக்லெட்டை கவருக்குள் பாடம் செய்யும் முன்பே, தொலைக்காட்சி விளம்பரங்கள் மூலம் சிறுவர்களைக் கடைக்கு 'பேக்' செய்து அனுப்பி விடுகின்றனர்.

''டி.விய பாக்குறானுங்க நேரே கடைக்கு வந்து தஸ்ஸு புஸ்ஸுன்னு ஏதோ பேர் சொல்லி மிட்டாய் கேக்குறானுங்க, நமக்கே ஒன்னும் புரிய மாட்டேங்குது இன்னும் அப்படி ஏதும் சாக்லேட் வல்லடான்னா பசங்க இந்த கடையிலெல்லாம் இருக்காதுடா என கடையை ஒரு மாதிரியா பாக்குறானுங்க'' என்று சென்னை புறநகர்ப் பகுதியில் பெட்டிக் கடை வைத்திருக்கும் நண்பர் ஒருவர் சொன்னார்.

சமீபத்தில் நெஸ்லே கம்பெனி சந்தையில் இறக்கி விட்ட ''சாக்கோ ஸ்டிக்'' என்ற கூழ் வடிவிலான சாக்லெட் குச்சியின் விலை ரூபாய் இரண்டு. சிகரெட்டை விட இது அதிகம் போகுதுசார் என்கிறார் ஒரு கடைக்காரர். இப்படிப் பரந்த அளவில் உலகத்திற்கே மிட்டாய்க் கொடுக்கும் கம்பெனிகள் உள்ளூர்த் தயாரிப்பாளர்களைப் பார்த்து 'கண்டதும் எதற்கு காட்பரீஸ் இருக்கையில்' என்று கிண்டலும் செய்கின்றன. வியாபாரிகளை மட்டுமல்ல, பெற்றோர்களையும் பார்த்து ''தடுக்க முடிந்தால் தடுத்துப் பாரு'' என்கிறது ஃபைவ் ஸ்டார் கம்பெனியின் விளம்பரம்.

உள்நாட்டுச் சிறுசிறு மிட்டாய் வியாபாரிகளை ஒழித்துக் கட்ட 'அய்யோ அதிலெல்லாம் பாக்டீரியாக்கள்' என விளம்பரம் காட்டி இந்த பன்னாட்டு வைரஸ்கள் ஏதோ பாக்டீரியாக்கள் மனிதர்களை வஞ்சம் தீர்க்க ஆறறிவோடு அலைவதுபோல் பாக்டீரியாக்களின் மீதும் பழி போடுகின்றனர்.

எக்ளேர்ஸ், ஜூஸ் புரூட், நேச்சுரோ, மன்ச், சீக்ரெட்ஸ், ஜெம்ஸ் - என ஏதோ வாயில் நுழையாத பெயர்களாக இருக்கிறதே என பார்க்கிறீர்களா? இல்லை, உங்கள் குழந்தைகளின் வாயில் நுழைப்பதற்காக மிட்டாய் மிராசுகள் சந்தையில் இறக்கி விட்டிருக்கும் மிட்டாய் ரகங்கள் இவை.

''இதெல்லாம் வசதி உள்ளவன் சாப்பிடுறது, ஏழை பாழைங்க எங்க வாங்கப் போறாங்க?'' என்று தர்க்கம் பேசிப் பயனில்லை. பணக்காரன் தங்கத்தில் மைனர் செயின் போட்டால் பார்த்து ஏங்குபவன் பதிலுக்கு கவரிங்கில் மாட்டிக் கொண்டு அலைவது போல ஃபைவ் ஸ்டார், பெப்சி சாக்லெட், அனிமல் சாக்லெட் என மேல்தட்டு சாக்லெட் ரகங்களுக்கான டூப்புகள் எல்லா கிராமங்களிலும் புகுந்து விளையாடுகின்றன.

உலகளவில் சந்தை பிடிக்கும் காட்பரீஸ், நெஸ்லே ரகங்களோ பத்துப் பட்டிகளுக்கும் நாட்டாண்மையாய் விளங்குகிறது. என்றைக்காவது ஒருநாள் இந்த ஃபைவ் ஸ்டாரைக் கடிக்க வேண்டும் என்ற வெறி, வாங்க முடியாத வர்க்கத்தின் பற்களில் சுரந்து கொண்டிருப்பதுதான் பன்னாட்டுக் கம்பெனிகளின் வெற்றி.

''என்ன சார் அதுக்காக பழைய டைப்பிலேயே திங்கணுமா? புது புது டேஸ்டா மிட்டாய் திங்கக் கூடாதா?'' என்று புதிய தொனியில் பேசும் யாரும் விதவிதமான உள்நாட்டு மிட்டாய் இனிப்புகளைத் தேடிப் போவதில்லை. தமது வர்க்க அந்தஸ்துக்கேற்ற மாதிரி ''இம் என்றால் காட்பரீஸ் வாசம் ஏனென்றால் சாக்கோஸ் வாசம்'' என்று ஒரே வகைச் சுவைகளுக்குள்தான் அடங்கிப் போகிறார்கள். ஈ மொய்க்கும் பண்டங்கள் என்று சாக்குச் சொல்லி வெளிநாட்டு மிட்டாய்களில் கரையும் உள்ளங்களே நீங்கள் மென்று சுவைக்கும் பன்னாட்டுக் கம்பெனிகளின் சரக்கில் பல உள்நாட்டு மிட்டாய் தயாரிப்பாளர்களின் சாவு உறைந்திருப்பது உங்களுக்குத் தெரியுமா? அந்த ''ஒன்றே சுவை'' என்பது பன்றிகளுக்கு மட்டுமே பழக்கம்.

இது ஏதோ வலிந்து சொல்வதாக உங்களுக்குப் பட்டால் கமர்கட் மிட்டாய்களை வைத்துக் கடை போட்டுக் காலந்தள்ள முடியாமல் தவிக்கும் இந்த உள்நாட்டு மிட்டாய் வியாபாரிகளின் கேள்விக்கு நீங்கள் பதில் சொல்லுங்கள்.

''மலத்த பளபளன்னு பேப்பர்ல மடிச்சு, வாயில நொழையாத ஓர் இங்கிலீசு பேர் வச்சு டி.வி.யில மட்டும் விளம்பரம் கொடுத்தாபோதும் அதையும் தேடி ஓடுவாங்க, அப்படி என்னதான் அதுல இருக்கோ!''

● சுடர்விழி

## சாக்லெட் பிரசாதம்

ஏற்கெனவே பக்திச் சந்தையைக் கலக்கிக் கொண்டிருக்கும் ''ஹரே ராமா ஹரே கிருஷ்ணா'' இயக்கம் இப்போது சாக்லெட் சந்தையையும் கலக்க ஆரம்பித்துவிட்டது. அமெரிக்காவில் 1,70,000 டாலர் மதிப்பில் புதிய தொழிற்சாலை தொடங்கி ''ராமா எனர்ஜி பார்'' என்ற புதிய ரகத்தைத் தயாரித்து இதற்கு தெய்வீக உணவு என்று விளம்பரம் கொடுத்துள்ளது. வால்னட் டேட், மெர்ரி மகடாமியா, கேஷு ஆல்மாண்ட், புரூட் அண்ட் நட், ஜடை பவர், பெர்பெக்ட் பம்ப்கின், முசிலி மிக்ஸ், ஹெல்த்தி ஹெவல் இவையெல்லாம் இராமாயணத்தில் வரும் ஸ்ரீராமபிரானின் திருப்பெயர்கள் என்று நினைத்து விடாதீர்கள். உலகச் சந்தைக்காக ''இஸ்கான்'' தயாரித்துள்ள எட்டு வகை சாக்லெட் பார்கள். இவைகளைத் தொழிற்சாலை வளாகத்திலுள்ள கிருஷ்ணன் கோவிலுக்கு முன் படையல் செய்து விட்டுத்தான் பேக்கிங் செய்கிறார்களாம். அடடா! இனி கோகுல கிருஷ்ணன் வாயில் வழிவது வெண்ணெய் என்று நினைத்து ஏமாந்து விடாதீர்கள். அது அமெரிக்க சாக்லெட்டின் ஆராவமுது!

படிப்பகம்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி.வல்லபேசன், 3, செகந்நாதபுரம் நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.

PUTHIYA KALACHARAM
(TAMIL MONTHLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS
FOR INDIA UNDER NO. 42847/87
Regd. No. TN/Chief PMG-303 / 2001
www.padippakam.com














ஐரோப்பாவில்
கடந்த
மூன்று மாதங்களாக நடந்த
முதலாளித்துவ எதிர்ப்பு -
உலகமயமாக்க எதிர்ப்புப்
போராட்டங்களின் போது
ஆர்ப்பாட்டக்காரர்கள் நடத்திய
வீதி நாடகங்கள்.

படிப்பகம்